# கிருஸ்ண மூர்த்தம்



60 ஆவது 'அகவை'
1962 – 2022

ஆசிரிய ஆலோசகர்

**திரு. க.கிருஸ்ணமூர்த்தி J.P**

கிளிநொச்சி – தெற்கு வலயம்

# மணிவிழா மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு/புனித பாத்திமா R.C.T.M.S
நூலகத்திற்கு அன்பளிப்பு

# கிருஷ்ணமூர்த்தம்

## மணிவிழா மலர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர் விபரம்


| | |
|---|---|
| மலரின் பெயர் | : 'கிருஸ்ண மூர்த்தம்' |
| இதழாசிரியர் | : திரு. க. செந்தூரன் |
| வெளியீடு | : மலர்க்குழு<br>தமிழாசிரியர் வட்டம்<br>கிளிநொச்சி மாவட்டம் |
| முதற்பதிப்பு | : 29.கார்த்திகை. 2022 |
| அச்சுப்பதிப்பு | : வேலன் பதிப்பகம்<br>கிளிநொச்சி |

| | |
|---|---|
| **Name of Magazine** | : 'KRISHNA MOORTHTHAM' |
| **Editors** | : MR. K. Shenthooran |
| **Publishers** | : Journal Committee<br>Tamil Teachers circle |
| **1st Edition** | : 29th November 2022 |
| **Printers** | : Velan Printers<br>kilinochchi |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!



சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

*- மகாகவி சுப்ரமணிய பாரதியார்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா பணிக்குழுவினர்

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | திரு. ப. பரணீதரன்<br>(தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர்<br>கிளிநொச்சி தெற்கு வலயம்) |
| தலைவர் | : | திருமதி. க.ஞானசேகர்<br>( ஆசிரிய ஆலோசகர், கிளிநொச்சி<br>வடக்கு வலயம்) |
| செயலாளர் | : | திருமதி. சி. ஜோதீஸ்வரன் |
| பொருளாளர் | : | திரு. பொ. சற்குணசீலன் |
| விழா உறுப்பினர்கள் | : | திருமதி செ.குமுதா<br>திருமதி. தி.ஶ்ரீவாணி<br>திருமதி. ஜென்சி குயிண்டா |
| மலராசிரியர் | : | திரு க. செந்தூரன் |
| மலர்க்குழுவினர் | : | திருமதி வி.ஜீவரஞ்சனி<br>திருமதி.யூடி சண்முகநாதன்<br>திரு. யோகேந்திரன்<br>திருமதி.க.சத்தியகலா<br>திரு.இ.ஜெயராஜ்<br>திரு.ஈ.மயூரன்<br>திரு.இ.திருச்செந்தூரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழாக் குழுவும் மலர்க் குழுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனின் வாழ்க்கை விபரக் குறிப்புகள்

| | |
|---|---|
| பிறப்பு | : 1962.10.20 |
| இடம் | : உருத்திரபுரம் |
| | தந்தை. கணபதிப்பிள்ளை |
| | தாயார் – சரஸ்வதி |
| குடும்பம் | : மனைவி – திருமதி. கி. இன்பரதி |
| | (ஆசிரியர் யா/கரம்பைக் குறிச்சி அ.த.க.பாடசாலை. |
| உடன் பிறப்புக்கள் | : ஆறு |
| | மூன்று அக்காமார், மூன்று தங்கைகள் |
| திருமணம் | : 1994.08.31 |
| பிள்ளைகள் | : கி. அபிநயன் *மொறட்டுவ பல்கலைக்கழகம்* ( Q.S) |
| | கி. இலக்கணன் யாழ் பல்கலைக்கழகம் கணிதத் துறை |

**ஆரம்பக் கல்வி / இடைநிலை கல்வி**

கிளி/இந்து மகா வித்தியாலயம் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி)

**உயர் தரம்**

கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்

**ஆசிரியப் பணியில்**

சேவை அடிப்படையில் 1991கிளிநொச்சி மகா வித்தியாலயம்

1992 – 1995 வரை கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா

**ஆசிரியப் பயிற்சி**

1998/1999. கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**அரச நியமனம் பரீட்சை மூலம்**

1996.11.01.கிளி/யூனியன் குளம் அ.த.க.பா.

2000 – 2003 வரை கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்

2004 – 2006 பிரதி அதிபர் கிளி /சிவபாத கலையகம்

2007 பதில் அதிபர் கிளி/கிளாலி றோ.க.த.க.பாடசாலை

2008.01.01.தொடக்கம் ஆசிரிய ஆலோசகர் – கிளிநொச்சி வலயம்

**சமூக ஈடுபாடு**

2002 சமாதான நீதிவான் நியமனம்

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்க உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

**இயல் 01**

ஆசியுரைகள்
வாழ்த்துரைகள்
வாழ்த்துக்கவிகள்

**இயல் 02**

அனுபவப் பகிர்வு

**இயல் 03**

கல்விசார் கட்டுரைகள்
மொழிசார் கட்டுரைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பமும், நட்பும்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்
காசி விசாலாட்சி அம்பிகா சமேத அமிர்தலிங்கேஸ்வரர் திருக்கோவில்
Kasi visaladchi ampigasametha Amirthalingeswarar Thirukkovil
நோர்வே Norway
T.P : 41289640
Email : nhmsabai@gmail.com
Organisasjonsnr. 923621482
Industriveien 1, 2020 Skedsmokorset.

14. 11. 2022

## ஆசியுரை

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

மணிவிழா நாயகன் கிருஸ்ணமூர்த்தி
மற்றவர் வாழ்வு சிறக்க ஒளி கிடைக்க
பெற்றவர் தந்த நாமம் கிருஷ்ணமூர்த்தி
பெற்றார் அன்றே கிருஷ்ணமூர்த்தி கீர்த்தி

இவர் பற்றி பேசாதார் இல்லை காரணம்
வித்தகன், உத்தமன் கண்ணியம் மிக்கவர்
விந்தையால் முயற்சியால் பெற்றார் இந்நிலை
இறை திருவருளும் இவரோடு என்றும்

புத்தகமும் இவருக்குப் புத்தகம் அல்ல– அது
ஒவ்வொன்றும் இவரைப் புத்திமான் ஆக்கிடப் புத்துயிர்
ஒவ்வாத விடயங்களைப் புறந்தள்ளித் தமிழை
தன் உயிர்மூச்சால் சுவாசித்த மூர்த்தி

இன்று மணிவிழாவில் பலஅடுக்குக் கீர்த்திகள்
என்றும் வெல்லும் இவர் முயற்சி
ஒன்றும் வஞ்சம் இல்லை இவர் மனதில்
நின்று போற்றும் கல்விச் சமூகம் இவர் சேவைபற்றி.

இன்று மணிவிழாக் காணும் கிருஷ்ணமூர்த்தி அவர்கட்கு எனது நல்லாசிகளும் வாழ்த்துகளும் உரித்தாகட்டும். என்றும் இறைவன் திருவருளும் கிடைத்திட வேண்டுகிறேன்.

ஓம் நமசிவாய.

சிவஸ்ரீ அமிர்த சிவலோகநாதக் குருக்கள் (ஜெயம் ஐயர்)
நோர்வே இந்து மகா சபை
(நோர்வே, இலங்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி



மானுட வாழ்வு என்பது இறைவனின் இலவசக்கொடை. அதனை அர்த்தத்துடன் வாழ்ந்து முடிப்பது எம் கடமையாகும். கடவுளின் பார்வையிற்பட்டு ஒரு மனிதனாக இவ்வுலகிற் பிறந்த சகோதரன் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இறைவனிடமிருந்து பெற்ற விலை மதிக்க முடியாத இந்த இலவசக் கொடையான வாழ்வை நல்லதொரு குடும்பச் சூழலை உருவாக்கி அன்பை, அறிவை அர்ப்பணிப்பு மிக்க மனப்பாங்குடைய குடும்பத்தின் ஊடாகப் பெற்று வளர்த்து கல்விச்சாலையில் அவ்வாறு ஆற்றல்கள் திறமைகளை வெளிக்கொணர்ந்து ஒரு நல்ல ஆசனாகத் தன் பணியை ஆரம்பித்தார்.

ஒரு மரத்தின் விதைகள் யாவும் ஒரே விதம்தான். ஆனால் அது எங்கு விழுகிறது அல்லது எங்கு விதைக்கப்படுகிறது என்பதைப் பொறுத்தே அதன் பயன்பாடு அமைகிறது. அத்தகைய ஒரு பார்வையைத் தான் சகோதரன் கிருஷ்ணமூர்த்தி எம்மீது காட்டினார்.

அவர் அதிகமாகச் சகோதரிகளுடன் வளர்ந்தவர். அதன் வெளிப்பாடாகவே அவரது மென்மையான போக்கு இருந்தது. அன்பான உரையாடல், கண்ணியமான நடத்தை, உதவும் மனநிலை உடையவராக நான் அவரைப் பாரக்கிறேன். 2008 ஆம் ஆண்டு 'யுத்த சூழல்' எம்மவர் பலரை வன்னி மண்ணில் நல்லுறவில் வளரச் செய்யச் சந்தர்ப்பம் வழங்கியது. யுத்தம் தந்த இந்த வாய்ப்பிற்காக இறைவனுக்கு நான் நன்றி கூறுகிறேன். அந்த நல்ல உறவுகளில் கிருஷ்ணமூர்த்தியும் ஒருவர். இடப்பெயர்வை முடித்து விட்டு மீள்குடியமர்வில் 2009 ஆம் ஆண்டு மார்கழியில் வந்து குடியமர்ந்து பூச்சியத்தில் இருந்து யாவும் ஆரம்பமான வேளை ஏழை மாணவச் செல்வங்கள் ஒன்றரையாண்டுகள் முற்றாக இழந்த கல்வியை ஈடு செய்ய வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் யாரை நாடுவது, யாரிடம் ஓடிச் செல்வது, யாரிடம் தேடி அலைவது? என்றபோது இவரின் சேவை மாணவச் செல்வங்களுக்குக் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டது. இங்குதான் நான் இவரை ஆழமாக அறிந்து கொண்டேன். நேரம் தவறாமை கடமையில் பிரமாணிக்கம் மாணவர்களது கல்வியில் மட்டுமல்ல அவர்களது ஒழுக்கத்திலும் ஆர்வம், தனிநபர் நலன்கள் அக்கறை, அவர்களுக்குரிய மரியாதை அளித்தல், மாணவர்களுக்கு நல்வழி காட்டல், இறைபக்தி, நட்புடன் பழகுதல், ஆபத்தில் உதவுதல் போன்ற நல்ல பல பண்புகளை அவரிடம் கண்டேன். வஞ்சகம் இன்றிப் பழகும் இவரது பண்பு என்னை எப்பொழுதும் அதிகம் கவர்ந்திருந்தது. எனது பாடசாலையின் க.பொ.த சாதாரண மாணவர்களின் தமிழ்ப் பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவுமட்டத்தின் உயர்விற்கும் இவரின் பங்களிப்பு அளப்பரியது. நன்றியுடன் அதனை நினைவு கூருகிறேன். எனக்கு திரு கிருஷ்ணமூர்த்தி எனும் ஒரு நபரின் தோற்றம் என் மனதில் வரும் போதெல்லாம் நன்றி என்ற ஒன்றும் அதனைத் தொடர்ந்து வரும் ஆடம்பரமற்ற எளிமையான வாழ்க்கை முறையும், பழகும் நேர்மையும், திறமும் ஒரு ஆசானுக்குரிய நடை, உடை, பேச்சு, பாவனை என்பன கண்முண் வந்து போகும். அவை அவருக்கே உரித்தான தனித்துவப் பண்புகளாகும். 30 ஆண்டுகளுக்கு மேலாக பின்நோக்கி இருந்த மண்ணில் கல்விப்பணி ஆற்றி ஓய்வு பெறக் காத்து நிற்கும் இவரது வாழ்வு சிறக்க இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். இவரது வாழ்வு தொடர்ந்தும் ஆசீர்வதிக்கப்பட்டதாகவும் இவரது குடும்பம் மரியாதை பெற்ற குடும்பமாகவும் விளங்க, எதிர்காலம் சிறக்க, வாழ்த்தி வணங்குகிறேன்.

*"இறையாசிகள்"*

*வண அருட்சகோதரி*
*சிஸ். அன்ரனிற்றா*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரின் இதயத்திலிருந்து.....

பணிகளுள் உயர்ந்த பணியாகக் கருதப்படுவது கல்விப் பணியாகும். இப்பணியிலே தன்னை 30 வருடங்களாக இணைத்துக்கொண்டு ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அர்ப்பணிப்புடன் பணியாற்றி, வாழ்நாளில் பெரும் பகுதியை கல்விப்பணிக்காகவே அர்ப்பணித்து, இவ் வருடத்தோடு அரச பணியிலிருந்து ஓய்வு பெறும் திரு.கணபதிப்பிள்ளை கிருஸ்ணமூர்த்தி அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கல்வித்துறையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாகப் பணியாற்றி கல்வியில், கலைகளில், இணைபாடவிதான செயற்பாடுகளில் ஒழுக்கத்தில் உயர்ந்த பல்லாயிரக்கணக்கான மாணவர்களைச் சமூகப் பெறுமானமுள்ள மாணவர்களாக உருவாக்கிய பெருமை திரு க.கிருஸ்ணமூர்த்தியையும் சாரும். அவர் பணிபுரிந்த, மேற்பார்வை செய்த பாடசாலைச் சமூகங்கள் அவரைக் காலமெல்லாம் வாழ்த்தும் வகையில் பணிபுரிந்திருப்பது போற்றுதற்குரியதாகும்.

கிளிநொச்சியிலே பிறந்து வளர்ந்து முப்பது வருடங்களுக்கு மேலாகக் கொடிய யுத்தத்தால் இன்னல்களை அனுபவித்த கிளிநொச்சி மாவட்டத்தில் 30 வருடங்கள் விருப்புடன் பணியாற்றியமை பாராட்டுதற்குரியதாகும். போர்க்காலத்தில் பாடசாலைகளும், மாணவர்களும் இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களுக்கு நகர்ந்த வேளைகளில் சோர்வடையாது, தனது கல்விப் பணியை நிறைவேற்றியிருக்கின்றார். கிளிநொச்சி மாவட்டத்தின் க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ்மொழியும் இலக்கியமும், விருப்பத்திற்குரிய தமிழ் இலக்கியநயம் போன்ற பாடங்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கச் செய்தமை இவரின் சாதனையாகும். க.பொ.த (உ/த), பெறுபேறுகள் இவருடைய வழிகாட்டலின் கீழ் உயர்வடைந்ததை அவதானித்துள்ளேன்.

தனது சேவைக்காலத்தின் நேரமுகாமைத்துவம், சேவையாற்றும் மனப்பாங்கு சக பணியாளர்களுடன் மரியாதையோடும், அக்கறையோடும் பழகும் திறன் என்பனவும் இவரின் தனிப்பட்ட நற்குணங்களாகும் ஓய்விற்குப் பின்னர் இவரது வாழ்க்கைக் காலம் மகிழ்வாக அமைந்திட எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

வாழ்க பல்லாண்டு!

*திரு. கி. கமலராஜன்.*
*வலயக் கல்விப் பணிப்பாளர்,*
*கிளிநொச்சி தெற்கு வலயம்,*
*கிளிநொச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

தன் மணிவிழாவைக் கடந்த ஐப்பசி 20இல் கண்டு 2022 ஆம் ஆண்டு மார்கழி மாதத்தின் இறுதியோடு பதவியிலிருந்து ஓய்வு பெறுகின்ற ஆசிரிய ஆலோசகர் திரு. கணபதிப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கான ஆசியுரையினை வழங்குவதனையிட்டுப் பெருமகிழ்வெய்துகிறேன்.

அப்பொழுது கிளிநொச்சி மாவட்டம் தெற்கு,வடக்கு எனப் பிரியவில்லை. ஒன்றாகவே இருந்தது. நான் வவுனியாவில் இருந்து என் கடமைகளை ஏற்பதற்காக இங்கு வந்த போது என்னை இரு கரம் கொண்டு வரவேற்று எனக்குக் கிளிநொச்சியின் கல்விச் சூழ்நிலை பற்றிப் பெரிதும் எடுத்து விளக்கியவர் கிருஷ்ணமூர்த்தி அவர்களே. அவரை அதற்கு முன்பாகப் பல வருடங்களாக நான் தெரிந்திருந்தாலும் ஒன்றாகப் பணி செய்து பயணித்தபோதே அவரின் ஆற்றலையும், தொழில் நேர்த்தியையும், நேர்மையினையும் அறிந்துகொண்டேன். இத்தகைய ஆளுமை மிக்க ஒருவருடன் இணைந்து பணியாற்றியது மனதிற்குப் பெரும் மகிழ்வைத் தருகிறது. இவரின் ஓய்வுக்காலம் சிறக்கவும், இனிவருங் காலங்கள் பயனுள்ள மதிப்பு மிக்கதாயும் அமைய எல்லாம் வல்ல இறைவனின் ஆசிகளை வேண்டி நிற்கிறேன்.

திரு. ப. பரணீதரண்
தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர்
கிளிநொச்சி தெற்கு வலயம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிருஸ்ண மூர்த்தம்

## இதழாசிரியர் உள்ளத்திலிருந்து....

## 'தமிழ்ச் சேவகன்' கிருஸ்ணமூர்த்தி

ஒருவனின் வாழ்வு அவன் வாழும்முறையால் தான் அர்த்தமுடையதாகிறது. வழுவிய வழியில் வாழ்பவர்க்கிங்கே வரலாறு இருப்பதில்லை. கால்போன போக்கில் வழி தவறிப்போவது போலல்லாமல் மனம் நினைந்து மானுடனாய்ப் பிறந்ததன் அர்த்தம் உணர்ந்து வாழும் வாழ்வே வாழ்வாகும். வாழும்வழி தெரியாமல் வாழ்வைத் தொலைத்துவிட்டு வாழ்பவர்கள் பலர். வரன்முறைகளோடு வாழ்ந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்கள் சிலர். அவ்வாறு வரன்முறைகளோடு வாழ்வாங்கு வாழும் ஒருவரே எங்கள் 'தமிழ்ச்சேவகன்' கிருஸ்ணமுர்த்தி. அவரின் சமகாலத்தவருக்கு அது தெரியும். அதனை நூல் வடிவிற் பதிவுசெய்து அடுத்த தலைமுறைக்கும் அவர் புகழை எடுத்துச்செல்வதே இந்நூலின் நோக்கமாகும். எத்தனையோ கல்விமான்கள் நம் கிளிநொச்சி மண்ணில் வீற்றிருக்க எனக்கு இவ்வளப்பரிய பணி கிடைத்தமை இறை செயலே...

*20. 10. 1962* ஆண்டு வயல்கள் சூழ் மருதநிலமாம் கிளிநொச்சி நகரின் உருத்திரபுரத்தில் கணபதிப்பிள்ளைக்கும், சரஸ்வதிக்கும் ஒரே மகனாகப் பிறந்தார். மூன்று அக்காமார்களுடனும் மூன்று தங்கைமார்களுடனும் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வியை கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயம் என்று முன்னர் அழைக்கப்பட்ட கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கற்றார். பின்னர் க.பொ.த சாதாரணதரத்தில் சித்திபெற்று கலைப்பிரிவில் உயர்தரக் கல்வியைக் கற்பதற்காகக் கிளிநொச்சி மத்திய கல்லூரி என்று முன்பு அழைக்கப்பட்ட கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றுத்தேறினார்.

சேவை அடிப்படையில் *1991*ஆம் ஆண்டு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்தவர் *1992* முதல் *1996* வரை கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையிலும் பின்னர் அரச நியமனப் பரீட்சை மூலம் *1996.11.01* கிளிநொச்சி யூனியன்குளம் அ.த.க பாடசாலையிலும் கடமையாற்றிக் கொண்டிருக்கும் போது கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலிருந்து பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான அழைப்பு வந்தது. அதனையேற்று *1998, 1999* ஆண்டுகள் என இரண்டாண்டுகள் பயிற்சியை மேற்கொண்டு பயிற்றப்பட்ட ஆசிரியராகத் தமிழ்ப் பாடத்தில் மிக்க புலமையோடு மீண்டும் கிளிநொச்சி நகரம் வந்தார். *2000* ஆண்டு முதல் *2003* வரை கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்திற் கடமையேற்றுப் பணியைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வையாக மேற்கொண்டார். இவரின் சேவையை உணர்ந்த இம்மண் 2002ஆம் ஆண்டு இவருக்குச் சமூக அக்கறையின் பொருட்டு **சமாதான நீதவான்** பட்டமும் கொடுத்து இவரை அழகு பார்த்தது.

2004ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை கிளிநொச்சி சிவபாதகலையகப் பாடசாலையில், பிரதி அதிபராகவும் கடமையாற்றிப் பின் கிளிநொச்சி கிளாலி றோ.க.த பாடசாலையில் பதில் அதிபராகவும் கடமையாற்றினார். 2008.01.01 தொடக்கம் தனது பணி ஓய்வு வரை ஆசிரிய ஆலோசகராகவே பெரும் கல்விச் சேவையை நம் மண்ணுக்கும் மாவட்டத்திற்கும் ஆற்றி ஓய்வு பெறவுள்ள இவர் தமிழ்த்தினப் போட்டிகள் மற்றும் மாவட்ட, மாகாணக் கலை நிகழ்வுகளின் முக்கிய பொறுப்புக்களில் இருந்தும் தொண்டாற்றியுள்ளார். இலங்கைப் பரீட்சைப் பிரிவிலும் வினாத்தாள் மதிப்பீட்டுப் பணியிலும் நிறைந்த அனுபவம் உள்ளவராவார். இவரின் சேவைகளை என்றும் எம் மண் மறக்காது என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

31.08.1994ல் ஆசிரியையான இன்பரதி எனும் குணவாட்டியைக் கரம்பற்றி இல்லறச் சோலையில் திளைத்தார். இதன் இன்பப் பயனாக இவர்களுக்கு அபிநயன், இலக்கணன் எனும் இரு புதல்வர்கள் வந்து வாய்த்தனர். ஆண்மக்களுக்கு நல்ல தந்தையாகவிருந்து பொறியியற் பீடம் (மொறட்டுவை), கணிதத்துறை (யாழ்) எனச் சமூகத்தில் உயர் நிலைக்கும் ஏற்றிச் சென்றுள்ளார். எமது கிளிநொச்சி வலயத்தின் (தற்போதைய தெற்கு வலயம்) ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றி எதிர்வரும் 31. 12. 2022ஆம் திகதியோடு பணி ஓய்வு பெறும் **திரு. கணபதிப்பிள்ளை கிருஸ்ணமூர்த்தி** அவர்கள் இதுவரை எம் கிளிநொச்சி மண்ணுக்காக ஆற்றிய சேவைக்காக **15.10.2022** அன்று **யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் கி.விசாகரூபன்** அவர்களால் பொன்னாடை போர்த்தப்பட்டு **"தமிழ்ச்சேவகன்"** விருதையும் பெற்றுக்கொண்டார். இத்தகைய சான்றோனைக் கௌரவித்து இம் மணிவிழா மலரான 'கிருஸ்ணமூர்த்தத்தை' வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பல மாதங்களாக வளர்க்கப்பட்டு அரும்பாகி மொட்டாகிப் போதாகி இப்பொழுது மலராக உங்கள் கைகளில் மலர்ந்திருக்கும் இக்கிருஸ்ண மூர்த்தம் பலரது எழுத்து எனும் இதழ்களால் முழுமைபெற்றிருக்கிறது. நாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க உரிய நேரத்தில் தமது ஆக்கங்களை வழங்கி இம்மலரை அணி செய்த அனைத்து உள்ளங்களையும் வாழ்த்தியும் நன்றிகூறியும் அச்சுவாகனமேற்றி அரணாய் நின்ற 'வேழன்' பதிப்பகத்தாருக்கும் என் நன்றிகள் பற்பல.

*மலராசிரியர்,*
***29.11.2022***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச் செய்தி

எனது நண்பனும் கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ் பாடத்தின் ஆசிரியரும் பின்னர் ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றி மணி விழாக் காணும் எனது பாடசாலை நண்பனுமாகிய கணபதிப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி அவர்களது மணிவிழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

கிளிநொச்சியில் எங்கள் நட்பு பிறந்தது, மலர்ந்தது, எழுந்தது, வளர்ந்தது. அந்த நாட்களில் வெள்ளைச் சேட்டுகளோடும், கட்டை மற்றும் நீளக் காற்சட்டைகளோடும் பழகித் திரிந்த நாட்களை நினைத்துப் பார்க்கின்றேன். துன்பங்களை மறந்து கல்வியை நினைத்துப் பாடங்கள் பயின்றதை இப்பொழுது நினைத்தும் மீட்டியும் பார்க்கிறேன். ஆஹா! எவ்வளவு அதி அற்புதமான நிமிடங்கள், கணங்கள், நேரங்கள். எல்லாமே மிக வேகமாக மாறிக் கொண்டிருக்கின்ற இந்த உலகிலே நாட்டுச் சூழலாலும் அவரவர் குடும்பச் சூழ்நிலைகளாலும் பலர் பல இடங்களுக்குச் சிதறிப் போனோம் நான் என் நண்பனை விட்டும் என் தாய் நாட்டை விட்டும் கனடா நாட்டில் குடியேறிவிட்டேன். நண்பன் கிருஷ்ணமூர்த்தியின் வளர்ச்சியைக் கடிதங்கள் ஊடாகவும் தொலைபேசி ஊடாகவும் தற்பொழுது சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் அறிந்துவருகிறேன். தமிழ் மொழியின் மீதும் தமிழ்ப் பாடத்தின் மீதும் அவர் வைத்த பற்றை நான் அவதானிக்கின்றேன், பெருமை அடைகிறேன். அவருடைய "கிருஷ்ணமூர்த்தம்" என்ற இந்த இதழுக்கு என்னாலும் ஓர் ஆசிச்செய்தியை வழங்க முடிகிறது என்பதை நினைக்கின்ற போது பெரு மகிழ்ச்சி அடைகிறேன். ஓய்வுக் காலத்தின் பின்னர் என் நண்பனுடைய வாழ்வு மலர வாழ்த்துகிறேன்.

பரமசாமி சசிகரன்
கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உள்ளம் பிரியா நட்பு

1979 ஆம் ஆண்டு காலப்பகுதி, வயல்களும் மருத நிலங்களும் வண்ணப் பூவரசுகளும் வன்னிப் பெருங்நிலப் பரப்பை முழு அழகு செய்து கொண்டிருந்த காலம் அது. பசுமை மிக்க காலம். என் நெஞ்சறைகள் நித்திலம் போல் ஜொலி ஜொலித்த வசந்த காலம். என் பள்ளிக் காலம் பொன்போல் ஒளிர்ந்த பதின்ம வயதுப் பால்ய காலம். இளம் வயதின் நினைவுகளை நினைத்துப் பார்க்கிறேன். கரடிப்போக்கில் அமைந்திருந்த விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் பிரத்தியேக வகுப்புக்காக மரியதாஸ் சேரிடம் செல்கிறேன். முதல் முதலாக க.பொ.த சாதாரண தரத்தில் நான் கிருஷ்ணமூர்த்தி என்னும் ஒரு நண்பனை சந்திக்கின்றேன். என் நட்புக்கு இலக்கணமாவான் என்று அப்போது நான் நினைத்திருக்கவில்லை. கண்டதும் காதல் என்று சொல்வதுண்டு கண்டதும் நட்பென்று சொன்னதில்லை. ஆனால் நான் சொல்கிறேன். எங்களுக்குள்ளே ஒரு நட்பு கண்டவுடனேயே வேர் ஊன்றி முளை விடத் தொடங்கிவிட்டது. இன்பத்திலும் துன்பத்திலும் எனக்கு அவனும் அவனுக்கு நானுமாக இன்று வரை இணைந்திருக்க அன்றைய நாள் தான் விதை போட்டது. இருவரும் படித்தோம் வாழ்க்கையில் எப்படியாவது முன்னேறி விட வேண்டும் என்று துடித்தோம். கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் இருவரும் படிப்புக்காகவும் ஒரு அரச உத்தியோகத்தில் சேர்ந்து விட வேண்டும் என்ற துடிப்புக்காகவும் சைக்கிள் மிதித்தோம். கனவுகள் கண்டோம் பெரிய பெரிய கனவுகளை எம் நெஞ்சில் சுமந்தோம். அதனையே இரு கண்களிலும் கனவாகக் கொண்டிருந்தோம்.

இலங்கை அரசு ஆசிரியர் சேவைக்கு உள்வாங்க வர்த்தமானியை அறிவித்தது. அறக்கப் பறக்க விண்ணப்பங்களை நிரப்பி அனுப்பினோம். நண்பன் கிருஷ்ணமூர்த்தி கண்டி மாவட்டத்தில் ஆசிரியர் பரீட்சை எழுத, நானோ கிளிநொச்சி எனும் என் மாவட்டத்திலேயே பரீட்சையை எழுதினேன். பரீட்சைப் பெறுபேறுகள் வந்தன. ஆனால் அது என் நண்பனுக்கு தலையில் இடியாய் வந்து விழுந்தது. என் வெற்றியைக் கூட என்னால் கொண்டாட முடியவில்லை. காரணம், அவரவர் மாவட்டத்தில் பரீட்சை எழுதியவர்களுக்கே வேலை வாய்ப்பு என்று அரசாங்கம் சொன்னதும் நண்பனின் வேலை எட்டாக்கனியாயிற்று. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவனது வறுமை குடும்ப நிலையை என்னைப்போல் அறிந்தவர் யாருண்டு?. கடவுள் எங்கள் நட்பை அளவிட முனைந்த ஒரு நாளாக அதனைக் கருதினோம். நான் இன்னும் இன்னும் ஊக்கமளித்தேன். எனக்கு தருமபுரம் மத்திய கல்லூரி என்று இன்று அழைக்கப்படும் தருமபுரம் மகா வித்தியாலயம் ஆசிரியர் சேவைக்கான கதவைத் திறந்தது. ஒரு வருடம் கல்வி கற்பித்ததும் எனக்கு கோப்பாய் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாலையிலிருந்து ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அழைப்புக் கிடைத்தது. சென்றேன் ஆனால் நண்பன் சக ஆசிரியனாய் இல்லாததால் கலாசாலை கமழவில்லை. சுகம் அளிக்கவில்லை. இடையிலேயே கலாசாலைக்கு முழுக்குப் போட்டுவிட்டேன். நண்பனை எப்படியாயினும் ஆசிரியனாக்கிவிட வேண்டும் என்று என்னாலான பெரும் முயற்சிகளை எடுத்தேன். சில வருடங்கள் கழித்து என் நண்பனுக்கும் ஆசிரியர் நியமனத்திற்கான அழைப்பு வந்தது. பின்னாளில் அவன் ஆசிரியத் தொழிலை நேசித்து நேசித்துச் செய்யத் தொடங்கியதை நான் இரசிக்கத் தொடங்கினேன்.

1990கள் ரணப்பட்ட காலத்துக்குள் எங்களை இழுத்துச் சென்றது. இந்திய இராணுவமும் இலங்கை இராணுவமும் எங்கள் பெரும் பொழுதினைத் துன்பகரமாக மாற்றியமைத்தன. யுத்தக் கெடுபிடி, இலங்கை இராணுவக் கெடுபிடி என்று கெடுபிடிகளுக்கு நடுவே எங்கள் பட்டப் படிப்புகளைத் தொடங்கினோம். அது அந்த யுத்தக் களத்தினுள்ளும் சட்டென மலரும் தாமரைப் பூப்போல அவ்வப்போது குளிர்ச்சியைத் தந்தது. பல துன்பங்களுக்கு அடிக்கடி ஆளானோம். G.A.Q பரீட்சையை 8 மாணவிகளோடு நாமுமாக எழுதுவதற்கு யாழ்ப்பாணத்திற்கு துவிச் சக்கர வண்டியில் வவுனியாக ஈறாகச் சென்று அங்கு கைக்கிள்களை நிறுத்திவிட்டுச் சென்றோம். ஒரு மாத காலப் பரீட்சை பல சவால்களை எமக்குப் பழக்கப்படுத்தியது. காரைநகரைச் சேர்ந்த கருங்கூந்தற் பேரழகிகள் எங்கள் நண்பிகளாயினர். அங்கு தான் நான் என் வருங்கால மனைவியாக திருச்செல்வியைக் கண்டேன். அவளைத்தான் மணம்முடிப்பேன் என்று இறைவன் எனக்கு அழுத்திச் சொல்லத் தொடங்கினார். என் காதல் நிமிடங்கள் அவளால் அழகானது. பரீட்சைக்காகச் சைக்கிள் மிதித்த காலம் போய்க் காதலுக்காகச் சைக்கிள் மிதிப்பதைப் பாக்கியமாகக் கருதினேன். காதல் என்றால் நண்பர் துணையில்லாமலா? காதலுக்கு என் நண்பன் கிருஸ்ணன் துணை எப்போதும் இருந்தது. திருச்செல்வியோடு நான் நம் மனங்களை மாற்ற அவனே முழு மூச்சாய்த் துணை நின்றான். அந்தக் காலத்துக் காதல் தான் எத்துணை அழகு. காதலும் நட்பும் இளமையின் இரு கண்களென்பேன். பரிசுப்பொருள்களை அவனிடம் கொடுத்து அவளிடம் சேர்ப்பிக்கும் அந்தப் பெருங்கணம் எத்துணை மகிழ்ச்சியானது. அவன் கொண்டுவரும் பதிலுக்காகத் தவமிருப்பது. அடடா..! அந்தக் காதலின் விளைச்சல் தானே என் இரு புதல்வியர்கள் சர்மி, சியானி. இன்று இரண்டு பெண் குழந்தைகள் எமக்கு இருப்பினும் அந்தக் காலத்தில் கால்கள் பெடல்கள் மிதித்து உண்மையாகக் காதலித்தது போன்ற ஒரு வசந்த காலம் தான் இனி வாய்க்குமா? காதலைப் பற்றியும் என் காதல் பற்றியும் பேசிக்கொண்டெ இருக்க ஒரு நண்பன் வாய்த்திருந்தான் என்பது எனக்குக் கூடுதல் மகிழ்ச்சி.

பரீட்சைகள் எழுதுவதற்காக கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு என்று அலைந்து திரிந்தோம். கொழும்புக்குப் பயந்து பயந்து செல்லத் தொடங்கினோம். அப்போதைய ஒட்டுக் குழுக்களால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அவஸ்தைப்பட்டோம். நண்பர்கள் இருக்கும் தைரியத்தில் பல எல்லைகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிந்து கடந்தோம். அதில் வெற்றியும் பெற்றோம். இத்தகைய துன்பங்களுக்குப் பயனாய் நாங்கள் பரீட்சையில் சித்தி என்ற செய்தி எங்கள் உள்ளங்களைக் குளிர்வித்தன. எத்தனை துன்பங்கள் எத்தனை கஷ்டங்களை அனுபவித்தோம் மீண்டும் ஒரு அரச ஊழியராக ஊரில் பெருமையோடு உலாவித்திரிந்தோம். மனது இரம்மியமாகப் பறக்கும் பொழுதெல்லாம் எங்கள் கைக்கிள்கள் பரந்தன்- முரசு மோட்டை மண்ணில் கால் பதித்து வயல் நிலங்களை ஆளத் தொடங்கும். பச்சைப் பசேலென்ற காணிகளும் வெள்ளந்தி மனிதர்களும் எங்களூரின் அடையாளங்கள் என்பேன். மழைக்காலக் காளான் போன்று வளர்ந்ததல்ல எங்கள் நட்பு அது மண்போன்றது. மலையாய்ப் பிறந்து மண்ணில் எல்லையற்றுப் பரந்து விரிந்தது. குமரபுரம் என்றால் சசிகரன் என்றும் ஜெயந்திநகர் என்றால் கிருஸ்ணமூர்த்தி என்றும் சொல்லும் அளவிற்கு இரு ஊர்களையும் இணைத்து நட்புக் கொண்டோம். எங்கள் நிலத்தைப் போலவே எங்கள் நட்பும் பரந்து விரிந்திருந்தது.

கந்த சஷ்டி விரத நாட்கள் என்றால் சூரன் போருக்காகக் காத்துக்கிடந்தோம். ஜெயந்திநகரில் மீனாட்சி அம்மன் கோவில் திருவிழாவுக்காக நான் அங்கு செல்வதும் அப்பப்பா எத்தனை நினைவுகள். எங்கள் மனச்சிறையில் இன்றும் விடுதலை பெறாது பசுமையாக எத்தனை நினைவுகள் கொட்டிக்கிடக்கின்றன. பொருளாதாரத்தைக் கண்டு துன்பப்பட்டதில்லை. ஆனாலும் கிடைத்ததை உண்டு மகிழ்ந்தோம். திருமணம் முடித்து நண்பர்களோடும் ஆசிரியத் தொழிலோடும் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்த எனக்கு நாட்டுச் சூழலால் வெளிநாடு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. நான் வெளிநாட்டுக்குச் செல்வதை விட என் நண்பனைப் பிரியவேண்டி வருமேயென்றே கவலை கொண்டேன். "டேய், நீ வெளிநாட்டுக்குப் போ அப்போது தான் எனக்கொரு துன்பமென்றாலும் நீ தூக்கி நிறுத்துவாய்" என்று என் பயணத்திற்குப் பச்சைக் கொடி காட்டினான். அவன் கைராசிக் காரன் என் காதலையும் சேர்த்து வைத்த கண்ணன் அல்லவா? என் நண்பனைப் பிரிய வேண்டி வந்தது. நாற்பத்து மூன்றாண்டு கால நட்பு இப்போதும் மலர்ந்து கொண்டுதானிருக்கிறது. ஊரில் அவனது புகழையும் செல்வாக்கையும் ஆசிரியத் தொழிலால் அவன் அடைந்த பெருமைகளையும் இன்று சமூக வலைத்தளங்களால் காணக்கிடைக்கின்ற போது அன்று சைக்கிள் மிதித்தது வீண் போகவில்லை என்றே மனது விம்மி விம்மி ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறது. வாழ்க நண்பா..! உன் மணி விழாவும் உன் மூர்த்தமும் என்றென்றும் வாழட்டும்.

**"செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்**
**வினைக்கரிய யாவுள காப்பு"**

*பரமசாமி சசிகரன்*
*கனடா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் வணக்கப் பாடல்களுள் மனோன்மணியம் சுந்தரனாரின் வகிபாகம்



தமிழை வாழ்த்திப் பாடுவதில் பாவலர்கள் இன்பங்கொள்வர். சங்க காலம் முதல் இக்காலம் வரை இவ்வழக்குத் தொடர்ந்த வண்ணம் உள்ளது. சங்கப் புலவர்கள் தம் தமிழ்க்காதலைப் பாடல்கள் ஊடாக வெளிக்காட்டினர். கடைச்சங்கப் புலவரான நக்கீரர், தமிழ்மொழியை இகழ்ந்தும், வடமொழியைப் புகழ்ந்தும் பேசிய குயக்கொண்டான் என்பவனை வசைபாடி மாளச் செய்தார் என்றும், பின்னர் பிறபுலவர்கள் வேண்டிக்கொள்ள அவனை மீண்டும் உயிர்பெறச் செய்தார் என்றும் ஒரு கதையுண்டு.

*"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"*

என்பது திருமூலர் வாக்கு. மாணிக்கவாசகர், சம்பந்தர், சுந்தரர், கம்பர் என நற்றமிழ்க்கவி படைத்தோர் பலரும் தமிழின் சிறப்பைப் போற்றித் தம்பாடல்களிற் பதிவுசெய்துள்ளனர். திருமழிசையாழ்வார் திருவெஃகாவில் பள்ளி கொண்டிருந்த திருமாலை எழுப்பித் தமிழிசையைக் கேட்பதற்காகத் தன்பின்னே வரச் செய்தார் என்றும் ஒரு கதையுண்டு. இது தமிழுக்கு இறைவனும் தலைசாய்ப்பான் என்பதைச் சுட்டுகின்றது.

*"இருந்தமிழே உன்னால் இருந்தேன், இமையோர் விருந்து அமிழ்தம்*
*என்றாலும் வேண்டேன்"*

என்பது தமிழ் விடுதூது காட்டும் தலைவி ஒருத்தியின் கூற்று ஆகும். இது தமிழின் இனிமையைச் சுட்டுகின்றது.

வில்லிபுத்தூர் ஆழ்வார் எழுதிய வில்லிபாரதச் சிறப்புப் பாயிரத்தில் மேற்படியார் குமாரர் வரந்தருவார் தமிழ்மொழிக்கு வாழ்த்துக் கூறுகின்றார்

*பொருப்பிலே பிறந்து தென்னன்*
*புகழிலே கிடந்து சங்கத்(து)*
*இருப்பிலே இருந்து வைகை*
*ஏட்டிலே தவழ்ந்த பேதை*
*நெருப்பிலே நின்று கற்றோர்*
*நினைவிலே நடந்தோ ரேன*
*மருப்பிலே பயின்ற பாவை*
*மருங்கிலே வளரு கின்றாள்*

என்பது அப்பாடலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று தமிழ்வாழ்த்துப் பாடல்கள் என்ற நிலையில் பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் நீராரும் கடலுடுத்த... எனத் தொடங்கும் பாடலும் பாரதியாரின் "வாழ்க நிரந்தரம்.." எனத் தொடங்கும் பாடலுமே பெரும்பாலானவர்களால் படிக்கப்படுகின்றன.

**பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ் வாழ்த்து**

பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை, மகாகவி பாரதியாரின் காலத்திற்கு முற்பட்டவர். கேரளாவின் திருவனந்தபுரத்திற்கு அருகில் உள்ள ஆலப்புழை என்ற ஊரில் பிறந்தவர். இவரது தந்தை பெருமாள்பிள்ளை. தாய் மாடத்தி அம்மாள். மனைவி சிவகாமி அம்மாள். இவர்கள் பிள்ளை என்ற வம்சத்தைச் சேர்ந்தவர்கள். 1855இல் பிறந்த இவர் 26.04.1897இல் தனது 42 ஆவது வயதில் அமரத்துவமுற்றார்.

லிட்டன் பிரபு என்ற ஆங்கிலேயர் எழுதிய இரகசியப்பாதை என்ற ஆங்கிலக் கதையைத் தழுவி மனோன்மணீயம் என்ற செய்யுள் நாடக நூலை 1891 இல் பேராசிரியர் எழுதினார். இந்நாடக நூலில் பாயிரமாக அமைந்த பாடலில் தமிழின் பெருமையை எடுத்தாளும் வகையில் தமிழ்த்தெய்வ வணக்கத்தை அமைத்தார்.

மனோன்மணீயம் நூலின் பாயிரத்தில் தமிழ்த்தெய்வ வணக்கம் 49 அடிகளில் அமைந்துள்ளது. அதில் முதல் 12 அடிகளையே தமிழ்த்தெய்வ வணக்கமாக இன்று இசைக்கும் வழக்கத்தை நாம் கொண்டுள்ளோம்.

***நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்(கு) எழிலொழுகும்***
***சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்***
***தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே***
***தெக்கணமும் அதில்சிறந்த திராவிடநல் திருநாடும்***
***அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற***
***எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே***

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினும்ஓர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத்(து) உதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்(கு) அழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே

என்பதே அப்பாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழைத் தெய்வப்பெண்ணாக உருவகித்துப் பாடியமை இப்பாடலின் சிறப்பாகும். நீர் நிறைந்த கடலை நிலப்பெண் ஆடையாக உடுத்தியிருக்கிறாள். இம்மண்மகளின் சிறப்பான வதனம் எனத் திகழ்வது பாரதநாடு (இது இலங்கையையும் சேர்த்தே குறிக்கின்றது). இது வடக்கே இமயம் முதல் தெற்கே குமரி வரை பரந்த நிலப்பிரதேசத்தை உள்ளடக்கியது. நிலப்பெண்ணின் முகத்தில் நெற்றியாக விளங்குவது தெற்கு நிலம் (தெக்கணம்). அதில் உள்ள வாசனை மிக்க திலகமாகத் திராவிட நாடு காணப்படுகின்றது. அங்கு எத்திசையும் புகழ் மணக்கும் வண்ணமாகத் தமிழ் என்னும் தெய்வப் பெண் வீற்றிருக்கின்றாள்.

உலகும் உடல்களும் மாற்றங்களைக் காண்கின்றன. (உயிர் - உடலுக்கு ஆகுபெயர்) படைத்தல், காத்தல், அழித்தல் என்ற தொழில்களுக்கு இவை உட்பட்டிருக்கின்றன. ஆனால் ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளோ என்றும் நித்தியமானது. அழிவில்லாதது. அது என்றும் இருந்தது போலவே இருக்கின்றது. அப்பரம்பொருள் போலவே தமிழும் அழிவில்லாததாக விளங்குகின்றது. திராவிட மொழிகளான கன்னடம், துளு, மலையாளம், முதலியவை தமிழில் இருந்தே உதித்தனவாகும். மூலத்திராவிட மொழியான தமிழில் இருந்து பல்லாயிரம் சொற்களும் மொழிகளும் தோன்றினாலும் தமிழ் என்றும் நித்தியமானதாகவே விளங்குகின்றது. வடமொழியாகிய சமஸ்கிருதம் இன்று வழக்கு ஒழிந்து சிதைந்துள்ளது. ஆனால் அவ்வாறு சிதையாமல் விளங்கும் தமிழின் இளமைத்தன்மையை வியந்து தன்செயல் மறந்து வாழ்த்துவதாகப் பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.

மேற்படி பாடல் குறித்துப் பல விமர்சனங்களும் நம்மத்தியில் உள்ளன.

*ஆரியம்போல் உலகவழக்(கு) அழிந்தொழிந்து சிதையாவுன்*
*சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே*

தமிழின் இளமையையும் வளங்குன்றாத வனப்பையும் இவ்வடிகள் எடுத்துக் காட்டினாலும் வடமொழிப் பிரியர்களால் இவ்வடிகள் வெறுக்கப்படுகின்றன. மங்கல வாழ்த்துப் பாடலொன்றில் அமங்கலமாக அழிந்தொழிந்து சிதையாமல்... என இடம்பெற்றிருப்பது ஆரோக்கிய மானதல்ல என அவர்கள் கருதுகின்றனர்.

செம்மொழி என்ற உயர்தகுதிப்பாட்டிற்குரிய மொழிகளாகச் சில மொழிகளே உள்ளன. கிரேக்கம், இலத்தீன், கீபுறு, , சீனம், சமஸ்கிருதம், தமிழ் என்பனவே அவையாகும். (பாரசீகம், அரபு என்பவற்றையும் சிலர் குறிப்பிடுகின்றனர்.) பண்டைக்காலம் தொடக்கம் நீண்டகாலப் பயன்பாடுடையதும் நெடிய இலக்கியப் பாரம்பரியம் உடையதும் வேறெந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியில் இருந்து கிளைத்தெழாததுமான மொழியே செம்மொழி எனக் கொள்ளப்படுகின்றது. இவற்றுள் தமிழும் சீனமுமே இன்றும் வாழும் செம்மொழிகள். வடமொழி எனக் கொள்ளப்படும் சமஸ்கிருத மொழி மறைமொழி என மறைத்துவைக்கப்பட்ட காரணத்தால் - குறித்த குழுமத்திற்குரிய மொழியாகப் பயன்படுத்தப்பட்ட காரணத்தால் அதன்பயன்பாட்டுத் தன்மை இன்று அருகிவிட்டது. எனவே பேராசிரியர் சுந்தரனார் குறிப்பிட்டதில் தவறு காணமுடியாது.

உயர்ந்த உவமைகளைக் கொண்டுள்ளமையாலும் இப்பாடலை உன்னத இடத்தில் வைத்துப் போற்ற முடிகின்றது.

**ஏனைய பாவலர்களின் தமிழ்வணக்கம்**

தமிழ்மொழி வாழ்த்து என்ற வகையில் பாரதியாரின் "வாழ்க நிரந்தரம்... என்ற பாடலும் பிரபலம் பெற்றுத் திகழ்கின்றது. எமது யாழ்ப்பாண மண்ணில் பெரும்பாலான இடங்களில் இப்பாடலையே பாடுகின்றனர். இது எட்டு அடிகளைக் கொண்ட பாடலாகும்.

*வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி*
*வாழிய வாழிய வே!*
*வானமளந்த தனைத்தும் அளந்திடும்*
*வண்மொழி வாழிய வே!*
*ஏழ்கடல் வைப்பினும் தண்மணம் வீசி*
*இசைகொண்டு வாழிய வே!*
*எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி*
*என்றென்றும் வாழிய வே!*
*தொல்லை வினைதரு தொல்லை யகன்று*
*சுடர்க தமிழ்நா டே!*
*வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி*
*வாழ்க தமிழ்மொழி யே!*
*வானம் அறிந்த தனைத்தும் அறிந்து*
*வளர்மொழி வாழிய வே!*

பாரதியாரின் கவித்துவமும் அவரது ஏனைய பாடல்களுடாக அவர் பெற்ற கணிப்பும் இப்பாடலின் பிரபலத்திற்குக் காரணமாகும். சுடர்க தமிழ்நாடே! என அவர் குறித்தமையை எம்நாட்டிற்கெனவும் கொள்ளலாம்.

தமிழ்வாழ்த்துப் பாடல்களுள் சுத்தானந்தபாரதியாரின் பாடலும் ஓரளவுக்குப் பிரபலமானது. தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் 1897 இல் பிறந்தவர் இவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது பாடல் வருமாறு.

காதொளிரும் குண்டலமும் கைக்குவளை
யாபதியும் கருணை மார்பின்
மீதொளிர்சிந் தாமணியும் மெல்லிடையில்
மேகலையும் சிலம்பார் இன்பப்
போதொளிர் பூந்தாமரையும் பொன்முடிசூ
ளாமணியும் பொலியச் சூடி
நீதியளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்
தாங்குதமிழ் நீடு வாழ்க

தமிழின் பெருமைக்குக் காரணமான நூல்களை எடுத்தாள்வதாக இப்பாடல் உள்ளது.

இன்னும் பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், கலைஞர் கருணாநிதி எனப் பலர் தமிழை வாழ்த்திப் பாடல் புனைந்துள்ளனர். ஈழ நாட்டுக் கவிஞர்கள் சிலரும் இத்துறையில் முயற்சித்துள்ளனர்.

**நிறைவுரை**

1970 ஆம் ஆண்டு முதல் தமிழக அரச விழாக்களிற் பாடப்படும் அங்கீகரிக்கப்பட்ட பாடலாகவும் இலங்கை அரச தமிழ்மொழித்தின விழாக்களில் பாடப்படும் பாடலாகவும் நீராரும் கடலுடுத்த எனத் தொடங்கும் மனோன்மணீயம் சுந்தரனாரின் பாடலே விளங்குகின்றது.

நீராரும் கடலுடுத்த... என எல்லை குறிக்கப்பட்ட தமிழ் இன்று எல்லை காணமுடியாத அளவுக்குப் பரந்துவிரிந்து விட்டதால் புலம்பெயர் தேசத்தவர் இப்பாடலை விரும்பிப்படிப்பதில்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். ஆயினும் அற்புதமான உவமைச் சிறப்பைக் கொண்டு தெய்வீகத் தன்மையுடன் தமிழை ஒப்பீடு செய்யும் பாடலாக இப்பாடல் விளங்குவதால் இதன் சிறப்பு இன்றும் உயர் நிலையிலேயே இருக்கின்றது.

-ச.லலீசன்,
**M.A.(தமிழ்), M.Ed., SLTES - II**
பிரதி முதல்வர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் ஆசிரியர் கல்வியும் ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழக எண்ணக்கரு உருவாக்கமும்

இலங்கையின் மனிதவள விருத்தியில் முதன்மையான பொறுப்பு கல்வியில் தங்கியுள்ளது. மனிதவள மேம்பாடு என்பது ஒர் உயிரி கருவுறும் நிலை தொடக்கம் ஆரம்பமாகின்றது. கல்வி என்பது மனிதவள விருத்தி நிலையில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிகழ்வதனைக் காணலாம். இதனை ஆயுள் நீடித்த கல்வி எனச் சுருக்கமாகக் கூற முடியும். இன்று கல்வித்துறையில் மிகவும் முதன்மையான நிலை கொண்டதாக உணரப்படுவதும் ஆசிரியத் தொழிலாகும். ஆசிரியர் கல்வி வெறும் பணிப் பயிற்சியன்று. ஒர் ஆசிரியர் தனது பொறுப்புகளையும் கடமைகளையும் மிகச் சிறப்பாக நிறைவேற்றத் தேவையான மனப்பான்மை, பண்புநலன்கள் அறிவு, திறன்கள், ஆற்றல் ஆகியவற்றைப் பெற வழிவகுப்பதே ஆசிரியர் கல்வி ஆகும். ஆசிரியர் கல்வி என்பது ஆசிரியரின் மனப்பான்மைகள் (Attitudes), பழக்க வழக்கங்கள், நுட்பதிட்பங்கள், ஆளுமைப் பண்புகள், கண்ணியம் போன்றவற்றை வடிவமைக்கும் இயல்பான அணுகுமுறைகள் ஆகும். "ஆசிரியர்கல்வி என்பது, ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர்நிலைப் பாடசாலைகள் வரை கற்பிப்பதற்குத் தேவையான திறன்களைப் பெற்றவர்களாக மனிதர்களை உருவாக்கும் கல்வி நிகழ்ச்சிகள், ஆய்வுகள் அல்லது பயிற்சிகள் அனைத்தும் உள்ளடக்கிய கல்வி எனலாம்.

இலங்கையில் மனிதவளங்களையும் அபிவிருத்தியினையும் சுபீட்ச நிலைநோக்கி மாற்றுவதற்கு பல்வேறு துறைகள், சேவைகள் எனப் பல வடிவங்கள் உருவாக்கி இயங்குநிலை கொள்ளப்படுகின்றன. அவற்றுள் ஒன்றாக இலங்கைப் பொதுக்கல்வித் துறையில் காணப்படும் இலங்கை ஆசிரியர் சேவை என்பதும் ஒரு சேவையாகக் காணப்படுகின்றது. ஆசிரியர் சேவையின் தோற்றமும் அதன் வளர்ச்சியும் பல்வேறுபட்ட வேறுபாடுகள் கொண்டதாக வளர்ந்து வந்துள்ளது. ஆசிரியர்களின் உள்ளீர்ப்பு முறைகள், சேவைத்தரங்கள், வாண்மைவிருத்திச் செயற்பாடுகளில் சமவாய்ப்பின்மை, தொடர்ச்சியின்மை போன்றன ஆசிரியர் கல்வித்துறையின் வளர்ச்சி நிலைகளில் காணப்படும் தொடர்ச்சியான தேக்கநிலை எனப் பல நிலைகளைக் காணலாம். இவை வழமையான பேசுபொருட்களே. இதனையே கூறிக்கொண்டு காலம் கடத்தல் அறிவுத்துறையின் பொருத்தப்பாட்டிற்கு நன்றன்று. ஆசிரியர்கள் என்கின்ற வாண்மையாளர்களின் இருப்பினையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாண்மைப் புலத்தினையும் இலங்கையில் அடுத்த கட்டத்திற்கு தளம் மாற்ற வேண்டும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை யினையும் காணமுடியும். இதற்கு கொள்கை சார்ந்தும் நிதிநிலை சார்ந்தும் பல்வேறு உலக நாடுகளும், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற உலக அமைப்புக்களும் தொடர்ந்து உதவி வருகின்றன. இவ்வாறான போக்கினை அவதானிக்கின்ற போது ஆசிரியர்களுக்கான வாண்மை நிலைப்படுத்தலுக்கான செயற்பாடுகள் தொடர்ச்சியாக நிகழ்கின்றன என்பதை உணர்ந்து கொள்ள முடியும். ஆயினும் ஆசிரியர்களுக்கான உயர்கல்விக் கட்டமைப்பு, புலமை மற்றும் நிபுணத்துவத்துக்கான ஒருவெளி திறக்கப்படாமை குறைபாடாகவே உணரப்படுகின்றது. இவ்வாறான புரிதல்களின் பின்னணியிலிருந்து இலங்கைக்கல்வி முறைக்குள் ஆசிரியர் கல்விக்கு சுயாதீனப் பல்கலைக்கழகம் ஒன்றினை உருவாக்க வேண்டும் என்ற அவசியத்தை முன்வைக்க முடிகின்றது.

ஆசிரியர் கல்வியினை வழங்குவதற்கு ஆசிரிய கல்லூரிகள், தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் தொழில் வாண்மைத்துவ மத்திய நிலையங்கள் என்று பல நிறுவனங்கள் அரசால் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. அத்துடன் பல அரச, தனியார் பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட நிறுவனங்கள் கல்வித்துறையின் வளர்ச்சிப் போக்கிற்கு அமைய பல கல்வித்துறை சார்ந்த பட்ட மற்றும் பட்ட மேற்படிப்புக் கற்கை நெறிகளை நடாத்துகின்றன என்பதனை இங்கு குறிப்பிட வேண்டும். இந் நிறுவனங்களால் ஆசிரியர் கல்வியினை மையப்படுத்தி சில கற்கைநெறிகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இலங்கையில் பொதுக்கல்வித்துறைக்கான கலைத்திட்ட உருவாக்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகளை நிறைவேற்றவென கலைத்திட்ட விருத்தியாளர்களை உள்ளடக்கியதாகக் காணப்படும் தேசிய கல்வி நிறுவகம் கலைத்திட்ட உருவாக்கத்திற்கான சுயாதீன நிறுவனமாக அரசினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. தேசிய கல்வி நிறுவகத்தினாலும் காலத்திற்கு காலம் பல்வேறு அனுமதிகள் ஊடாக கல்வித்துறை ஆளணியினருக்கான தொழிற்தகைமைக் கல்விச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுவதனையும் காணலாம். ஆசிரியர் கல்வியினைப் பொறுத்தவரையில் சுயாதீனத்தன்மை கொண்ட ஓர் உயர்கல்விக் கட்டமைப்பு நிறுவப்படவில்லை.

ஆசிரியர்களுக்கான சுயாதீனப் பல்கலைக்கழகம் ஒன்று இல்லாமையானது ஆசிரியர்களுடன் இணைந்த கல்வித்துறை ஆளணியினரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு நிதிச் செலவுகளுடன் பல நிறுவனங்கள் நோக்கி இழுத்துச் செல்கின்றன. பட்டக்கல்வி பற்றிய விளம்பரமுறைகள், தகைமைகள் சான்றிதழ் தகுதி பற்றிய வெளிப்படையான தகவல்கள் இன்றியே ஆசிரியர்களின் கற்கும் ஆர்வத்தினை சாதகமாகக் கொண்டு கல்வித்துறையில் பட்டம் வழங்கும் செயற்பாடுகள் நடைபெறுவதனைக் காணலாம். இலங்கையில் ஆசிரியர்களுக்கான கல்வியினை மையமாகக் கொண்டு கல்வியினையும் அதனுடன் இணைந்த துறைசார் ஆய்வுகளையும் தொழிற்கல்விக் கற்கைகளையும் தொழில்சார் ஆய்வுகளையும் சர்வதேசப் போக்குகளுடன் முன்கொண்டு பயணிக்கக்கூடிய சுயாதீனமான பல்கலைக்கழகம் ஒன்றினை உருவாக்குதல் காலத்தின் தேவையாகும். இன்றைய அரசு இதனை நடைமுறைப்படுத்துவதனூடாக நாட்டின் மனிதவள மேம்பாட்டிற்கான பாரிய முதலீடாக உணரமுடியும். நிறுவனங்களை உருமாற்றுதல் சுயாதீனமான ஆசிரியர் கல்விக்கான புதிய பயணமாக அமைய முடியாது. எனவே இலங்கையில் ஆசிரியர் கல்வியினை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்ட பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. ஆசிரியர்கல்விக்கான உயர்கல்வித்துறைகளையும் நிறுவனங்களையும் கொண்டதாக ஆசிரியர் கல்விக்கான சுயாதீனப் பல்கலைக்கழகம் உருவாக்கப்படல் வேண்டும். சர்வதேச அளவில் ஆசிரியத் தொழில்வாண்மைத்துவ உறவுகள் உருவாக்கப்படுதல், இற்றைப்படுத்திக் கொள்ளல், அறிவூட்டல் எனப் பல்வேறு சுயாதீன தொழிற்பாட்டுத்திறன் கொண்ட பல்கலைக்கழகக் கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குதல் காலத்தின் தேவையாகும்.

தற்போது இலங்கையில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் தொழிற்றகைமைப் பட்டக்கற்கைநெறி கற்பித்தற் பயிற்சியுடன் இணைந்ததாக தேசிய கல்வியியல் கல்லூரிகளின் மூலமாகவும் தமிழ் மொழிமூலமான கல்விமாணிப் பட்டங்களை கொழும்பு பல்கலைக்கழகம், பெரதேனியா பல்கலைக்கழகம், மட்டக்களப்பு பல்கலைக்கழகம் ஆகியவை கல்வித்தகைமையாக வடிவமைத்து வழங்கி வருகின்றன. இதனைவிட தேசிய கல்வி நிறுவகம், இலங்கையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற சில வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள், உள்ளூர் கல்வி நிறுவனங்கள் என பல நிறுவனங்கள் ஆசிரியர்களுக்கான தொழிற்தகைமைப் பட்டங்களை வழங்குகின்றன. இலங்கையில் ஆசிரியர் கல்விக்கான சுயாதீனப் பண்புடன் அமைந்த பிற நிறுவனங்கள் சாராத ஆசிரியர்களுக்கான பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்படல் காலத்தின் தேவையாகும். இது ஆசிரியர்களின் வாண்மைநிலையிலும் உயர் வெளிப்பாட்டடையாளமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம் பெறும். இன்றுவரை இது சாத்தியப்பாடான ஒன்றாக அரசுகளால் கையாளப்படவில்லை என்பது நிதர்சனம்.

உலகளாவிய நிலையில் பல நாடுகள் ஆசிரியர் கல்விக்கான அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களை உயர்வினைத்திறன் கொண்ட நிறுவனங்களாக நிர்வகிக்கின்றன. உலகளாவிய கல்விப் போக்கில் ஆசிரியர் கல்விக்கான தரம் மற்றும் உள்ளீர்ப்பு முறைகள் உயர் தகைமை கொண்டதாகக் காணப்படுகின்றது. ஆசிரியர் வாண்மைக்கான கல்வித்தரமும் நிறுவனக் கட்டமைப்பும் உயர்நிலை கொண்டதாக உள்ளன. அதேபோன்று ஆசிரியர் கல்வியினை முதன்மை நோக்காகக் கொண்ட பல சுயாதீனப் பல்கலைக்கழகங்கள் உலகில் காணப்படுகின்றன. இலங்கையில் அவ்வாறான பல்கலைக்கழக முறைமை ஆசிரியர் கல்வித்துறைக்கு தனித்துவமாக வளர்க்கப்படவில்லை. இலங்கையில் எதிர்காலத்தில் ஆசிரியர் கல்விக்கான கல்வித்தகைமைப் பட்டங்களை வடிவமைத்து மருத்துவக்கல்வி போன்று வேலைவாய்ப்பு தெளிவாக வரையறுக்கப்பட்ட மற்றும் உள்ளகப் பயிற்சியுடன் இணைந்த கல்வித்தகைமைப் பட்டத்தினை வழங்கக்கூடிய சுயாதீன பல்கலைக்கழகங்கள் நோக்கிய விழிப்பினை அடைதல் தற்கால தேவையாக விழித்துக் கூறமுடியும். இதற்காக தற்காலத்தில் ஆசிரியர் சமூகமும் ஆசிரியர்களுக்கான கல்வி வழங்கும் பகுதியினரும் பணியாற்ற வேண்டிய தேவை உணரப்படுகின்றமை வரவேற்கத்தக்க நிலையாகும்.

சு. பிரசாந்தன்
விரிவுரையாளர்
அரசினர் ஆசிரியர் கலாசாலை
கொட்டகலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘தமிழ்ச் சேவகன்’ விருது வழங்கப்பட்ட நன்னாளில் – 15.10.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முதல் வாழ்த்து

கனிமலர்ச் சோலையும் கதிர் வயல் நிலமும்
ஜுனியன் குளத்தில் அமைந்த பள்ளியிலே
அணிபெறும் தேருக்கு அச்சாணி போல்
ஆசிரியராய் அடியெடுத்து வைத்த ஐயனே!
கிருஷ்ணனே!

கற்பவர் மகிழ்ந்திடக் கதைகள் பல சொல்லி
பெற்றவர் மகிழ்ந்திடப் பழகியவை ஏராளம்
கற்பவை கற்பித்துக் கல்வியால் உயர்த்திப்
பற்பல மாணவரைப் படைத்த கிருஷ்ணனே!

ஏணியாய் இருந்து ஆற்றிய சேவையும்
தோணியாய் மிதந்து சாற்றிய சாதனைகளும்
எண்ணில் அடங்குமோ? எம்மண் தான் மறந்திடுமோ?
மாண்புடன் போற்றுகிறேன் மாதவனே எம் கிருஷ்ணனே!

உயர்ந்த உள்ளமும் உயரிய நோக்கும்
விருப்பத்துக்குரிய வீறுசால் நடையும்
மலர்ந்த முகமும் மதிப்புமிக்க செயலும்
கலையில் உயர்ந்த கலைமகன் கிருஷ்ணனே!

ஆசிரிய ஆலோசகனாய் ஆற்றிய பணிகள்
வீசிய தென்றலாய் வியனுடை உலகெங்கும்
மாசிலாப் பணியெனக் குளிர்ச்சியாய் மாணவர் மத்தியிலும்
ஆசிரியர் உள்ளத்திலும் அலையென மீறுதே..!

*அமரர் யோ.ஜெகதீஸ்வரன்*
*தமிழாசிரியர்*
*கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலயம்*

**இக்கவிதையே இவரின் இறுதிப்படைப்பாகும். 01.04.2022 அன்று வீதி விபத்தில் இறைபதம் அடைந்த இவரை எம் மலர்க்குழு கண்ணீரால் பூசிக்கின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நல்லாசிரியன் ஆசிரிய ஆலோசகர்
## க.கிருஸ்ணமூர்த்தி

உலகிலுள்ள யாவற்றிலும் சிறந்தது ஆசிரியத் தொழில் என்பதைக் கற்றறிந்தோர் யாவரும் ஏற்றுக்கொள்வர். அத்தகைய உணர்வுமிக்க ஆசிரியத் தொண்டாற்றிய எனது மாணவன் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஓய்வு பெறும் நிகழ்வை யொட்டி எழுதப்படும் மணிவிழா வாழ்த்தானது அவருக்குத் தமிழ் கற்பித்த ஒரு ஆசிரியராக அவரது வாழ்த்துச் செய்தியை ஆரம்பித்து எழுதி அவரிடமே ஒப்படைப்பதையிட்டுப் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்.

என் அன்பு மாணவன் கிருஷ்ணமூர்த்தி கேட்டுக் கொண்டதற்கு இணங்க கிருஷ்ணமூர்த்தி அவர்களின் கல்வி அறிவு முதிர்ச்சியையும் அவர் தமிழ்மொழியில் பெற்றிருந்த புலமையையும் அவரது முகநூல் பதிவுகள் ஊடாக நான் தினமும் கண்டு வியக்கிறேன். அவரின் இலக்கணப் பதிவுகள், இலக்கியப் பதிவுகள் வினாவிடைப் பதிவுகள் தமிழ் மொழி எல்லோருக்கும் சென்று சேரவேண்டும் என்ற அவாவும் கற்பித்தலில் அவர் பெற்றிருந்த தேர்ச்சியையும் எடுத்துக் காட்டியிருக்கின்றது. இத்தகைய ஒரு ஆளுமை மிக்க, புலமை மிக்க தமிழாசிரியர் ஆசியராகவும், ஆசிரிய ஆலாசகராகவும் முப்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கடமையாற்றியிருப்பதையிட்டுப் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். அதை பெருமையாகவும் கூறிக் கொள்கின்றேன்.

கொஞ்சம் தகுதி வந்தவுடன் தன்னைப் படிப்பித்த ஆசிரியர்களை நினைக்காத இந்தக் காலத்தில் கிருஷ்ணமூர்த்தியைப் போன்ற நல் மாணவர்கள் இன்னும் இருப்பது மனதுக்கு நிறைவையும் மகிழ்ச்சியையும் தருகின்றது.

எத்தனையோ செல்வங்கள் ஒருவனுக்கு இருந்தாலும் கல்விச்செல்வம் அவனது ஏழ் பிறவிகளுக்கும் தொடர்ந்து சென்று உதவும் என்பதை உணர்ந்தவர் ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி. அது வள்ளுவர் வாக்கும் கூட. கல்வியை எவ்விதம் ஒருவரிடம் கற்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக அவ் வள்ளுவரே “உடையார்முன் இல்லார்போல் எக்கற்றும் கற்றார் கடையரே கல்லா தவர்” என்று கூறுகின்றார். வள்ளுவரின் கல்வி பற்றிய சித்தாந்தம் அது. செல்வர் முன்பு வறியவர் இரந்து கேட்பதைப்போல கல்வியைக் கற்க வேண்டும் என்பது இதன் பொருள். இது குறளுக்கு மட்டுமன்றி அனைவருக்கும் பொருந்தும் அவர் தனது கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டாலும் தான் மேற்கொள்ளும் பிற நடவடிக்கைகளில் கல்வி சார்ந்த பணிகள் மேலோங்கி இருக்கும் என்பதை நான் திடமாக நம்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்திலும் ஓய்வு பெறுகின்ற காலங்களிலும் தான் நேசிக்கும் தொழில் சார்ந்து அவர் செயற்படுவார் என்று எண்ணுகின்றேன். "யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன் சாந்துணையும் கல்லாத வாறு" என்ற குறளுக்கு அமைவாக, "எல்லா ஊர்களும் எல்லா நாடும் எல்லா மனிதர்களும் தம் மக்களே எனச் சேவையாற்றிய சேவையாற்றி வருகின்ற என் மாணவன் ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர் திரு.கிருஷ்ணமூர்த்தி தன் மனைவி பிள்ளைகளுடனும் நீண்ட ஆரோக்கியத்துடனும் பல்லாண்டு வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வணங்கி என்னுடைய ஆசிகளையும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் இந்த சந்தர்ப்பத்தில் அவருக்கு வழங்கிக் கொள்கிறேன்.

வாழ்க வளத்துடன்

*அமரர். கோமளாதேவி சுந்தரலிங்கம்,*
*லண்டன்.*

**கிருஸ்ணமூர்த்தம் எனும் இந் நூலுக்கு முதன்முதல் ஆக்கத்தினை அனுப்பி வைத்த இவர் சில நாட்களுக்கு முன்பு அமரத்துவம் அடைந்து விட்டார். அவரின் ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணி விழா நாயகனுக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

*1998/ 99* ஆம் ஆண்டுக் கல்வியாண்டில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் தமிழ்த்துறை மாணவர்களாகப் பயணித்த நாட்கள் இன்றும் பசுமையாக உள்ளன. யாழ் நகருக்கும் ஏனைய பகுதிகளுக்கும் இடையிலான தரைவழிப் போக்குவரத்து மூடப்பட்டு கடல் மார்க்கம் மட்டுமே போக்குவரத்துக்காகத் திறக்கப்பட்டிருந்த காலமது. வெளி மாவட்டத்திலிருந்து கலாசாலைக்குச் சென்றவர்கள் இரண்டு ஆண்டுகள் யாழ் குடா நாட்டிற் தங்கியிருந்து கல்வியைப் பூர்த்தி செய்ய வேண்டியதாகவே இருந்தது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களே கலாசாலையில் அதிகம் நிறைந்திருந்த நாட்களவை. கலாசாலையில் அனைவரும் எமது சுக துக்கங்களைப் பார்த்துப் பராமரித்து வழி நடத்திய நாட்களில் ஒவ்வொரு துறையினரும் தமது கல்வியைச் சிறப்பாகக் கற்றதுடன் நட்பாக ஒருவருக்கொருவர் கரம் கொடுத்து வாழ்ந்த காலம் அக்காலம். எங்களது தமிழ் வகுப்பின் மூத்தவராக இருந்தவர் நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள். கிளிநொச்சி மாவட்டத்தில் அப்போது அவர் பணிபுரிந்து கலாசாலைக்கு வந்திருந்தார். நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கலாசாலைக் காலத்தில் தென்மராட்சி வரணிப் பகுதியில் அவர் உறவுகளுடன் வாழ்ந்து வந்ததை இவ்வேளையில் நான் நினைத்துப் பார்க்கிறேன்.

நிதானமும் அமைதியும் கிருஷ்ணமூர்த்தி ஆசிரியரின் அடையாளங்கள் கலாசாலையில் ஆரம்பித்த நம் நட்பு இன்றும் நிலைத்திருக்கின்றது. கிளிநொச்சிக் கல்வி வலயத்தின் தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகரான நண்பர் சிறப்பாகத் தனது பணியையாற்றிவிட்டு மணிவிழாக்கண்டு பணி ஓய்வைப் பெற்றுக் கொண்டுள்ளார். அவரது சேவையின் சிறப்பை நயந்து, பயன் பெற்ற கல்விப் புலத்தின் நண்பர்கள் அவருக்கான மணிவிழா மலரை வெளியிடும் நல்ல இத்தருணத்தில் நண்பருக்கு மணிவிழா வாழ்த்துகளை வழங்குவதில் நானும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்

*திரு. சி நாகேந்திரராசா*
*அதிபர்*
*மு /ஒட்டிசுட்டான் மகா வித்தியாலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தண்மதி ஆகிய நற்குருவே

மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் எல்லாம்
கண்ணென உம்மைச் சேர்ந்திடவே
மண்ணிலே மாந்தர் மாண்புற மகிழும்
மணிவிழாக் கண்ட பெருந்திருவே
பண்ணென இசைக்கும் நற்றமிழ் தன்னை
பண்புடை மாணவர் பயின்றிடவே
விண்ணுயர் புகழ்பெரு கல்வியை வழங்கிய
தண்மதி ஆகிய நற் குருவே..!

கண்டிப்போடு கரிசனை கலந்த
கல்வியை நாளுமே ஊட்டி நின்றீர்
பண்புடன் கூடிய மாணவர் சமூகம்
பாரினிற் தோன்றிடப் பாதையிட்டீர்!
வண்ணம் மிகுந்த குருப் பணி தன்னை
வரம் என எண்ணிப் பணிபுரிந்தீர்
கண்ணெனக் கல்வியைக் காத்துமே நின்று
கடமையில் மகிழ்வுடன் ஓய்வு கண்டீர்..!

மாண்புறு மனையாள் மனதொருமித்து
மாசிலா இல்லறம் மலரச் செய்து
தூண்களாய்த் தாங்கும் ஆண்மகவிரண்டை
துடிப்புறு தந்தையாய் வளர்த்தெடுத்தீர்
காண்பவர் வியக்கக் கருத்தொருமித்து
கல்வியாம் செல்வத்தைப் போதித்தீர்
ஆண்டுகள் நூறு ஆனந்த ஊஞ்சலில்
ஆயிரம் சுகம் கண்டு வாழ்ந்திடுக..!

கடினம் என்றென்றும் இலக்கணம் அதனைக்
கற்கண்டாய்த் தினம்தினம் சுவைக்க வைத்தீர்
அடிதொறும் நம்தமிழ் செய்யுட் சீர்களின்
அர்த்தங்கள் யாவையும் புரிய வைத்தீர்
துடிதுடிப்புடனே துஞ்சல் சிறிதின்றித்
தெள்ளு தமிழ் அள்ளிப்பருக வைத்தீர்
அறுபது கண்டும் அணுவும் தளர்வு இன்றி
ஆளுமை இளைஞனாய்ச் சேவை செய்தீர்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசான் பணிக்கு ஆளுமை மிக்க
ஆலோசகர் என்னும் அருஞ்சேவை
வீசிடும் தென்றலாய் விருப்பு மிகுந்து
வியந்து போற்றியே ஆற்றி நின்றீர்
மாசிலா மொழியின் ஆளுமை கொண்டே
மண்ணிலே மேலும் நூறாண்டு
நேசிக்கும் கல்வியின் நெடும் வரலாற்றில்
நீடு புகழ் பெற வாழ்த்துகின்றேன்..!

இங்கிதம் நிறைந்த இன்மொழியாற் பலர்
இதய அரங்கினில் இடம் பிடித்தீர்
பங்கம் கலந்திடா நகைச்சுவை கூறியே
பாலர் மனங்களைக் கொள்ளை கொண்டீர்
சங்கம் வளர்த்து எம் பொங்கு தமிழினைச்
சற்றும் தவறின்றிக் கற்றுத் தந்தீர்
மங்காப் புகழுடன் மாலைகள் சூடியே
மனமிக மகிழ்ந்தே வாழ்க நன்றே..!

*எம். கே. அகிலன்*
**B.A(cey) Spl Trd, PGDE**
**M.A (Hons), Med**
*கிளி/இராமநாதபுரம் கிழக்கு ம.வி*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அகவை அறுபதில் அக மகிழ்வாய் வாழ்த்தும் அனுபவக் கவி

அகவை அறுபதினிலே
அனுபவசாலியாய் மிளிர்ந்து
ஆயிரம் கதைகள் சொல்லி
அர்த்தமுள்ள வார்த்தைகளை வித்தாக்கி
அளப்பரிய தமிழ்ப் பணியை
ஆசிரிய ஆலோசகராய் எமக்களித்தீர்!

கல்வியறிவில் கடல்
தமிழ்மொழிதனில் புயல்
நடைதனில் மடங்கல்
பேச்சதனில் கம்பீரம்
பணியதனில் விறுவிறுப்பு
தமிழ்ப்பற்றில் ஒன்றிப்பு.
வகுப்பிற்குள் வந்தால் படபடப்பு
வாங்கிய கொப்பியில் பிழை பிடிப்பதில் துடிதுடிப்பு
சிவப்பு மையை காணாவிடின் வெகுளித்தனப் பார்வை
வேட்டொலிகள் வகுப்பறையில் சரமாரி
"அவை
அத்தனையும் நீர்
எமக்களித்த போதனை.

அன்புடனும் பண்புடனும்
அளப்பரிய சீற்றத்துடனும்
கண்டிப்பான வார்த்தைகளை "நீர்
கனிவாக எடுத்துரைப்பீர்"
கணப்பொழுதில் கடினமாயிருப்பினும்
கடந்து சென்றபின் நினைவிருப்பதில்லை.
உந்தன் அர்த்தமுள்ள வார்த்தைகள்தான்
எமை தமிழுலகில் என்றும் வளர
இச்சை கொள்ள வைக்கின்றது.
என்றும் நும் பணி தொடர
எஞ்ஞான்றும் வாழ்த்துகின்றேன்.

*திருமதி லிகிர்தா கோபிதர்சன்*
*கிளி /சிவநகர் அ.த.க. பாடசாலை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மொழியின் காவலன்

மண்ணின் மைந்தனாய்
மறவர் குலத்தின் வீரனாய்
தமிழ் மொழியின் காவலனாய்
தரணியில் உதித்தவனே!

பள்ளிப் பாடங்களைப்
பாங்குடனே கற்றுயர்ந்து
பயிற்சி பெற்ற ஆசானாய்ப்
பண்புடனே பணி செய்தவனே!

கள்ளம் கபடம் இல்லாத
மாணவ மணிகளை
மாணிக்கமாக மாற்றிட
மாண்புறு சேவையாற்றினாய்!

ஆசிரிய ஆலோசகர் பணியதனில்
ஆரம்பித்த பயணமதில்
அத்தனை பள்ளியும் வந்து
அறிவுரை கூறி வழிகாட்டினாய்!

அன்பைக் கொடுத்து அரவணைத்து
துன்பம் போக்கித் துயர் துடைத்து
வன்மம் இல்லாப் பேச்சாலே
சிம்மம் போல உயர்ந்தவனே!

வெள்ளை உள்ளம் கொண்டு
விரும்பியே இல்லாளைக் கைப்பிடித்து
கள்ளமில்லாப் பிள்ளைகளை
கனிவுடன் பெற்று மகிழ்ந்தவனே!

அகவை அறுபது ஆனாலும்
அகலவில்லை இளமையும் துடிப்பும்
நீங்கா அழகு உன்னிடத்தில்
நிலை கொண்டுள்ளது என்றென்றும்

மணிவிழாக் காணும் நாயகனே
மங்காத செல்வமும் சிறப்பும்
மனநிறைவும் பெற்று நீர்
மகிழ்வுடன் வாழ வாழ்த்துகின்றேன்!

*திருமதி. மஞ்சுளா யோகநாதன்,*
*கிளி / பரந்தன் இந்துக் கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க கிருஷ்ண நேயம்

கிளிநொச்சி மாவட்டத்தில் இயற்கைச் சிறப்பையும், வரலாற்றுச் சிறப்பையும் தாங்கி நிற்கும் உருத்திரபுரத்தின் ஈஸ்வர சிவனின் அருட்கடாட்சம் கொண்ட உருத்திரபுரத்தின் கிராமத்தில் தமிழ்ச் சேவை செய்யப் படைக்கப்பட்ட ஒரு நல்ல உள்ளம் தான் திரு.கணபதிப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி அவர்கள். இந்தப் பணி நயப்பு மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியும், அகமகழ்வும் அடைகிறேன். கிளிநொச்சி மாவட்டத்திலேயே பிறந்து வளர்ந்தது மட்டுமின்றித் தனது முப்பது வருட சேவையை முழுவதுமாக கிளிநொச்சி மாவட்டத்திற்கு அர்ப்பணித்து வழங்கிய பெருமை திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களையே சாரும். பல்வேறு சேவைகளையும் ஆற்றியுள்ளார். தமிழ் மீது கொண்ட திறமையால் கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ் வளர்ப்பதில் அதிக பங்கு உண்டு கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் தமிழ்த் தினப் போட்டியில் மாகாணம் தேசிய அளவில் சாதிக்க வேண்டும் என அவர்களை ஊக்குவித்தவர். இவரது அறிவாற்றல் தலைமைத்துவம் அத்தனை சிறப்பாக அமைந்தது. இவருக்குக் கிடைத்த அங்கீகாரம் தான் வினாத்தாள் மதிப்பீடு, சமூக, கலை நிகழ்வுகளை மேற்கொள்வதும் சமூக அக்கறை, அனைவருடன் நட்பு பாராட்டுவது, பழகுவது, இவருடைய சிறந்த குணம். இல்லற வாழ்வில் நல்ல மனைவியைக் கரம் பிடித்து சிறந்த புதல்வர்களைப் பெற்றுப் பட்டதாரிகள் ஆக்கித் தன்னுடைய கல்விச் சேவையிலும் சிறந்த குடும்ப வாழ்விலும் சிறந்து விளங்குகின்ற கிளி மண்ணின் புதல்வனாக இவரைப் பாராட்டுவதோடு இவரின் சேவை ஓய்வுக் காலமும், பிற்காலமும் சிறந்து விளங்க நீண்ட ஆயுளுடனும் இருக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

*திரு. நா. கணேஸ்வரநாதன்*
*கோட்டக் கல்வி அதிகாரி*
*பூநகரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழன் திருமகன்

ஆயும் புலமைத் தெளிவுடன் தமிழாய் மலர்ந்து சேவைக்கால ஆசிரிய ஆலோசகராய் கிளிநொச்சி மண்ணில் தடம் பதித்து அருளாய்க் கனிந்து தன்மானத்து உள்ளொளியுடன் தனியாற்றலால் புகழ்பெற்ற திரு. கணபதிப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி ஆசான் அவர்களின் "மணி விழா" நாளில் என் மனப்பதிவினை எழுத்தோவியமாய்த் தருகிறேன்.

ஊர் புகழ்ந்து ஏற்ற எது வந்த போதிலும் தளராது கடமையில் கண்ணும் கருத்தும் நிறைந்து அனைத்துத் தமிழ் ஆசிரியர்களையும் மேற்பார்வை செய்து தமிழ்ப்பாடச் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்குப் பெருமை சேர்த்ததுடன் பதவியை விரும்பி ஏற்றுக் கால நேரம் பாராது அர்ப்பணிப்புடன் கடமையாற்றுவதால் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் தமிழ் மொழி வளர்ச்சியில் ஏற்றம் கண்டன.

காலத்தைப் பொன்போல் மதிப்பதில் தனிச் சிறப்பு மிக்கவர். வலய மட்ட மேற்பார்வையின் போது பாடசாலைகளில் காலை 06.55 இற்குத் தரிசனமாகி விடுவார் இது அவருக்கேயுரிய விசேட பண்பு. அமைதியாயக் கண்காணித்துத் தமிழ்ப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களிடம் நிறை குறைகளைத் தெரிவித்து ஆக்கமும் ஊக்கமும் தந்து வலுப்படுத்துபவர். தமிழ் கற்பிக்கும் சகல ஆசிரியர்களினதும் விபரங்களை அறிந்துவைத்துப் பொருத்தமான வாண்மைத்துவச் செயற்பாடுகளில் ஈடுபட வைப்பதில் தனித்திறமை ஆசானிற்கு மட்டுமேயுண்டு.

அதிகாரக் குரல், நகைச்சுவை இழையோடும் கருத்து, நிமிர்ந்த நன்னடை ஞானச் செருக்கு இருப்பதால் அவரை யாரும் வார்த்தையால் மண்டியிட வைக்க முடியாது. கனிபோல் கற்கண்டுபோல் தமிழ்மொழியினைச் சுவைத்துக் கற்க வேண்டும் என்று சாதாரணதர, உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பல செயலமர்வுகளை நடாத்தி வெற்றி கண்டவர். தமிழ்ப்பாட உதவிக் கல்விப்பணிப்பாளரிடம் ஆலோசனைகளையும் அனுமதியையும் பெற்று அடைவுமட்டம் அதிகரிப்பதற்கு உதவுபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தி ஆசானின் மேற்பார்வைப் பணிகளை மட்டுமே அறிந்தவர்கள் அவரது செயற்பாடுகளின் மறுபக்கமான பல "மாண்புறு பணிகள்" பலருக்குத் தெரியாது. நலிந்தோருக்கு உடன் உதவும் மனப்பாங்கு, உறவுகள், நண்பர்கள், ஆசிரியர்கள் மேலதிகாரிகளின் இன்ப துன்பங்களில் உடன் விரைந்து சென்று கலந்து கொள்ளும் உயரிய குணம், ஆரியக் கலப்பு இல்லாத சடங்கு முறைகளில் நாட்டம், சங்ககாலப் பண்பாட்டு முறையில் திருமணம் செய்தமை, தூய சைவ மரபை விரும்பும் ஆர்வலர், மொழி வளர்க்க கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தில் இருந்து செயற்பட்டமை. ஜெயந்திநகர் கிராமத்தில் நடைபெறும் சகல நிகழ்வுகளிலும் உடன் கலந்து கொள்ளும் பண்பு, பிரச்சினைகள் யாருக்கு வந்தாலும் அவர்களின் தேவை அறிந்து "உதவும் சீர்மியப் பண்பு" பூட்டும் திறவு கோலுமின்றி அடையா நெடுங்கதவுடன் விளங்கும் களஞ்சியங்களான நூலகங்களின் வளர்ச்சிக்காய் கிருக்ஷ்ணமூர்த்தி ஆசான் ஆற்றிவரும் பணிகள் பல.

க.பொ.த சாதாரணதர பரீட்சையின் தமிழ்ப்பாட விடைத்தாள் திருத்தும் பிரதம பரீட்சகராக நீண்ட காலமாக பணியாற்றி வருவதால் பல ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்திக்கு ஊன்று கோலாய் இருந்து வருகிறார். தொடர்ந்து பல ஆண்டுகள் கிருஸ்ணமூர்த்தி ஆசான் உடன் உதவிப் பரீட்சகராகக் கடமையாற்றி வருகிறேன் என்பதால் அவரது ஆளுமைப் பண்புகளைச் சொல்ல முடிகிறது. மாணவர்களுக்குச் செவிக்கினிமையூட்டும் நல்லறிவுக் கதைகளை அழகாகக் கூறும் செஞ்சொல் வித்தகர். உயர்தர மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களில் அக்கறையோடு வழிப்படுத்தி வருபவர். தாயையும் தமிழையும் மிகவும் நேசிப்பவர்.

*"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்*
*திண்ணியர் ஆகப் பெறின்"*

என்னும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப வாழ்பவர் ஆசிரியராகக் கடமையாற்றும் வாழ்க்கைத் துணைவி இன்பரதியுடன் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் இரு புதல்வர்களோடும் இல்லறத்தில் மகிழ்வுடன் வாழவும், தித்திக்கும் தேனமுதான முத்தமிழ் எமது மாவட்டத்திலும் நாடெங்கிலும் சுடர் விட்டுப் பிரகாசிக்க இவரது சேவை தொடர்ந்து கிடைக்க வேண்டுமென்றும் இம்மணிவிழா நாளில் வாழ்த்துகிறேன்.

*திருமதி. இ. அருணாசலம்.*
*கிளி/ உருத்திரபுரம் ம.வி*
*தமிழ்ப்பாட ஆசிரியர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணிவிழா நாயகனுக்கு மங்கலமாய் ஒரு வாழ்த்து.....

உலக சிருஸ்டிப்பின் அவதாரமாய் கிருஸ்ணமூர்த்தியாய்
பூலோகமதில் வந்துதித்த புண்ணிய சீலன் இவர்
காராளர் வாழும் கழனியூராம் வரணியின் வரோதயனாம்.
தாராளமான சேவைகளைத் தரணியிலே ஆற்றி ஓய்வு பெறும்
வேளையிது.

வெள்ளத்தனைய மலர் நீட்டமாய் உள்ளத்தில் உவகையுடன்
கள்ளமிலாது கடமையே கண்ணானது என உணர்ந்து
துள்ளல் நடையும் மிடுக்கான தோற்றமும் அஞ்சா நெஞ்சமும்
பள்ளியிலே பவனிவரும் போதெல்லாம் தடம் பதிக்கும் தன்மையும்

வலயமேற்பார்வை ... பாடப்பதிவு.. வகுப்பறைப் பதிவேடு .
கிலேசமின்றியே கொண்டுவா கணிப்பீட்டுக் கோவைதனை என்றிடுவார்..
இலேசாய் ஒரு புன்முறுவல் உத்தேசத் திகதி எங்கே? கற்பித்த திகதி எங்கே?
ஆலோசனை பலகூறி மகத்துவமாய் வழிநடத்தும் மகோன்னதமானவர்

கண்டனமும் அன்பும் கலந்துள்ள உள்ளமதில் கபடம் ஏதுமில்லை
தண்டமிழின் ஊற்றாய் தண்கயத்துப் புனலாவார்.
மடைதிறந்தாற் போல அனுபவமாம் ஆறு பெருக்கெடுத்து
"ஆற்றல்" என்னும் சாகரத்தில் சங்கமிக்கச் செயற்படுவார்

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியென்றால் விறுவிறுப்பு இரட்டிக்கும்
மதிப்பீட்டுப் பணிக்குழுவில் மகோன்னதமான சேவை பரீட்சை மேற்பார்வை.
பல நாட்கள் அனுபவம். பவ்வியமாய்ப் பணிதொடரும்
நிதானமும், நேர்த்தியும், வேகமும், விவேகமும் கலந்திருக்க
கடமையே கண்ணாவார்.

காலம் கூடிய அகவைக் கணக்கில் அறுபது அகன்று விட
அனுபவக் கணக்கும் தீர்வடைந்து நிறைவேறும் வேளையிது.
நாளைமுதல் விடியல்களெல்லாம் பறவைகளின் இனிய கீதத்துடன்
அடியேனும் ஒரு வாழ்த்து விசும்பின் வீழ்துளியென
இயம்புகின்றேன் இடந்தருவீர்.

வைரவிழாக்கண்டு வளமார வாழ்த்திய பின்
பவள விழாக் காணப் பவனித்து நிற்பதோடு
அமுத விழாவுடனே நூற்றாண்டு விழாவினையும் காண வேண்டுமென
பணியின் ஓய்வுதனை மகிழ்விக்க இறை ஆசிக்காய் இறைஞ்சுகிறேன்

*திருமதி. சி. ஜோதீஸ்வரன்*
*ஆசிரியை*
*கிளி /முருகானந்தா கல்லூரி, முரசுமோட்டை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழ் தந்த தித்திப்பே....

திருநகர் தந்த தித்திக்கும் பேச்சாளன்.
குறுநகை கொண்ட குணவியல்பினன்.
நகைச்சுவை நாயகன்
இன்தமிழ்க் காவலன்.
வகைசொல்லும் அளவிற்கு
வண்டமிழ்ச் சேவகன்
தகைசார் மாணாக்கரை நிறைவாய்த் தந்தவர்
பகையின்றி அனைத்தையும் பக்குவமாய் முடிப்பவர்.
கடமையே கண்ணெனத் திடமாய் நினைப்பவர்
நேரத்தைக் கணக்கிட்டு நேர்த்தியாய் வருபவர்
வீரத்தாய் பயந்த வியத்தகு வீரன்
கல்வித்துறைக்காய்த் தன்னையே அர்ப்பணிக்கும்
கடமை தவறாக் கண்ணியவான்.
ஆசிரியர்க்கு ஆலோசனை
வழங்கும் ஆலோசகர்
தேடலின் முத்திவர்
தெய்வீகச் சொத்திவர்
வாடுகின்ற பயிருக்கு வான்மழை போல
நாடி வரும் பிள்ளைக்கு நல்லதொரு ஆசான்
ஆடல் பாடல் கற்பித்தலில் அறிவுக்கு விருந்தளித்து
ஊடல் இன்றிப் பிள்ளைகளை உருக்கமாய்க் கற்பிப்பார்
அறுபதிலும் இருபதுபோல் இளைஞனாய் இருந்து
நறுமணமாம் தமிழ்மணத்தை
நன்கு போதித்து
மனநிறைவாய் இன்று மணிவிழாக் காணும்
மாண்பமை ஆசானை மலர்தூவி
கவிமழை பொழிந்து
மனநிறைவாய் வாழ்த்துகின்றேன்.
வாழிய பல்லாண்டு.....

*திருமதி. சத்தியகலா கமலகாந்தன்*
*ஆசிரியை*
*கிளி/முருகானந்தா கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவனியுன் சேவை கொள்ளும்



வாரி இழுத்த தலை
வடலிப் பனையுயரம்
தேடித் தமிழ்ச் செல்வம்
திகட்டத் தரும் ஆசான்
பேரும் பெற்ற கிருஷ்ணா
பெரிய மனசுக்காரன்
ஆருந் தரா அன்பை
அள்ளித் தரும் இனியன்.

வேளைக்கு வேலை சென்று
விருப்புடன் கடமையாற்றி
ஏழைச் சிறார்களுக்கு
ஏற்ற கல்வி தானளித்து
நாளைப் பெரு மகனாய்
நாட்டுக் களிக்கும் நல்ல
சேவைதனை யாற்றி
திருப்தியுடன் ஓய்வு கண்டார்.

பழகிட நல்ல நெஞ்சும்
பார்வையில் தெளிவும் கொண்டு
அளவிட முடியா அறிவை
ஆழமாய்ச் சமூகத்துக்கூட்டி
களம்பல கண்டே ஓய்வைக்
களித்திடும் நிறைவில் நின்றார்.
அழகிய மனத்து நண்பா!
அவனியுன் சேவை கொள்ளும்.

*சு. ஸ்ரீகுமரன்*
*உதவிக் கல்விப் பணிப்பாளர்*
*வலிகாமம் கல்வி வலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மூப்பிலே தானே! மணிவிழா!

மூப்பிலே தானே! மணி விழா! - பின்பு
உமக்கு ஏன் ?

இன்றும் அதே துடிப்பும் அதே மிடுக்கும்
தானே உமக்கு.

நான் ஆறில் பார்த்தது போலவே
நீர் அறுபதிலும் இருக்கின்றீர்
'எண்ணிட இனிக்கும் இனிய நற்பண்பின் மிக்கோய்!

கிரீடம் தரித்த கிருஸ்ணன் நீரே
மானுடம் பூண்ட மகுடம் நீரே
உம்மால் நாம் பெற்ற கீர்த்தி
எங்கள் நேயத்தில் என்றும் திரு மூர்த்தி
'அடியேய்', 'எடியேய்' என்றிடும் அன்புமொழி
காட்டியது எமக்கு நல் வழி

தசாப்தம் பல கடந்தும்
உம்மோடு நாம் உழன்ற நாட்கள்
என்றும் மகிழ்ந்த நாட்கள்

தாய் ஊட்டும் பால்-ஒப்ப
தமிழ் ஊட்டிய ஆசானே
ஆசிரியம் கடந்த உம் ஆலோசனை
எம் மண்ணின் பேரணை
நினைக்க நினைக்க இனிக்கும்
உந்தன் சேவை
போற்றி போற்றி
வாழ்க! நீடுநீர் வாழ்க!

*திருக்குமார் லோகநந்தினி*
*ஆசிரியர்*
*கிளிநொச்சி மத்திய கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்க கிருஷ்ண நேயம்


துவாரகாபுரிக்கோர் நாயகன் கிருஷ்ண பகவான்
கிளிநொச்சிக்கோர் நாயகன் கிருஷ்ணமூர்த்தி ஆசான்
களிமிகக் கொண்டு பழகுவோர் உள்ளமதில்
வெளிச்சமாய் ஜோதியாய்க் கலந்துகொண்ட நல்லாசான்
இன்தமிழின் இனிய ஆசிரிய ஆலோசகர்
ஒண்டமிழின் ஒளி கொண்ட ஓருருவம்
வண்டமிழின் வலிமையினைத் தன்னுணர்வாக்கிப்
பண்புடனே ஆசிரியர்களுடன் பழகுமினியவர்

ஆசிரிய கலாசாலை நட்பின் சிகரமாய்
பாசமிகு பண்பின் பள்ளிக்கூடமாய்
நேசமுடன் கைகோர்த்து நடைபயின்று
பூசல்களேது மின்றிப் பூந்தென்றலாய் வீசியவர்
மதிப்பீட்டுக் கடமைகளில் மனுநீதியாளனாய்
மதிநுட்பமிகு பணிகளின் உறைவிடமாய்
மதிப்பிடும் ஆசிரியர்க்கு நட்பின் கூடமாய்
மதிப்பார்ந்த பண்புசேர் கிருஷ்ணமூர்த்தி சேர்
அகவையது அறுபதில் மணிவிழா நாயகனாய்ப்
பகலவனின் ஒளிபோல் கல்விக் களமதிலே
அகலக் காற்றடம் பதித்த சேவையாளன்
சகலரையும் புன்னகையுடன் சந்தித்த மாமனிதன்
ஆறுபத்து அகவையதில் சேவையினில் ஓய்வுபெறும்
மணிவிழா நாயகன் கிருஷ்ணமூர்த்தி ஆசான்
ஊறுகளேது மின்றி நூறாண்டு காலம்
பேறுகள் பலபெற்று நலமாக வாழிய வாழியவே.

*திருமதி.உ .சேதுபதி*
*துவானி வீதி, இமையாணன்*
*உடுப்பிட்டி.*
*யாழ்/ வல்லை மகளிர் மகாவித்தியாலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேவையின் விழவெள்ளி

கணபதிப்பிள்ளை
சரஸ்வதியின்
கடைக்குட்டி மூர்த்தி
மூன்று அக்கா மூன்று
தங்கைக்கு
அம்பாளின் அருளால் கிடைத்த
ஏகபுதல்வன் கிருஸ்ணமூர்த்தி
அம்மாவின் பிள்ளையாய்
அப்பாவின் ஆசையாய்
அவனியிலே வந்துதுதித்த அன்பனே!
முப்பது வருடம் முழுமையாகப் பணிசெய்து
முன்நின்றுழைத்து ஆசிரியர்,
பிரதி அதிபர், ஆலோசகர் எனப் பல
பரிமாணம் பாரினில் கொண்டு
கிளிநொச்சி தெற்கு வலயத்தின்
புகழ்பூத்த தமிழாசானே..!!!

கிளிமண்ணில் இவர் பாதம் படாப்
பாடசாலை உண்டோ?
கிளிபோல் இன்பரதி என்னும் இணையை
இல்லறத்தின் சோலையாக்கி
அபிநயன், இலக்கனன் என்னும்
ஆண்சிங்கங்களைப் பெற்றெடுத்து
ஊர் போற்ற உத்தமராய் வளர்க்கும்
பொறியியலாளரின் தந்தையே..!
பூரிப்பும் கண்டிப்புமாய்
கல்விப்பணி மட்டுமல்லாது
கடல்கடந்த நண்பர்களின் நட்புமாய்
அள்ளி அள்ளிப் புகழ் பெற்ற
அன்புக்கும் பண்புக்கும் உரித்தோனே..!
வன்னியின் இடப்பெயர்விலும்
இடம்பெயராச் சேவையாளன்
கிளிநொச்சி வாசலிலே
கிலி ஏற்படுத்தும் குண்டுச் சத்தத்திலும்
குற்றுயிராய்க் கிடந்து உயிர் மீளினும்
சேவையில் குறை வைக்காதவரே..!

இன்பங்களிலும் துன்பங்களிலும்
ஓடிச்சென்று உதவும் உத்தமனே!
இலக்கிய நயத்தை இன்பமாக
இரசித்து இரசித்து ஊட்டுவித்து
இன்பக்கொடியை இதயங்களில் நட்டவரே..!

அறுபது ஆனாலும் கூட
அணுவளவும் நரையில்லை
இருபதுபோல் செயற்றிறன்
இப்போதும் குறையவில்லை
பட்ட கஸ்டங்களை மறந்ததில்லை
பாடுகளை எண்ணித் துவண்டதில்லை
பரீட்சைத்ததாள் திருத்துனராய் பலகாலம்
பழகியுள்ளோம்.
நட்போடும் நல்ல மனத்தோடும்
நாம் பல காலம் பழகியுள்ளோம் – உங்கள்
ஓய்வுகாலம் உயர்ந்து விளங்கிட
உளமார வாழ்த்துகிறேன்!.

திரு. சி. உதயகுமார்
ஆசிரிய ஆலோசகர்
வவுனியா– தெற்கு வலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடமை செய்வதில் கிருஸ்ணன்

கடமை என்றால்
கண்ணன் தானே?
இது என்ன
கிருஸ்ணன்..!
என்பார்கள்
புராணம் அறிந்தவர்கள்
நான் கண்ணனைக் கண்டதில்லை
ஆனால் கிருஸ்ணனைக் கண்டதுண்டு.
அது- கிருஸ்ணமூர்த்தி என்னும்
காலம் தவறாக் கடமையாளன்.
ஆம், இது வெறும் புகழ்ச்சியல்ல உண்மை.

"ஐ.எஸ்.ஏ" வாறார் என்றால்
எல்லோருக்கும் பயமெழும்
வியர்வை பூக்கும்
அது இயல்பு
ஆனால் இவரோ!
நாம் வருமுன்னர் பள்ளி வந்து
எம்மை வரவேற்பார்
வாண்மையோடு வணக்கம் சொல்வார்.

தாட்சண்யம் காட்டுவார்
தயவு காட்டுவார் -ஆனால்
தவறு என்றாலோ
பொட்டில் அடித்தது போல சொல்லித்
தட்டிக்கொடுப்பார்.

நிமிர்ந்த நடை நீளக்கை சேர்ட்
திமிரில்லா ஞானம் தீர்க்கமான குணம்
நொடியும் கண் சோராத் தொழில் பக்தி
துடிப்பாய் இயங்கும் இளைஞன் மனம்
அத்தனையும் உண்டு என்றால்
அது எங்கள் தமிழ் "ஐ.எஸ்.ஏ"
கிருஸ்ணமூர்த்தி "சேர்" தான்.

தமிழ் வகுப்பெடுத்தால் இனிமை
மாணவர்க்கோ
வகுப்பெல்லாம் புதுமை
நகைச்சுவையும் நாடகமும்
நல்லிலக்கியச் செறிவும்
நம்மாசானுக்கு நனி சிறந்து
நடைகூட்டும்

கம்பீரமான மீசை
கரடு முரடற்ற வார்த்தைகள்
தளராத தேகம்
தலைக்கனம் இல்லாத் தலைமை
உம் போல் யாருக்கு வாய்க்கும்
தமிழுக்குத் தொண்டாற்றும்
தமிழன்னையின் தலைமகனே..!!
மணி விழா நாளில்
மனதால் சொல் எடுத்து
மறு,மாசு களைந்து
மனதார வாழ்த்தி
வணங்குகிறேன்..!
வாழ்க வாழ்க வாழ்க..!

*திரு. ஜெயராஜ்*
*ஆசிரியர்*
*கிளி /அக்கராயன் ம.வி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழாசானுக்கு அமுதென்று பேர்.....

தமிழுக்கும் அமுதென்று பேர்
இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!

தமிழ் வாழத்
தம்மை ஈயும்
தமிழ் வளர்க்கும்
தகை சான்ற சான்றோர் வழியில்
தடம் பதிக்கும்
நல்மனிதர் நீங்கள்!

இன்முகமும்
புன்சிரிப்பும்
தட்டிக்கொடுக்கும் தாய்மைப் பண்பும்
விட்டுக்கொடுக்கும்
தயாள குணமும்
உங்களின் அடையாளம்...!

அகரம் பயில்வித்து
ஆயகலை தருவித்து
நல்லொழுக்கம் வருவித்து
எதிர்காலம் தனை அருளும் தங்கள்
ஆசிரியம் வாழ்க வாழ்கவே!!

கண்ணியமும் கட்டுப்பாடும்
தெள்ளிய சீர் அறிவும் கொண்டே
மாசறு புகழ் பயக்கும் தங்கள்
நல்-ஆசிரியம் ஒளிர்கவே!!

அபிராமி நகுலகுமார்.
மருத்துவ பீட மாணவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அகம் கவர்ந்த ஆசானுக்கு அன்புப் பாயிரம்

அன்பின் அகத்துருவே! பண்பின் சிகரமே! பாசத்தின்
பிறப்பிடமே !
கல்விச் சேவையில் காசினி தன்னில் கலங்கரை விளக்கே!
தரணியிலே தமிழ் வளர்த்த மாண்பு கொண்ட ஆசானே!
ஆசிரிய ஆலோசகராய்ப் புகழ் பூத்து விளங்கிய உத்தமனே!

மாணவர்கள் மனங்களில் மகிழ்வான ஆசானே!
ஆசிரியர் உள்ளங்களில் உவப்பான ஆலோசகரே !
குவலயம் தன்னில் குன்றிலிட்ட தீபமே! நீங்கள்
குதூகலமாய் என்றென்றும் வளமுடன் வாழ்ந்திடுவீர்.

சங்கத் தமிழதனால் சந்தோஷமாய் வாழ்த்துகிறேன்
இன்பத் தமிழ் இதனால் இங்கிதமாய் வாழ்த்துகிறேன்
பைந்தமிழால் பாசமுடன் வாழ்த்துகிறேன்
முத்தமிழால் முனைப்புடன் வாழ்த்துகிறேன்

நற்றமிழால் வாழ்த்துகிறேன் நலமுடனே இருந்திடுவீர்
தீந்தமிழால் வாழ்த்துகிறேன் திக்கெட்டும் புகழ் பரவி நிற்பீர்
வண்டமிழால் வாழ்த்துகிறேன் வண்ணமாய் வாழ்ந்திடுவீர்
செந்தமிழால் வாழ்த்துகிறேன் செங்கதிரோனாய் ஒளி வீசிடுவீர்

தேமதுரத் தமிழால் வாழ்த்துகிறேன் தேக ஆரோக்கியத்துடன் வாழ்ந்திடுவீர்
அருந்தமிழால் வாழ்த்துகிறேன் அவனியிலே அகல் விளக்காகிடுவீர்
காலங்கள் கரைந்தாலும் கோலங்கள் சிதைந்தாலும்
கடல் நீர் வற்றும்வரை மேதினி கதிரை இழக்கும் வரை
மேகம் மழை பொழியும்வரை மூச்சு ஓயும்வரை
வாஞ்சையுடன் வாழ்க வாழ்க என வாழ்த்துகிறேன்

திருமதி. கிருஷ்ஷாந்தி சிவகுமார்
மாணவியும் ஆசிரியையும்
கிளி/தர்மபுரம் மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கற்றல் - கற்பித்தற் பயணங்களில்....











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எம் சிந்தையில் வாழும் ஆசான் வாழ்க...

கடந்த 30 வருடங்களாகக் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியில் மிகச் சிறப்பானதும் வளர்ச்சிப் பாதைக்குமான வேரினை இம்மண்ணில் ஊன்றிய கல்விமான்களுள் கணபதிப்பிள்ளை கிருஸ்ணமூர்த்தி ஆசானுக்கும் பெரும் பங்குண்டு. அவர் எத்துணை பங்காற்றியுள்ளார் என்பதை என்போன்ற தமிழாசிரியர்கள் நன்கறிவோம்.அந்த வகையில் தமிழ்ச்சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் எமது கிளிநொச்சி மாவட்டத்தின் தெற்கு வலயத் தமிழ்ப் பாட ஆசிரிய ஆலோசகர் திரு.கணபதிப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி ஆசானுக்கு எனது வாழ்த்துக்களும், நன்றிகளும் உரித்தாகட்டும்.

தமிழரின் பெரும் சொத்தாகிய கல்விக்காக நீண்ட காலம் அயராது உழைத்துப் பல கல்விமான்களையும், நன்மாணாக்கர்களையும் உருவாக்கிய பெருமை அவருக்குண்டு. தற்போது தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றி ஓய்வு பெற்று செல்லும் எங்கள் ஆசானை இவ்வேளையில் நினைவுகூர்ந்து பார்க்கிறேன். எல்லோரிடமும் இனிமையாய் பழகும் குணமும் இளமைத் துடிப்பும், தமிழ் ஆர்வமும், கடமையில் ஆரவாரமும் மிக்கவரே எங்கள் கிருஸ்ணமூர்த்தி ஆசான். சேவைக் காலத்தில் அன்போடு மாணவர்களிடம் பேசுவார். எந்த ஆசிரியர் என்றாலும் உபசரித்து உதவுவார். அவரிடம் பயின்ற மாணவர்களுக்கும் சில ஆசிரியர்களுக்கும் அவரது ஆளுமை எத்தகையது என்பது விளங்கும்.

அவரிடம் கற்கும் மாணவர்கள் எத்துணை இன்பம், இனிமை பெறுவார்கள் என்பதை நான் கண்ணாரக் கண்டுள்ளேன். சக பணியாளராக அவரிடம் கற்றல் கற்பித்தல் சார்ந்த பெறுமதி மிக்க பயன்களை அடைந்த பயன் எனக்கும் சிறிதுண்டு. அவருடைய அர்ப்பணிப்புக்கும் ஆலோசனைகளுக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்.

தன் கல்விச் சேவையை சேவை காலத்தில் வழங்கினார் இனியும் வழங்குவார். இன்னும் கிளிநொச்சி மண்ணுக்கு தனது சேவையை வழங்கி எங்கள் சமூகத்திற்கும் பூரண ஒத்துழைப்பினை வழங்கி எம்மண்ணை முன்னேற்றுவார் என்று கூறி ஆசானே! நீவிர் பல்லாண்டு வாழ்க! வளர்க நின் சேவை! மலர்க! என வாழ்த்துகிறேன்.

*திரு.திருமதி.மயூரன் ரிலக்ஸனா*
*தமிழாசிரியர்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மழையிற் கரையும் மண் நான்
### (அனுபவப் பகிர்வு)

காதலிப்பது இலகு ஆனால் காதலிக்கப்படுவது என்ன அத்துணை இலகுவா? ஒரு தலைவன் தலைவியிடத்திலோ அல்லது தலைவி தலைவனிடத்திலோ மயங்கிக் கழிப்பெருங் காதல் கொண்டு தனிமையிற் கூடி மகிழ்தலென்பது அத்துணை எளிதா? மறு ஜென்மத்திற்குமான ஒருமித்த காதல் என்பது பல போராட்டங்களின் பின்னரே காதலர்க்கு வாய்க்கும். இதுதானே சங்ககாலம் தொட்டு நாம் கண்டுணர்ந்த காதலின் சாரம். காலங்காலமாய் இந்தக் காதலுக்குத்தான் எத்தனை வீராப்பு. காலங்கள் மாறுகின்றது. ஆனால் இந்தக் காதலும் காதலிக்கப்படுதலும் மாறவில்லையே? அது என்ன புதுமை? காதல் இருபாலாருக்கு மட்டுமல்ல, அஃறிணைக்கும் அஃது சொர்க்கம் தான். அன்பின் வழியே காதல் பிறக்கிறது. காதலின் வழியே பக்தி பெருக்கெடுக்கிறது. என் அன்பும் என் பக்தியும் ஒருவகைக் காதல்தான்.

உலகியற் காதலும் தெய்வீகக் காதலும் தமிழ் இலக்கியங்களில் எட்டுத்தொகை பத்துப்பாட்டாலும் நாயன்மார் ஆழ்வார்களின் எண்ணற்ற பாடல்களாலும் அறியப் படுகின்றன. திருநாவுக்கரசர் தன்னை அடிமையாகவும் சிவனை அரசனாகவும் தொழுது தாச மார்க்கத்தில் நின்று முத்தி பெற்றார். திருஞானசம்பந்தரோ சற்புத்திர மார்க்கத்தில் தன்னை மகனாகவும் சிவனைத் தந்தையாகவும் பாவனை செய்தார். அழகன் சுந்தரனோ தோழமையில் சக மார்க்கம். மணிவாசகனோ கைக்கிளையும் பெருந்திணையும் நனி சொட்டச் சன்மார்க்கத்தில் திருவாசகம் மலர்ந்தான். கிருஸ்ணமூர்த்தி ஆசான் பற்றி நான் எந்த நெறியில் நின்று பாடுவேன். என்ன மொழி செப்புவேன். நமக்குள் இருந்த உறவு நிலைகளுக்குத்தான் எவ்வடிவம் கொடுப்பது. அந்த உறவுக்குத்தான் எத்துணை வல்லமையும் வடிவங்களும். அதனைத் தந்தை மகன் உறவென்பதா? அல்லது அவர் கடமை செய்யும் பாணியை நேசிக்கும் காதலன் என்பதா? அல்லது பலரோடும் பழகும் பண்புமிக்க குணத்திற்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையென்று தாச மார்க்கத்தில் நின்றொழுகுவதா? எதைத்தான் சொல்லுவது. பணி செய்யும் நேரத்தில் அவரை அரசனாகக் கண்டதுண்டு. அதன்வழியே எம்மையும் ஆட்கொண்டதுண்டு. பணி தவிர்ந்த நேரங்களில் பச்சைப் பிள்ளை போல பழகியதுமுண்டு. தமிழ் பற்றி ஆராயுங்கால் காதலர்கள் போல் கருத்தொருமித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களித்ததுமுண்டு. அடடா…! செம்புலப்பெயல் நீர் போல் நமக்குள் எத்துணை அன்பு கலந்திருக்கிறது.

ஆசிரியத் தொழில் கிடைத்து நான், கால்களில் இறக்கை கட்டிப் பறந்து திரிந்த காலமது. ஒருநாள்கிளி/கண்ணகையம்மன் வித்தியாலயத்தில் மேற்பார்வைக்காக வெளியக மேற்பார்வை (Team) வரப்போகின்றது என்று ஓர் பெரும் சப்தமும் பரபரப்பும் என் காதுகளில் எட்டுப்பட்டது. நான் அதுவரையில் "ரீம்" வருவதையோ? மேற்பார்வை செய்வதையோ அனுபவித்ததில்லை. அதனால் அது எப்படியிருக்கும் என்று அனுபவித்துவிடவேண்டும் என்ற துடிப்பு மட்டும் உயிர்த்துக் கொண்டேயிருந்தது. "ரீம்" பற்றிய கனவும் பயமும் வந்து ெ காண்டேயிருந்தது, அதே வேளை "ரீம்" பற்றிய ஏக்கமும், கலக்கமும் ஓர் இனம்புரியாத மகிழ்ச்சியையும் பரபரப்பையும் கொடுத்தது.

அன்று அதிகாலை, வழமைக்கு மாறாகச் சற்று நேரத்திற்கே பாடசாலை சென்றுவிட்டேன். நான் மட்டுமல்ல சக ஆசிரியர்கள் எல்லோருமே சென்று பிரசன்னமாகிவிட்டோம். என்ன அதிசயம் எமக்கு முன்பே கிருஸ்ணமூர்த்தி எனும் ஆறடி ஆண்மகன் பொன் மலையாம் மகாமேரு போல் வலிமையோடு வாசலில் நின்றிருந்தார். "முகஸ்துதியாய் ஒரு வணக்கம் வைத்தோம்" நானும் வைத்தேன். கையெழுத்து வைத்துவிட்டு நான் வகுப்பறைக்குள் நுழைகிறேன். பிள்ளைகளோடு பிள்ளையாக ஆசானும் என் வரவுக்காகக் காத்திருந்தார். எனக்குக் குறிஞ்சி நிலத்தில் முன் பின் காணாத தலைவனைக் கண்ட தலைவியின் பரபரப்புத் தொற்றியது.

குறிஞ்சி நிலத்தில் அங்குமிங்கும் பறக்கும் பட்சிகள் அடைமழையில் நனைந்து, கூனிக்குறுகி, பறக்காது, அழகிய செந்நெல் கொறிக்காது அடங்கியிருப்பது போல என் மாணவச் செல்வங்கள் வகுப்பில் கூனிக்குறுகியிருந்தார்கள். வாலால் தொட்டும் தூண்டில் முள்ளென நீண்டு வளைந்த தம் நீள் அலகால் முத்தமிட்டும் நெற்பயிர்களை முட்டிச் சிந்தி இறக்கைகளால் கைகள் கொட்டி மகிழ்ந்து பறந்து திரியும் கிளிகளை விரட்டி விரட்டிக் கைகள் சலித்து நிற்கும் தலைவியின் நிலை போல என் வகுப்பறை வழமைக்கு மாறாக அமைதியாக இருந்தது, சோபையிழந்து இருந்தது. எனக்கும் என் செல்வங்களுக்கும் பேச நாவோ வார்த்தைகளோ எழவில்லை. நிலைமையை மாற்றத் தோழர்களும் இல்லைத் தோழிகளும் இல்லை. மூங்கில் போன்ற என் தோள்களும் வெற்றியிழந்து வாடியிருந்தது. எங்கிருந்தோ வந்த நெய்தல் நிலக் குளிர் காற்றுக்கூட என்னைக் குளிர்மையூட்டவில்லை. கழுத்தில் மாணிக்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கள் கதிர் பரப்ப கண்களில் கூரிய வேலெனப் பார்வை வீச என் முன்னே அந்த அறுபது வயதை நெருங்குகின்ற இளைஞன் அமர்ந்திருந்தார். அதுதான் இந்த அமைதிக்குக் காரணமோ? ஆனால் அவர் ஒன்றும் அச்சம் தருகின்ற சூர்மலைநாடன் அல்லன். அவரைச் சூழ்ந்தாருக்குத் தெரியும் அவரைப் பற்றிய அனுபோக இலக்கணங்கள். அடி, அம்மட்டோ? அவ்வேளையில் கிருஸ்ணமூர்த்தி ஆசான் கலித்தொகைச் *"சுடர்த்தொடி கேளாய்.."* சிறுபட்டி போல எனக்குத் தென்பட்டார். அது எனக்குப் புதிதாகவும் புதுமையாகவும் இருந்தது. ஆனாலும் என் மேலும் என் தமிழ் மேலும் கொண்ட அசைக்க முடியாப் பெரு நம்பிக்கையால் கற்பிக்கத் தொடங்கினேன்.

அவர் என்னையும் என் அருமைத் தமிழையும் இரசித்துக் கொண்டிருப்பதை ஒரு ஆசிரியனாக உணர்ந்தேன். ஆனால் எனக்கோ, புள்ளிமான்களை விரட்டிய சிங்கக் குருளை போல இருந்தது அவரது இருக்கை. எனக்குப் பிரத்தியேகமாகப் பேச்சு வரவில்லை. இல்லை எப்படித்தான் பேச்சு வரும்? என்ன இருந்தாலும் மேற்பார்வையாளனல்லவா? இதற்கு முன் நான் கண்டிராத ஒரு பயமும் பதட்டமும் என் உதடுகளைப் பாடவேளை முழுவதுவே கவ்விக்கொண்டிருந்தது. ஆனால் அவர் ஓர் அரசனைப் போல என் முன் இருந்தார். என்னிடம் பேசத்தொடங்கும் போது மாத்திரம் இரவலர் போல பேசத்தொடங்கினார். என்ன ஒரு முரண்பாடு. "சிறிய சிறிய நெற்பயிரிலே சிறகடித்துச் சிறகடித்து வயிறு நிறைக்கும் சின்னஞ் சிறு கிளிகளை விரட்டும் பெண் மயிலே.. உன் கையில் உள்ள எறிகவண் கொண்டு கிளிகளைத் தானே விரட்ட முடியும் உன்னை நேசிக்கும் என்னை விரட்ட முடியுமா? சொல் என் அச்சம் தரும் படியான அணங்கே..! என்று தலைவியிடம் தலைவன் கேட்பது போல என் முன் அமர்ந்திருந்தார். நான் எறிகவண் வைத்திருக்கவில்லை வெறும் சுண்ணாம்பாற் செய்த வெண்கட்டிதான் வைத்திருந்தேன். எனக்கு உடல் கூசிற்று. மழை பெய்யப்பெற்ற மண் நெகிழ்வுற்றுக் கரைவது போல என் உள்ளமும் கரைந்தது. என் நிலையை அவர் அடையாளம் கண்டு விடுவாரோ என்றஞ்சி என் வாய் இதுவரை சொல்லியிராத உடலோடும் உயிரோடும் ஒட்டாத சொற்களால் மனதைத் தோழியாக்கி அடிக்கடி எனக்கே ஆறுதல் சொல்லிக்கொண்டேன்.

பயந்து வெருளும் பெண் மான் ஆண் மானின் அணைப்பிலிருந்து விடுதலை பெற்றபின் துள்ளி எழுவது போல "தச்சன் செய்த சிறுமா வையம்.." எனும் குறுந்தொகைச் சங்கப் பாடலை மாணவர்களுக்கு நடித்தும் படித்தும் கற்பித்துக் காட்டினேன். என்னுடைய வலிமையைக் கண்டு அவர் தலைவியைத் தழுவக் காத்திருக்கும் தலைவன் போல காதல் பூத்து நின்றிருந்தார் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத் தெரிந்தது. அவருக்கான நேரம் மணிக்கோட்டைத் தாண்டியதும் எங்கிருந்தோ எங்கள் பாடசாலையின் மணி அலறியடித்தது. அம்மணியொலி என் நெஞ்சில் மலையன்னை தரும் தாய்ப்பால் போல் என் காதுகளைக் குளிர்வித்தது. முதல் மேற்பார்வை பல ஆசிரியர்களுக்கு அப்படித்தான் போலும். அவரது கைகள் பதிவேட்டுப் புத்தகத்தில் பல்லிளிக்கத் தொடங்கியதை நான் கண்டுகொண்டேன். கடைக்கண்ணாலும் பார்த்துக்கொண்டேன். அது எனக்கான கட்டியணைப்பின் அட்சரங்கள் என்பதை என்னைப் பற்றிப் பலரிடமும் பின்னாளில் புகழ்வதனுடாக அறிந்து கொண்டேன்.

மேலதிகமாகச் சில நிமிடங்களை எடுத்துப் பேசத் தொடங்கினார். இப்போது நானோ பின்வரிசையில் பேரரசனோ? முன் வரிசையில். என் பள்ளி மான்களுக்கு என்னைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார். "என் இத்துணை ஆண்டு கால மேற்பார்வை அனுபவக் காலத்தில் உங்கள் செந்தூரன் சேர் போன்ற ஓர் கலைத்திறன் மிக்க பெறுமதியான ஆசிரியனைக் கண்டதில்லை" என்றார். உண்மையில் அது முகஸ்துதியல்ல அவரின் உள்ளத்தொலிகள் அவையென்று இன்றுவரை என்னைக் காணும்போதெல்லாம் சொல்லி மகிழ்வார். அந்தக் கணமே நான் அவருக்கு அன்பனாகிப்போனேன். அந்தப் புள்ளிதான் நான் அவரின் நம்பிக்கைக்குரியவனாக மாறிய தருணம் என்றுகூடக் கூறுவேன். பின்னர் எத்துணை கருத்தரங்குகளுக்கு என்னை வளவாளராக அழைத்து என் புகழைப் பிரசவித்தார் என்பது எனக்கு இன்று வரை ஞாபகத்திலில்லை. ஆம் அவரிடம் வெறும் நான்கு ஆண்டுகளே நான் பட்டை தீட்டப்பட்டேன். அதனால் தான் என்னமோ இன்றுவரை ஒளிர்ந்து கொண்டிருக்கிறேன். எந்த மார்க்கத்தில் என்று தெரியாது ஆனால் அவருக்கும் எனக்குமான அன்பு ஆழமான பெருங்காதலைத் தாண்டியது. அப்பா பிள்ளை உறவைப் போன்றது. ஆண்டான் அடிமையைத் தாண்டியது. ஆனால் ஒன்று சொல்வேன். அவரைக் காணும்போதெல்லாம் அன்பால் மழை பெய்யும் போது கரையும் மண்மேடு போல நான் கசிந்துருகுவேன். அவர் என்றும் வாழ்கவென்று போற்றுவேன்.

*திரு க. செந்தூரன் B.A Tamil (Hons), M.A®*
*ஆசிரியர்*
*கிளி / இராமநாதபுரம் கிழக்கு ம.வி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசானை வணங்குவோம்

உலகின் முதன்மை பெற்றவர் இறைவன். எழுத்தில் முதன்மை பெற்றது அகரம். ஆக அந்த அகரத்தைக் கற்றுத் தரும் ஆசிரியரும் இங்கு இறைவனே. அதனால்தான் மாதா, பிதா, குரு தெய்வம் என்று எமது மூதாதையர் இறைவனுக்கும் முன்பாக ஆசானையே வைத்திருக்கின்றார்கள்.

*உணவு கொடுத்திடும் உழவன்*
*உயிர் காக்கும் மருத்துவன்*
*நாட்டைக் காக்கும் போர்வீரன்*
*நாடு போற்றும் தொழிலாளி*
*மொழி ஏற்றும் படைப்பாளி*
*வழியமைக்கும் பொறியாளன்* அனைவருக்கும் ஒரு ஏணியாய் வாழ்வில் தோணியாய் இருப்பவர் ஆசான். மாணவர்களது உயர்வு கண்டு அகம் மகிழும் ஒரு உறவு என்றால் அது ஆசானே. இந்த நேரத்தில் நாம், ஆசான் என்பவரின் பிரம்மாண்டத்தை நினைத்துப் பார்த்திடலாம்.

**சங்ககாலமும் ஆசானும்**

முதற்சங்கம்,இடைச் சங்கம், கடைச்சங்கம் என்று மூன்று சங்கங்கள் இருந்தன. இவையே தமிழர் வாழ்வியலையும் தமிழையும் நெறிப்படுத்தி வந்தன. இவற்றில் சங்க இலக்கியங்கள், அவற்றைப் பற்றிய ஆய்வுகள் நடந்தேறின.

முதற் சங்கத்தில் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் (சிவன்), குன்றெறிந்த முருகவேள், அகத்தியர் போன்றோர் இருந்ததாகவும் 4440 வருடங்கள் அது நடந்ததாகவும் இறையனார் களவியல் நூல் கூறுகின்றது.

10,000 வருடங்களுக்கு மேற்பட்ட எமது தமிழரின் வாழ்வியல் வரலாறு கடல்கோளினால் அப்படியே அழிக்கப்பட்டு விட்டது. அந்த முதற் சங்க காலத்து தமிழரின் வாழ்வியலை எமக்கு சுருக்கமாக ஒரே ஒரு நூலில் தந்து நிற்பவர் தொல்காப்பியர்.

தொல்காப்பியம் ஆனது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்று மூன்று வகையாகப் பிரிந்து இருப்பதும் இதுவே எமது தலையாய இலக்கண நூல் என்பதும் எல்லோரும் அறிந்ததே. ஆனால் அந்தப் பொருளதிகாரம் தான் எமது 10,000 வருடங்களுக்கு முந்தைய பண்டைய மூதாதையரின் வாழ்வியலைக் காட்டி நிற்கின்றது. இப்படி ஒரு பிரம்மாண்டத்தை தந்து நிற்கும் தொல்காப்பியரின் ஆசிரியர் யார் ? அவர் எப்பேர்ப்பட்டவர்? என்ற கேள்வி எம்மில் தோன்றுகிறதல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க இலக்கியங்களான அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை போன்றவற்றில் ஏழு பாடல்களை ஈழத்துப் பூதந்தேவனார் என்னும் புலவர் பாடி இருக்கின்றார். இவர் மதுரை கடைச் சங்கப் புலவருள் ஒருவர். ஈழ நாட்டிலிருந்து பாண்டிய நாடு சென்று மதுரை கடைச் சங்கத்தில் புலவராய் இருந்து இலக்கியம் புனைந்தார். தந்தை ஈழத்துப் பூதன் என்பாரோடு மதுரை வந்து கற்றுப் புலவர் ஆனார் என்றும் கூறுவதுண்டு.

இவர் சங்க இலக்கியத்திற்கு தனது பெரும் பங்கை செய்திருக்கின்றார். இவர் ஈழத்தில் இருந்து மதுரைக்கு போய் கடைச்சங்கப் புலவராக இருந்திருக்கின்றார். அப்போ, இவரது வழித்தோன்றல்கள் எங்கே? ஈழத்தில் இவர் போன்ற மிகப் பெரும் ஆசான்கள் எங்கே? இவர் போன்றவர்களை ஆசானாகக் கொண்ட மாணவர்களின் இலக்கியங்கள் எங்கே?

சங்க காலத்தில் இருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை எந்தவித ஈழத்து இலக்கியப் பாடல்களோ பதிவுகளோ தோன்றவில்லை. ஏன் என்ற கேள்வி எம்முள் எழுகின்றது அல்லவா? நிச்சயமாகத் தோன்றியிருக்கும். ஆனால் அவை திட்டமிட்டு அழிக்கப்பட்டன என்பதே ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது என்பது வேறு கதை. ஆக ஒவ்வொருவரது வாழ்வின் உயர்விலும், வழிகாட்டியாகவும், நன்னெறி காட்டுபவர்களாகவும் ஆசான்கள் இருக்கின்றார்கள்.

தொன்று தொட்டு பண்டைய காலத்திலிருந்து ஆசான்களை இறைவனாக வணங்கும் மரபு எம்மில் இருந்து வந்திருக்கின்றது. ஆனால் வேதனைக்குரிய விடயம் என்னவெனில், இப்பொழுது அவர்களை மதிக்கும் பெரும் மரபு எம்மிடையே அருகிக் கொண்டு போகின்றது.தமிழர்கள் ஆகிய நாம் ஆசான்களை வணங்கும் நற்பண்பை எம் வாழ்நாள் முழுதும் கடைப்பிடிப்போம். எமது இளம் சந்ததியினருக்கும் சொல்லிக் கொடுப்போம்.

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*

என்ற எமது திருவள்ளுவ ஆசானின் கூற்றுப்படி, செய்ந்நன்றி மறவாது ஆசான் எனும் அறிவை, ஆச்சரியத்தை, பிரமாண்டத்தை நாம் என்றும் தொழுவோம்.

இன்றைய நன்நாளில், எம் விழா நாயகன், நம் நல் ஆசானை வணங்குவோம்.

*ஜெயஸ்ரீ சதானந்தன்*
*பிரித்தானியா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறப்பு (ம்) எடுப்பு (ம்)



சந்தியில்
நிற்கும் தம்பி
சற்று நேரம்
கவனி
இம்மண்ணின்
ஆத்மா பேசுகிறேன்

கல்லும் முள்ளும் கடந்து
காடேகி விறகறுத்த
கந்தப்பர் பேரனா நீ
அந்த ஆள் சைக்கிளிலே
வான் முட்ட விறகு வைத்து
பெடல் மிதித்துப் பிழைத்து
வாழ்ந்தார்
சுள்ளித் தடியும்
குனிந்தெடுக்க மாட்டாமல்
குந்தி இருக்கும் உன் நிலை
கண்டிருந்தால்
வைர மரம் பிளந்த கோடரி
உன் குரல் வளையைத்
தொட்டிருக்கும்

வான் நோக்கிக் காத்திராமல்
மண் வயிரறுந்து
சேட்டமில்லா நிலத்தையும்
தீர்க்கமாக்கிப் பயிர் வளர்த்து நின்ற
பச்சையம்மாள் பேரனா நீ
கொச்சைத் தமிழ் பேசி
வீதியிலே அலைந்து கூத்தாடும்
உன்னைக் கண்டால்
வெற்றிலை பாக்கோடு
சுண்ணாம்பும் சேர்த்து
சிவப்பான உமிழ் நீரை -உன்
முகத்தில் உமிழ்ந்திருப்பாள்
வாழ்க்கையே போராகி
வறுமையே வாழ்வாகி
வைரம் பாய்ந்த நெஞ்சான்
வைகுந்தன் மகனா நீ

புதுப்பிறப்பெடுத்து
பிள்ளையின் நலன் காக்க
கைகளைக் கோமணமாக்கி
குந்தியிருந்தான் உன்னப்பன்
முகம் கழுவித் தலைவாரா
தரித்திரமாய் உன்னைக் கண்டிருந்தால்
தோட்டத்திற்கு உரமாக்கி
தலை நிமிர்ந்து நின்றிருப்பான்
மாற்றான் முன்னே
மானமிழக்க அங்கலாய்த்து
இறந்து போன எங்கள்
அன்பரசி மகனா நீ

வீதியோரம் நின்று
வெறி நாய் போல் அலையும்
சித்தம் கலங்கிய
பெண் பித்தன் நீ
என்று தெரிந்திருந்தால்
பண்பாடு காத்து நின்ற
பத்தினித் தெய்வமவள்
விழி விரித்து -உன்னை
உயிரோடு எரித்திருப்பாள்
நீதிநெறி தவறாத
சத்தியத்தின் பெரும்புதல்வன்
சரித்திரமாய் இறந்து போன
சந்திரனின் மருமகனா நீ?

கள்ளமண் அகழ்ந்து
கஞ்சாச் செடி வளர்த்து
கசிப்பில் மூழ்கும் -உன்
கள்ளத்தனம் கண்டிருந்தால்
வெங்காயம் வெட்டுகின்ற
வீட்டுக்கத்தி ஒன்றால் -உன்
வேர் அறுத்து நின்றிருப்பான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்ட நடுநிசி எனினும்
நாலு பேர் நடுவிருந்தும்
சொற்திறம்பாக் கன்னி
செல்வியின் பொறாமகனா நீ?
காதல் என்ற போர்வையிலே
காமவெறி அதிகரிக்கக்
காடு மேடு பாராது
கலவிக்காய் அலையும் உன்னைக்
கண்களால் கண்டிருந்தால்
கண்டதுண்டமாய் அரிந்திருப்பாள்.
மூத்த குடி என்றும்
முன் தோன்றிய இனம் என்றும்
மார்தட்டி நிற்கும்
மறத்தமிழன் நான்
என் இனமா நீ?

ஐந்து பெண்கள் உடன் பிறந்தும்
அன்பாய் உடனிருந்தும்
ஆளாகி வளர்ந்த பின்
அணைத்திடத் துணியாத
அண்ணன் நான் -நீ
வீதியில் வழிமறித்து
அக்காவோ அன்னையோ
யாதொன்றும் தெரியாமல்
மோதிவிட நினைக்கிறாய்
குழந்தை என்றாலும் குமரி என்றாலும்
வேறுபாடு அறியாது
வெறுமனே கனைக்கின்றாய் -உன்
சாரமற்ற வார்த்தைகளைச்
சரி என்று நினைக்கும்
பேதையர் சிலர்
பின்னால் திரிவதால்
புதுப் பட நாயகன் போல்
பந்தாவாய் அலைகிறாய்

முத்தமிழும் மணக்கும்
சிற்பிகள் வாழும் பூமியிது
வேறொருவன் கண்டறிந்த
மாயப் பெட்டிக்குள்
மாயமாகிப்போய்
ஆடையற்ற உருவங்கள்
தேடித் தொலைகிறார்
சகிக்க முடியாத முகத்தைச்
சாதனை போல் படமெடுத்து
முகப்புத்தகத்தை நிரப்புகிறாய்
முடிந்தால் முன் வா
பண்பாட்டின் பழுதினைத் துடை

அன்னை வயிற்றினுள்ளே
அடங்கியிருந்து
கருவறை தாண்டி
பூமி தொட எண்ணி
மூச்சடக்கி மூழ்கி
இரத்தமும் நீரும் சேரத்
தாயின் பிறப்பு உறுப்புக் கிழித்து
பூமியைத் தொட்டவன் நான்
என்னது-பிறப்பு.
வைத்தியன் ஒருவன் வயிற்றில் கத்தி
வைக்க
முயற்சியே செய்யாமல்
முழுதாய் வெளி வந்தவன் நீ
உன்னது-எடுப்பு

எடுத்த எடுப்பில்
எல்லாமே மறந்து விட்டாய்
திக்கெட்ட முடியாத
திக்குவானக் காட்டில்
கண் கட்டப்பட்டுக்
கனதியோடு அலைகின்றாய்
நிதர்சனம் என்று ஒன்று உண்டு
நீயாய் மாறாமல்
நல்லது ஏதும் நடக்காது
அப்பாடா..
நீ வாழும் அசிங்கப் பூமியில் - இப்போ
நான் இல்லை என்பதே
எனக்குள்ள நிம்மதி

திருமதி. யூடி சண்முகநாதன்
ஆசிரியை
கிளி/இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உளவியல் அறிவு ஆசிரியருக்கு ஏன் அவசியமாகிறது.

உளவியல் என்னும் பதம் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அதன் மூலம் உண்மையில் கருதப்படுவது யாது? என்பது குறித்துப் பல்வேறு கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. மனிதனின் சகல எண்ணங்களையும் சகல செயற்பாடுகளையும் பகுப்பாய்வு செய்யக்கூடிய ஒரு விஞ்ஞானமே உளவியலாகும் என்பது மக்களின் பொதுவான நிலைப்பாடாகும். Study (ology) & soul (phyche) or mind ஆகிய பதங்களின் சேர்க்கையே. உளவியல் எனும் பதமாகும். நாம் உளவியல் என அழைக்கும் விஞ்ஞானம் ஆங்கிலத்தில் Psychology எனப்படுகிறது. அது PSYCHE (சைக்கி) மற்றும் logos (லோகோஸ்) ஆகிய இரண்டு கிரேக்கச் சொற்களாலானது.

உளவியலின் கிளைகள் (Branches of Psychology) பல காணப்படுகின்றன. பிறழ்நிலை உளவியல், நடத்தை உளவியல், உயிரியல் உளவியல், அறிகை உளவியல், ஒப்பியல் உளவியல், விருத்தியுளவியல், பரிசோதனை உளவியல், சட்ட உளவியல், ஆளுமை உளவியல், சமூக உளவியல், சீர்மிய உளவியல். அந்த வகையில் இவற்றின் ஒருவகையாகிய கல்வி உளவியல் பற்றிச் சிறிது நோக்குவோம்.

கல்வி உளவியல் என்பது உளவியல் பாடப் பரப்பில் தோன்றித் தனியாக ஒரு கிளையாக விருத்தியடைந்துள்ளது. பாடசாலைகள், கற்பித்தல்- , மாணவர், ஆசிரியர், பெற்றோர் நிர்வாகிகள் என்றவாறு பல்வேறு கல்வி சார்ந்த எல்லா விடயங்களிலும் அக்கறை காட்டுவது இப்பிரிவாகும்.

கல்வி உளவியலின் பிரதான குறிக்கோள், உளவியல் என்ன கருக்களையும் முறைகளையும் பயன்படுத்திக் - கற்பித்தல் தொடர்பான பிரச்சனைகளை விசாரணை செய்தலாகும். ***"கல்வி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பொதுவான உளவியலைப் பயன்படுத்துதல்"*** எனவும் இதனைக் குறிப்பிடலாம். எனவே பிரதானமான கருப்பொருள் கற்றலாகும். வினைத்திறன் மிக்க கற்றலுக்குத் தேவையான நிலைமைகளை உருவாக்கிக் கொள்வதற்குத் தேவையான முறைகளைக் கண்டறிதலே இதன் பிரதான குறிக்கோளாகும். கல்வியியல் தொடர்பாக எழும் பிரச்சினைகளை அணுகுவதற்கும் தீர்வுகளைப் வளப்படுத்துவதற்கும் கல்வி உளவியல் பயன்பாட்டுக்கு உட்பட்டு வருகிறது. கற்பித்தலைக் குவியப்படுத்தி **கல்வி உளவியல்** முன்னெடுக்கப்படும் போது அது **"ஆசிரியம் சார் உளவியல்"** (Pedagogical Psychology) என்ற பரிணாமத்தைப் பெற்றுக் கொள்கிறது.

கற்பித்தலில் எழும் நடைமுறை பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கும் தீர்வுகளை முன்னெடுப்பதற்கும் இந்த அறிகைப்புலம் துணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கிறது. - கற்பித்தல் தொடர்பான கருவிகளையும் சாதனங்களையும் உருவாக்க, தொடர்ந்து தேடல்களை மேற்கொள்ள, இடைவினை உறவை மேற்கொள்ள, மரபு வழியான - கற்பித்தல் என்ற கட்டுமானங்களைத் தகர்த்து மேல் எழுந்து வரவேண்டிய சமூகத் தேவைகளைக் கொண்டுள்ளது. எனவே கல்வி உளவியல் ஆசிரியத்துவத்தின் மேம்பாட்டுக்குரிய உளவியலாகிறது.

இக்கட்டுரையின் நோக்கத்திற்குள் நுழைவோம் என்றால், "உளவியல் அறிவு ஆசிரியருக்கு ஏன் அவசியம்?" என்னும் தலைப்பின் கீழ், அதன் அவசியம் பற்றி சிறிய தலைப்புகள் ஊடாக விளக்கம் செய்யப்படுகின்றன.

## உளவியல் ஆசிரியருக்கு ஏன் அவசியம்?

கல்வி உளவியல் தொடர்பான அறிவு ஆசிரியருக்கு - கற்பித்தற் பணிகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்குப் பெரிதும் உதவுகிறது. உளவியல் கற்ற ஒரு ஆசிரியருக்கும் உளவியல் கற்காத ஓர் ஆசிரியருக்குமிடையே நிறைய வேறுபாடுகள் காணப்படும். இவ்விருவகையினரும் கற்பித்தலில் ஈடுபடும் போது உளவியல் கற்ற ஆசிரியர் கற்பித்தலில் பல நுட்பங்களைக் கையாள்வார் மாணவர்களுடன் சேர்ந்து இயங்கும் முறை என்பன விசேடமாக அமையும். எனவே கல்வி உளவியலானது ஆசிரியருக்கு ஏன் அவசியம் என நோக்குவோம்.

## மாணவர்களின் தன்மையை விளங்கிக் கொள்வதற்கு

கற்றல் கற்பித்தல் செயன்முறையில் மாணவர்களை விளங்கிக் கொள்வது மிகவும் அவசியமான ஒரு பணியாகும். 'ஜோன் அடம்ஸ்' என்னும் கல்வியியலாளர் ***"கல்வி இரு அம்சங்கள் தொடர்பாகும் ஒரு செயல்முறையாகும்*** எனக் கூறுகின்றார். கற்கும் மாணவன் கற்பிக்கப்படும் பாடம் என்பவையே இவ்விரு அம்சங்களுமாகும். கற்பித்தல் பணியை வெற்றிகரமாகச் செய்வதற்கு ஆசிரியருக்குப் பாட அறிவு மாத்திரம் போதுமானது அல்ல. அவர் மாணவனைப் பற்றியும் நல்ல விளக்கத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். பிள்ளை சிந்திக்கும் விதம், பிள்ளை விருத்தியின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அப்பிள்ளையின் உள்ளார்ந்த திறன்கள் ஆகியவற்றை விளங்கிக் கொள்ளல் முக்கியமாகும். பிள்ளையை விளங்கிக் கொள்வதற்குக் கல்வி உளவியலானது ஆசிரியருக்குத் துணை நிற்கின்றது.

## மாணவர்களின் பல்வகைமையை இனம் கண்டு கொள்வதற்கு

தனியாளின் பல்வகைமையானது கல்விச் செயல்முறையில் கவனத்திற் கொள்ளப்படும் மிக முக்கியமான ஓர் எண்ணக்கருவாகும். ஆசிரியர், வகுப்பில் உள்ள அனைவருக்கும் கற்பிக்கும் போது, அவ்வகுப்பிலுள்ள ஒரு சில மாணவர்களே அதனை முழுமையாக விளங்கிக் கொள்கின்றனர். ஏனையோர் விளங்கிக் கொள்வதில் சில இடர்பாடுகள் காணப்படும். கவனயீனம் , நடத்தையில் பிரச்சினைகள், ஞாபகக்குறைவு, பலவீனம், விளங்கும் ஆற்றலின்மை, புலக் குறைபாடுகள் , மனவெழுச்சிப் பிரச்சினைகள் போன்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குக் காரணமாக அமையும் எனக் கூறப்படுகின்றது. இத்தகையோருக்குப் பொறுமையோடு உதவிசெய்வதும் கற்கக் கூடிய ஒருசூழ் நிலையை உருவாக்குவதும் ஆசிரியரின் முக்கிய பணியாகும். இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றைக் கல்வி உளவியலானது ஆசிரியரிடம் வளர்க்கிறது.

## மாணவரின் மனவெழுச்சி நெருக்கடிகளை இனங் காண்பதற்கு

கற்றலின் வெற்றியின் மீது கற்பவரிடத்தே காணப்படும் உளச் சுகாதாரத்தின் தன்மை செல்வாக்குச் செலுத்துகின்றது. மனவெழுச்சிப் பிரச்சனைகள், நெருக்கடிகள் போன்றவை உளச் சுகாதாரத்தின் மீது மறைவாகத் தாக்கம் விளைவிக்கும். மனவெழுச்சிகள் சரியாக வெளிக் காட்டப்படாமையால் உள நெருக்கடிகள் தோன்ற இடமுண்டு. பிறழ்வான நடத்தைகள் வெளிக்காட்டப்படவும் அது காரணமாகலாம். எனவே கற்பித்தலின் வெற்றிக்காக ஆசிரியர் தகுதி மாணவரின் மனவெழுச்சி விருத்தி மட்டங்கள் பற்றிய விளக்கத்தைப் பெற்றிருப்பது அவசியமாகும். இதற்கும் கல்வி உளவியலே உதவுகிறது.

## கற்றற் கொள்கைகள், முறைகள், நுட்பங்கள் பற்றிய அறிவைப் பெறுவதற்கு

கற்றல் நிகழும் விதம் தொடர்பான கொள்கைகள் கல்வி உளவியலில் அடங்கியுள்ளன. இக்கற்றற் கொள்கைகளுடன் தொடர்புடைய வகையிற் பல்வேறு கற்றல் முறைகள் இனங் காணப்பட்டுள்ளன. அவை பற்றிய தெளிவான அறிவையும் விளக்கத்தையும் கல்வி உளவியல் பயில்வதன் மூலம் ஆசிரியர் பெற்றுக் கொள்கின்றார்.

## மாணவரது உள்ளார்ந்த திறன்களைப் விருத்தி செய்வதற்கு

ஒவ்வொரு தனியாளிடத்திலும் பரம்பரை ஊடாகத் தலைமுறையினூடாகக் கிடைக்கும் பல்வேறு திறன்கள் பொதிந்துள்ளன. உள்ளார்ந்த திறன்களின் கூர்மையிலேயே உண்மையான கல்வி தங்கியுள்ளது. தனியாளின் பல்வேறு உள்ளார்ந்த கற்றல்களை அறிந்து கொள்வதால், அவ்வாற்றல்களைச் சரியான வழியில் நெறிப்படுத்தி மாணவரின் விருத்திக்காகச் செயற்படுத்துவதற்கு ஆசிரியருக்குக் கல்வி உளவியல் அறிவு துணை நிற்கிறது.

## கற்றலுக்கான ஊக்கலை வழங்கி வழிப்படுத்துவதற்கு

கற்பித்தலை விடக் கற்றலிலே இன்று கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது. ஆசிரியப்பணி மாணவனுக்குக் கற்றுக் கொடுப்பதல்ல அவனைக் கற்றலில் ஈடுபடுத்துவதாகும். மாணவனைக் கற்றலில் ஈடுபடுத்த வேண்டுமாயின் அவனைக் கற்பதற்கு ஊக்குவித்தல் வேண்டும். இதனால் கற்றலில் **ஊக்கல்** எனும் எண்ணக்கரு முக்கியம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. கல்விச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டின் வெற்றி அதற்காக வழங்கப்படும் ஊக்கலிலேயே தங்கியுள்ளது. இதற்காக ஆசிரியர் பல்வேறு ஊக்கல் முறைகளையும் அறிந்திருத்தல் வேண்டும். இதற்குக் கல்வி உளவியல் அவசியமாகின்றது.

## கற்றல் இடமாற்றம் நிகழும் வண்ணம் கற்பிப்பதற்கு

ஏதாவது ஒரு விடயத்தைக் கற்பதனால் ஏற்படும் பயிற்சி அல்லது அனுபவம் வேறு கருமத்தைச் செய்வதற்கு உதவுவது கற்றல் இடமாற்றமாகும். ஒருவர் ஒரு சந்தர்ப்பத்திற் பெற்ற கற்றலானது பின்னர் இடம்பெறும் சந்தர்ப்பங்களின் மீது காத்திரமான பங்களிப்பைச் செய்வதாக அறியப்பட்டுள்ளது. பாடங்களை ஒருங்கிணைத்தல் என்னும் எண்ணக்கரு இதனடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. ஆசிரியர் கல்வி உளவியல் பற்றிய அறிவைப் பெற்றிருப்பின் கற்றல் இடமாற்றம் நிகழக் கூடியவாறு தமது கற்பித்தலை ஒழுங்கு செய்ய முடியும்.

## ஆசிரியர், தம்மைப் பற்றிய விளக்கத்தைப் பெறுவதற்கு

ஆசிரியருக்குத் தம்மைப் பற்றிய விளக்கம் இருத்தலானது தமது பணியை வெற்றிகரமாக மாற்றுவதற்குப் பெரும் துணையாகும். தம்மிடத்தே காணப்படும் பல்வேறு திறன்கள், தேர்ச்சிகள் விருத்தி செய்துகொள்ள வேண்டிய அம்சங்கள் (பலம், பலவீனம்) ஆசிரியர் தொடர்பான விளக்கம், சுய மதிப்பீடு என்பவற்றை ஆசிரியரானவர் கல்வி உளவியல் மூலமே பெற்றுக் கொள்ளுகின்றார்.

## ஆலோசனை வழங்குவதற்கு

கல்விச் செயன்முறையில் ஆலோசனை கூறுவதும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. கல்வி நடவடிக்கைகள் ஈடுபட்டிருக்கும் பிள்ளைகள் பலர், பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். சில கற்றலுடன் தொடர்புடைய விடயங்களை விளங்கிக்கொள்வதிலும் பிரச்சினைகளாக இருக்கலாம். வேறு சில கல்விச் செயற்பாட்டில் காட்டும் ஊக்கம் அல்லது வீட்டு நிலைமை போன்ற தனிப்பட்ட பிரச்சினைகளும் இருக்கலாம்.

இவ்விரு சந்தர்ப்பங்களிலும் ஆசிரியர் ஓர் ஆலோசகராகவும் செயற்பட வேண்டியுள்ளார். அதற்குக் கல்வி உளவியல் ஆசிரியருக்குத் துணை செய்கின்றது. நவீன கல்வியின் எல்லைகள் பாடசாலைக்கு வெளியேயும் வியாபித்திருப்பதனால் பாடசாலையை விட்டு விலகும் பிள்ளைகள் தொடர்பாகவும் ஆலோசனைச் சேவை அவசியமாகின்றது. (உயர்தரப் பரீட்சைக்குப் பின்னர் பல்கலைக்கழக விண்ணப்பங்கள், கல்வியற்கல்லூரி விண்ணப்பங்கள் முதலியவற்றைப் பூரணப்படுத்தி) பாடசாலையை விட்டு விலகும் பிள்ளை தொழில் ஒன்றைத் தெரிவு செய்வதற்கும் அதனை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கும் தொழில் வழிகாட்டல் அவசியமாகும். எனவே இத்தகைய அறிவினையும் ஆசிரியர், கல்வி உளவியல் மூலமே பெற்றுக்கொள்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டுப் பணிகளை வெற்றிகரமாகச் செய்வதற்கு

கற்றல்-கற்பித்தலின் போது ஆசிரியர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மாணவர் செயற்பாடுகளைக் கணிப்பீடு மற்றும் மதிப்பீடு செய்தல் அவசியமானதாகும். அதன் மூலம் கிடைக்கும் பின்னூட்டல் ஆசிரியருக்கும் மாணவருக்கும் மிகவும் பயனுள்ளதாகும். கணிப்பீட்டு, மதிப்பீட்டுச் செயன்முறையை வெற்றிகரமான முறையில் நடத்திச் செல்வதற்காக ஆசிரியருக்குக் கல்வி உளவியல் உதவுகின்றது.

### ஏனைய மேலதிக விடயங்கள்

மாணவரது ஒழுக்கத்தைப் பேணல், ஆளிடைத் தொடர்புகளை வெற்றிகரமாகப் பேணல், தனியாட்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல், கல்வித்தரப்பினர் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல், ஒரு மாணவன் தவறு செய்தால் கடினமான உடற் தண்டனைகளை வழங்காமல் தவறு செய்வதற்குரிய காரணங்களைக் கண்டறிந்து அதனைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளைத் தேடல் முதலிய பணிகளுக்கு ஆசிரியருக்கு அவர் கற்ற கல்வி உளவியல் துணை நிற்கின்றது.

ஆசிரியர்களுக்கான கற்கை நெறிகள் எதனிலும் கல்வி உளவியல் என்னும் பாடப்பரப்பு முக்கியமானதாகக் கற்பிக்கப்படுகிறது. உளவியல் அறிவுடன் ஆசிரியர் ஒருவர் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுது அவருக்குப் பல பிரச்சினைகளுக்கு விடை கிடைத்து விடுகின்றது. அவர் கற்ற உளவியல் அறிவானது வகுப்பறையிற் பிரயோகிக்கப்படும் போது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் அவர்களின் நடத்தைக் கோலங்களும் மாறுபடும் என்பதிற் சிறிதும் ஐயம் இல்லை.

***உசாத்துணை நூல்கள்***

***கவிந்தன். க (2013) கல்வி உளவியல் அடிப்படைகள், கொழும்பு -குமரன் புத்தக நிலையம்.***

***பெனடிற் பாலன் (1999) கல்வி உளவியல் அடிப்படைகள், கொழும்பு - பூபாலசிங்கம் புத்தகசாலை.***

***முத்துலிங்கம். இ (1993)கல்வி உளவியல், கொழும்பு லங்கா புத்தகசாலை***

***சபா ஜெயராசா (2005) குழந்தை உளவியலும் கல்வியும், கொழும்பு பூபாலசிங்கம் புத்தகசாலை.***

திருமதி . ஜீவரஞ்சினி விவேகானந்தராசா
**B.A, PGDE, Med, SLTS I**
ஆசிரியை
கிளி / இராமநாதபுரம் மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலய முத்தமிழ் விழாவில் – 2017





## 2022ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர மாணவர்களுக்காக நடைபெற்ற தமிழ்க் கருத்தரங்கில்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊக்கல் அணுகுமுறைகள்

## அறிமுகம்

தற்காலத்தில் மனித வளத்தின் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ள ஊக்கல் கொள்கைகள் பல்துறை சார்ந்தோராலும் பிரயோகம் செய்யப்படுகின்றன. ஒரு தேவையை நிறைவு செய்வதற்காகச் செய்யப்படும் தூண்டுதலே ஊக்குவித்தலாகும். எந்தவொரு செயலின் வெற்றிக்கும் ஊக்குவித்தல் ஒரு தூண்டுகோலாக அமைகிறது. ஊக்கல் என்பது ஒரு தேவையை நிறைவேற்றும் வரை அல்லது ஓர் இலக்கை அடையும் வரை நடைபெறும் ஓர் உடல்-உளத் தொழிற்பாடாகும். ஒரு செயலைச் செய்வதற்கு எழுச்சியூட்டிப் பாராட்டி நெறிப்படுத்தும் செயல் ஊக்குவித்தல் எனப்படும். உயிர்களினது ஏதோ ஓர் இலக்கு நோக்கி மேற்கொள்ளப்படும் நடத்தையைத் தொடங்கி வைத்தல், தொடர்ந்து இயங்குதல், முடிவு பெறுதல் ஆகியவற்றிற்குக் காரணமாகும். உயிரியல், சமூகம் சார் காரணிகளே ஊக்கலாகும்.

## ஊக்கல் பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள்

ஊக்கத்தைக் குறிக்கும் Motivation (மோட்டிவேஷன்) என்ற ஆங்கிலச் சொல்லானது "Moveers" எனும் இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்ததாகும். இதன் அர்த்தம் "முன்னேறிச் செல்லுதல்" என்பதாகும். ஆகவே தான் **ஊக்கம்** என்பது **உயிரி செயற்படுதல்** என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது. ஊக்கலை வெவ்வேறு உளவியலாளர்கள் வெவ்வேறு விதமாக வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர்.

- மூர்பி (Murphy), "ஒவ்வொரு காரணமும் ஒவ்வொரு விளைவை உருவாக்கும் ஊக்கி என்பது, காரணமாகவும் அதனாலே ஏற்படும் நடத்தை விளைவாகவும் கொள்ளப்படுகிறது என்கிறார்.
- டால்மன் (Talman) "உயிரிகள் இலக்கினை அடைய மேற்கொள்ளச் செய்யும் போக்கே ஊக்கியாகும்" என்கிறார்.
- கெப்(Hebb) என்பவர் "ஓர் உயிரினைச் செயலாற்றத் தூண்டும் நிகழ்ச்சியை ஊக்கி" என்கிறார்
- ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி, "உளவியல், சமூகவியல் காரணிகள் ஏற்படுத்திய இலக்கை அடைவதற்கான நனவு மற்றும் நினைவிலித் தூண்டல்கள் ஊக்கம் எனக் குறிப்பிடுகின்றது.
- ஜி எம் பிளேயர்(G.M.Blair) ஊக்கல் என்பது "கற்றவரின் உள்ளார்ந்த ஆற்றல்களை அல்லது தேவைகளை அவரது சூழலிற் காணப்படும் பொருட்களின்பால் வெளிப்படுத்தும் ஒரு செயல்முறையாகும் எனக் குறிப்பிடுகின்றார்.
- Ball (1977) என்பவர், "அது யாதேனும் பெறுபேற்றைப் பெறுவதற்காக ஆட்களை வெளிப்படுத்தும் உந்துப் போக்காகும்" என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்டூகல் இயல்பூக்கற் கொள்கை

கல்வி உளவியற் கொள்கைகளுள் பிரபல்யம் வாய்ந்ததும் பழமையானதும் நடைமுறைச் சாத்தியம் மிக்கதுமான கொள்கையை வில்லியம் மக்டூகல் 1908 ஆம் ஆண்டில் "சமுதாய உளவியலுக்கான முகவுரை" என்ற நூலின் வாயிலாக முன்வைத்தார். இவரின் கருத்துக்கமைய இயல்பூக்கம் என்பது பிறக்கும் போதே ஓர் உயிரிடத்தில் அமைந்துவிட்ட இயல்பான ஓர் உள நிலையாகும். இது மரபு வழியாகவே மனிதனுக்குக் கிடைக்கின்றது. என்கிறார் மேலும் இயல்பாகவே எழும் மனித நடத்தைகளுக்கு அடிப்படையானவை இயல்பூக்கங்களே ஆகும்.

குறித்த ஓர் இயல்பூக்கமானது குறித்த மனிதனைச் செயற்படுத்தத் தூண்டும் போது மூன்று வகையான செயற்பாடுகளை உடல்- உள ரீதியாக ஏற்படுத்துகிறது என மக்டூகல் குறிக்கின்றார்.அவையாவன-

- அறிதல் / அறிகை - ஒரு விடயம் தொடர்பாக புலக்காட்சி பெறுதல்
- உணர்தல்/ தாக்கம் - குறித்த விடயம் தொடர்பாக மனவெழுச்சி பெறுதல்
- இயக்கம்/ தொழிற்பாடு- தொழிற்படுவதற்கான உந்தல்

இவை மூன்றையும் ஊக்கல் விசைகள் என மக்டூகல் குறிப்பிடுகின்றார்.
உதாரணமாக

- நாய்க்கு உணவை வைத்துவிட்டு அழைக்கும் போது விடயத்தை அறிகின்றது (அறிதல்)
- அடுத்ததாக உணவின் மேல் விருப்பம் கொள்கிறது (உணர்தல்)
- இறுதியாக உணவை உட்கொள்ள ஓடி வருகின்றது (இயக்கம்)

இதே போல் கற்றலில் ஊக்கப்படுத்துவதன் ஊடாக மாணவனை அடைவில், போட்டிகளில், பரீட்சைகளில் வெற்றி பெற வழி காட்ட முடியும். இவ்வூக்கல் விசையானது அனைத்து உயிர்களிடத்திலும் காணப்படுகின்ற போதிலும் மனிதரிடம் இப்பண்பு சிறப்பாகக் காணப்படுகிறது.

பிள்ளைகள் பிறக்கும்போதே எல்லா இயல்பூக்கங்களையும் கொண்டிருப்பதில்லை. அவர்களின் விருத்திப் பருவத்திற்கு ஏற்ப அவை ஏற்படுகின்றன. உதாரணமாக பிள்ளைகளின் கட்டிளமைப் பருவத்தில் பாலுக்கம் ஏற்படல்.
இயல்பூக்கங்களின் அளவு ஆளாளுக்கு வேறுபட்டிருக்கும் தன்மை கொண்டது.
உதாரணமாக- போரூக்கம் அதிகரிக்கும் போது சண்டையிடுபவனாகிறான்.

- மானுட ஊக்கங்கள்
- கற்றலுக்கான ஊக்கங்கள்
- கற்றல் ஊக்கங்களான ஆராய்வூக்கம், கட்டூக்கம் அல்லது ஆக்கவூக்கம், திரட்டூக்கம், குழுவூக்கம், தன்னெழுப்பூக்கம்/ ஆதிக்கவூக்கம், ஒதுக்கவூக்கம், சிரிப்பூக்கம் ஆகியன கல்விச் செயற்பாட்டுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டவை. மேலும் போரூக்கம், பாலுக்கம்,அருவருப்பூக்கம், தன்னடக்கவூக்கம், தன்னிழிவூக்கம் போன்ற 05 இயல்பு ஊக்கங்களையும் கற்றலுக்கு நேரடியாகப் பயன்படுத்த முடியாது எனினும் அவற்றினைக் கட்டுப்படுத்திக் கற்றலுக்குச் சாதகமான வகையில் மாற்றி அமைக்க முடியும்.

## சிக்மன் பிராய்ட்டின் உளப் பகுப்புக் கொள்கை

சிக்மன் ஃப்ரைட் என்பவர் முதலில் இக்கொள்கையை அறிமுகம் செய்தார். பிராய்ட்டே முதன் முதலில் நினைவிலி நடத்தை,நனவிலி ஊக்கல் ஆகிய கருத்துக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டவர். இவர் உள மருத்துவர் ஆவார். இவர் உளநோய்க்கு போலி உறக்கம் (Hyphosis)முறையில் கனவுகளை ஆராய்தல், சுயாதீன ஆய்வுமுறைகளில் வைத்தியம் செய்தார். இவர் நோயாளியின் நினைவு நிலையில் ஞாபகப்படுத்த முடியாத சம்பவங்களையும், பயங்களையும் போலி உறக்க நிலையில் நினைவுக்குக் கொண்டு வர முடியும் எனக் கண்டறிந்தார்.

குழந்தைப் பருவத்தில் நடந்த பல்வேறு சம்பவங்கள், பயங்கள் யாவும் நனவிலி உள்ளத்தினுள் சேருகின்றன. இவற்றை ஞாபகப்படுத்த முடியாது தம் உணர்வுகளை உள்ளத்தில் ஒடுக்குவர். இதில் உள்ள ஊக்கங்கள் நனவு நிலைக்குத் திரும்பி வர முயல்கின்றன என்கிறார். உளநோயாளியின் நடத்தை அவரின் சிறுவயதில் சில அனுபவங்களை நனவிலி நிலைக்குள் அமிழ்த்தி வைப்பதனாலே ஏற்பட்டது என்பது பிராய்ட்டின் கருத்தாகும்.

இன்பம் அனுபவிப்பதே குழந்தைகளின் குறிக்கோள் என்றும் இதற்குத் தடை ஏற்படும் போது எழுகின்ற ஊக்கல்கள் நனவிலி நிலையில் ஒடுக்கப்பட்டுப் பிறழ்வான நடத்தைகளிலும் ஆளுமைச் சீர்கேட்டிலும் முடிவடைகிறது என்ற பிராய்ட் கூறுகின்றார். இவர் பிள்ளைகளின் பாலியல் ஆசைகளே அநேகமாக இவ்வாறு ஒடுக்கப்படுவன என்றும் கூறுகின்றார்.

**சமூகக்கொள்கை**

சமூகக்கொள்கையானது ஊக்கல்கள் யாவும் பிறப்புரிமை சார்ந்தது இல்லை எனவும் அவை அனைத்தும் சூழல் சார்பானவை எனக் குறிப்பிடுகின்றது. சமூகத்தேவை பலவற்றை நிறைவு செய்ய உதவுகின்ற ஊக்கிகள் சமூகப்பழக்கத்தினால் ஏற்படும் ஊக்கிகள் எனப்படும். உதாரணமாக- தான் பிறரால் விரும்பப்படல்,மற்றவர்கள் பாராட்டைப் பெறல். இவை இயல்பூக்கற் கொள்கைக்கு எதிரானவையாகும்.இவை 02 வகைப்படும்.

1. பண்பாட்டுக் கோலக் கொள்கை
2. களக் கொள்கை

பண்பாட்டுக்கோலக்கொள்கை மார்க்கிரட் மீட்,றூத் பெனடிக்ற் போன்ற சமூக மானிடவியலாளர்களின் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டது.
களக்கொள்கை என்பது எமது ஊக்கல்களும் நடத்தைகளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எம்மைச் சூழவுள்ள சமூகக் குழுவின் அமைப்பு, வாழ்க்கைமுறை,பண்பாடு ஆகியவற்றைப் பொறுத்தே அமைகிறது.

திருமதி கலைச்செல்வி ஞானசேகர்
ஆசிரிய ஆலோசகர் - தமிழ்
கிளிநொச்சி வடக்கு வலயம்

உசாத்துணை நூல்கள்

1. குமரிச்செழியன்(2013) கற்றல்-மனிதவளர்ச்சி உளவியல்
2. லீலா ஞானலெட்சுமி.ச (2012) பொது உளவியல்
3. கஜவிந்தன்.க (2013) உளவியல்
4. முத்துலிங்கம்.ச (2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உணர்ந்து உரையாடுவோம்

மனிதனுக்கு வாய்க்கப்பெற்ற மிகப் பெரிய ஆயுதம் வார்த்தை தான். சொற்களைப் பயன்படுத்தி மனிதன் எப்போது தன் உணர்வுகளை வெளிப்படுத்தத் தொடங்கினானோ அன்றே இந்த உலகை வெல்லும் ஓர் உயிரினமாக அவன் வீறு பெற்றான். உடலை வளர்த்துக் கொள்வதற்கான நாவையும், பல்லையும், அண்ணங்களையும் அனுகூலமாகக் கொண்டு கண்ணுக்குத் தெரியாத காற்றினை உள்வாங்கி சொற்களை உதிரச் செய்யும் விதம் உண்மையில் அதிசயம் தான் "உயிர் உலகத்தில் தோன்றிய காலத்தில் வார்த்தை தான் இருந்தது" என்று கிறிஸ்தவ வேதமான பைபிள் குறிப்பிடுவதனை மனங்கொள்ள வேண்டும். ஆனால் மனித சமுதாயம் எவ்வளவோ முன்னேற்றம் கண்டு விட்டது. பல துறைகளிலும் நவீனமயப்பட்டு விட்டது. இருந்தும் வார்த்தைகளை இன்னும் சரிவரக் கையாளவில்லை என்பது கவலையளிக்கின்றது.

மனிதன் பேசக் கற்றுக் கொண்டதாற் தான் எத்தனையோ கண்டு பிடிப்புக்களைச் செய்தான். ஆனால் இனிமையாகப் பேசமறந்து போனான் என்பது தான் பேரிழப்பாகும். மனிதன் மொழியைப்பயன்படுத்தி உரையாடலை மேற்கொள்வதுதான் அசாத்திய திறமை என்ற அடிப்படையில் அந்த உரையாடலை செம்மையாகக் கையாள்கின்றானா? என்பது நாம் எல்லோரும் சிந்திக்க வேண்டியதாகும். இந்த இடத்தில் தமிழ் இலக்கியங்கள் விருந்தளிக்கும் சில உரையாடல்களை உண்டு களிப்போம்.

இன்று மனிதர்களிடம் காணப்படும். மிகப் பெரிய குறைபாடு வார்த்தைகளை சரிவரப் பயன்படுத்தாததுதான். பல பிரச்சினைகள் மூண்டு எழுவதற்கும் இதுவே காரணம். பாமரர் தொடக்கம் படித்தவர் வரை இது நோயாகப் பரவியிருக்கிறது. சொற்கள் வலிமையுடையவை. வில்லிலிருந்து புறப்படும் கூர்மையான அம்பு எவ்வாறு உடலைத் தைக்குமோ அந்த வல்லமை சொல்லிற்கும் உண்டு.

*தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே*
*நாவினால் சுட்ட வடு*

என்ற வள்ளுவர் கருத்தும் இதனோடு இயைந்ததே "சொல்லினான் சுடுவேன்" என்று சீதை அனுமனுக்கு கூறியதை எண்ணும் போது சொல்லின் ஆற்றல் எத்தகையது என்று புரியும். இந்த உலகங்களை நான் சொல்லினால் சுடுவேன். ஆனால் நான் சுடாமல் இருப்பதற்குக் காரணம் இராமனின் வில்லின் ஆற்றலுக்கு குற்றம் உண்டாகி விடும் என்கின்றாள் சீதை. அப்படியானால் வில்லை விட சொல் ஆபத்தானதல்லவா? இத்தகைய பேராற்றல் கொண்டது தான் வார்த்தை.

நாம் அனைவரும் முதலில் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். மற்றவர்களின் மன நிலையிலிருந்து எவ்வாறு உரையாடுதல் என்பதனைத் தெரிய வேண்டும். அங்ஙனம் இனிய உரையாடல் ஒரு கலை என்றே கூறப்படுகின்றது. கம்பராமாயணத்தில் சீதையினைக் கண்டு இராமனிடத்தில் திரும்புகின்றான்அனுமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமனுக்கோ உள்ளம் துடியாய்த் துடிக்கின்றது. அனுமான் என்ன பதிலைக் கூறப் போகின்றான் என்பது இராமனின் ஏக்கம். சீதையினை அழைத்து வராமல் தனியாக வருகிறான் அனுமன். எப்படியிருக்கும் அனுமனின் நிலை? இந்தச் சூழலில் எவ்வாறு நடந்து கொண்டான் அனுமன் . அனுமன் சொன்னது இதுதான்.

**"கண்டனன் கற்பினுக்கணியை கண்களால்**
**தெண்டிரை அலைகடல் இலங்கைத் தென்னகர்"**

**இங்கு தான் அனுமன் சொல்லின் செல்வனாக விளங்கினான்.** இராமனின் உள்ளம் எதனை முதலில் சிந்திக்குமென்று அனுமன் உணர்கின்றான். தன் மனைவி உயிருடன் இருப்பாளா, இல்லையா? என்பதுதான் இராமனின் தவிப்பாக இருக்க வேண்டும் எனக் கருதிய அனுமன் "கண்டனன்" என்றான். இப்போது இராமனின் தவிப்பு அடங்கியிருக்கும். இரண்டாவதாக இராவணன் கடத்திச் சென்றதால் கற்போடு இருப்பாளா? என இராமன் எண்ணக் கூடுமல்லவா? அதனால் இராமன் வினவாமலே "கற்பினுக்கணியை" எனக் கூறினான். இன்னும் அந்தக் கற்பினைக் கண்களால் கண்டேன் என்றான். கற்பினைக் கண்களால் காண முடியுமா? கண்டான். (இராவணன் சீதையிடம் மன்றாடியதைக் அனுமன் கண்டான்.) மூன்றாவது எங்கே இருக்கிறான் என்பது தான் இராமனின் தவிப்பாக இருக்க வேண்டும். இதனை உணர்ந்து அனுமன் இலங்கையில் அசோக வனத்தில் கண்டேன் என்றான். பார்த்தீர்களா? எவ்வளவு இனிமையான உரையாடல் "என் உயிரையே மீட்டாய்" என இராமன் அனுமனைக் கட்டித் தழுவினான். எவ்வளவு மகிழ்ச்சி இராமனுக்கு. உயிரை மீட்டுத்தருகின்ற உரையாடலை நாம் செய்ய வேண்டாம். உயிரை வதைக்காத உரையாடல்களை செய்யாது இருப்போம் என்பது தான் என் கருத்து

சொற்கள் ஒவ்வொன்றும் கருத்தும் இனிமையும் உடையவை. அதிலும் தமிழ்ச் சொற்கள் இன்னும் இனிமையுடையவை. அதனால்த் தான் ஐரோப்பியரையும் நம் மொழி கவர்ந்திழுத்தது.

**"கேட்டார் பிணிக்கும் தகையவாய் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல்"**

என்கிறார் வள்ளுவர். நண்பர்கள் விரும்பும் வண்ணமும், பகைவர்கள் தம் பகைமையை மறந்து நட்பினை விரும்பும் வண்ணமும் சொல்லப்படுவதே சொல், நிலத்தின் இயல்பினை அந்த நிலத்திலிருந்து வருகின்ற முளை காட்டுமல்லவா? அது போலத்தான் ஒருவன் மேற்குலமா? அல்லது கீழ்க்குலமா? என்பதனைத் வாயிலிருந்து வருகின்ற வார்த்தைகள் காட்டிவிடும் என்பதனைத் தெரிந்த பின்னரும் வன்சொற்களைப் பயன்படுத்துவதுதான் நம் பலரின் குறைபாடு.

**"சொல்லின் வனப்பே வனப்பு" என்பதையும்**
**"இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனி இருப்பக்காய் கவர்ந்தற்று"**
**என்பதனையும் பொருளறிந்து நாம் பேசிப்பழக வேண்டும்.**

வன்சொற்கள் மலிந்த குடும்பவாழ்வு தம்மையும் சமூகத்தினையும் சீரழித்து வருகின்றது. மழலை மொழி கேட்டு நம்மையே மறந்து குதூகலிக்கும் மனித சாதி வளர வளர தன்னைத் தானே மாசுபடுத்திக் கொளவதனை நினைக்கும் போது கவலைதான். ஔவையார் மூதுரையில் பாடிய பாடல் ஒன்றை இங்கு தருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை**
**இல்லாளும் இல்லாமே ஆமாயின் - இல்லாள்**
**வலி கிடந்த மாற்றம் வரைக்குமேல் அவ்வில்**
**புலி கிடந்த தூறாய் விடும்"**

ஓர் இல்லத்தின் சிறப்பு இனிய உரையாடலில்த் தான் தங்கியிருக்கின்றது. நல்ல வார்த்தைகளைப் பேசும் மனைவி இல்லத்திலிருந்தால் இல்லாத செல்வம் வேறென்ன இருக்கின்றது? மாறாக வன்மையான சொற்களை பேசும் மனைவியிருந்தால். அந்த வீடு புலி தங்கியிருக்கும் குடிசையினைப் போன்றதாகி விடுகின்றது. இது பெண்ணிற்கு மட்டும் வேண்டப்பட்டதல்ல. முழுச் சமுதாயமும் இனிமையாக உரையாடும் போதுதான்இந்த உலகத்தில் இனிமையும் நம்மால் உணர முடியும்.இல்லாவிட்டால். வாழ்வு நரகம் போன்றது என்பதனை விட இதற்கு வேறென்ன பதில்?

உளமறிந்து உரையாடலுக்கு இன்னொரு உதாரணத்தினைத் தருகின்றேன். சிலப்பதிகாரத்தில் கோவலன் கொலையுண்டான். கண்ணகி அதனை அறியவில்லை. ஆனாலும் அவள்மனதில் தடுமாற்றம் தலையெடுத்தது. தோழியான ஐயையிடம் கணவனைப்பற்றி விசாரிக்கின்றாள். ஐயையோ தடுமாறுகின்றாள். கொலையுண்ட செய்தியை எவ்வாறு உரைப்பது. ஆனாலும் உரைத்தாள். எப்படி?

**அரசுறை கோயில் அணியார் ஞெகிழும்**
**கரையாமல் வாங்கிய களவனாம் என்றே**
**கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே**
**குரை கழல் மாக்கள் கொலை குறித்தனரே**

இதுவே ஐயையின் பதில். கண்ணகியின் உள்ளத்தினை செவ்வனேயறிந்து பதிலுரைத்தாள் ஐயை. கொலைச் சம்பவம் எதற்காக, யாரால் மேற் கொள்ளப்பட்டதை நுட்பமாக வெளிப்படுத்தினாள்.

| | |
|---|---|
| எதனை? | - சிலம்பினைத் திருடியதற்காக |
| எங்கு ? | - அரண்மனையில் இருந்த சிலம்பு |
| எதற்காக? | - கள்வன் என்ற குற்றத்திற்காக |
| யார்? | - ஊர்க் காவலர்கள் |
| முடிவு | - கொலை செய்ய கருதினார்கள் |

இத்தனை விடயங்களையும் ஒன்று திரட்டி விடை பகர்ந்தாள் ஐயை. இங்கு கள்வன் என்று கூறாமல் "கள்வனாம்" என்று கூறிய வகையில் அது தன் கருத்தல்ல பிறரின் கருத்தே என வெளிப்படுத்திய ஐயை "கொலை செய்யப்பட்டான்" என்று கூறாமல் "கொலை செய்யக் கருதினார்கள்" எனக் கூறியதும் நுட்பமான உரையாடலே.

இவ்வாறு இலக்கியங்களே நமக்கு பாடம் சொல்லித் தருகின்றன. "வார்த்தை தவறி விட்டாய் அடி கண்ணம்மா மார்பு துடிக்குதடி" என்று கண்ணம்மா என் காதலியில் பாரதியார் பாடியுள்ளார் எத்துணை சிறப்பு.

இனிய உரையாடல் எங்களது ஆயுளையும் வளர்த்திருக்குமென்று உளவியல் கூறும் உண்மையினையும் விளங்கிக் கொள்வோம். வன்சொற்களால் எதனையும் சாதிக்க முடியாது "வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம்" என்பதனைத்தான் இறுதியாகக் கூறமுடியும்.

*திரு.சு. லோகேஸ்வரன் BA Tamil Hons, M.A PGDE, MED*
*ஆசிரிய ஆலோசகர் - தமிழ்*
*துனுக்காய் கல்வி வலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பெண்களில் மாற்றம் தேவையா?

அகிலத்தின் படைப்பிற்கும் இயக்கத்திற்கும் சக்தியே மூலகாரணம் என்பது மெய்ஞ்ஞானத்தின் மூலமும் விஞ்ஞானத்தின் மூலமும் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். சக்தி இல்லாது எதுவும் இயங்காது. சகல பொருட்களின் இயக்கத்திற்கும் சக்தி பல வடிவங்களில் பிரயோகிக்கப்படுகிறது. அந்தச் சக்தியின் வடிவமாகவே பெண்கள் போற்றப்படுகின்றார்கள். பண்டைய வழிபாட்டு முறைகளில் பெண் தெய்வ வழிபாடு முக்கிய இடம் பிடித்தது. பெண்களும் தெய்வத்திற்கு சமனாகப் போற்றப்பட்ட புராண இதிகாசங்களில் காரைக்கால் அம்மையார், நளாயினி ,சாவித்திரி, சந்திரமதி, சீதாப்பிராட்டி போன்ற பெண்களை தெய்வமாக போற்றும் நிலையே காணப்பட்டது. சங்க காலத்தின் பின்னரான காப்பியங்களிலும் கண்ணகி மணிமேகலை கவுந்தியடிகள் போன்ற பெண்களும் சிறப்பிற்குரியவர்களாக குறிப்பிடப்பட்டனர். இவர்களுள் கண்ணகி, சீதை போன்ற கதாபாத்திரங்கள் தெய்வமாக இன்று வரை வணங்கப்படு கின்றார்கள். எடுத்துக்காட்டாக சீதைஅம்மன், கண்ணகிஅம்மன் ஆலயங்கள் விளங்குகின்றமை சான்றாகும். பண்டைய காலத்தில் காவியங்களில் சிறந்து விளங்கியவர்கள் பெண்கள் ஔவையார், மாசாத்தியார், வெள்ளிவீதியார், அங்கவை, சங்கவை, இலவினை, விண்ணிய குயத்தியார், காக்கை பாடினியார், நற்செள்ளையார் இனப்பெண்பாற்புலவர்கள் நீண்டு கொண்டே செல்கின்றார்கள். மன்னனுடனும், மக்களுடனும் கொண்டிருந்த தொடர்பு அன்பின் வெளிப்பாடாகும் சேக்கிழார் பாடிய பெரிய புராணத்திலும் காரைக்கால் அம்மையார், மங்கையர்கரசியார், இசைஞானியார் போன்ற பெண்களைப் போற்றிப் புகழ்ந்துள்ளார். பெண்கள் அடக்கம், அறிவுடைமை, வாய்ந்தவர்களாக மட்டுமல்லாது வீரத்தின் விளைநிலமாகவும் விளங்கியதை வரலாறு நமக்கு எடுத்து இயம்புகின்றது. கால ஓட்டத்தில் இந்த நிலை மாற்றம் அடைந்தது பெண்களின் சுதந்திரம் மாறுபட்டு அடிமைகளாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டனர். அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என பெண்களின் கல்வி உரிமை மறுக்கப்பட்டது. குடும்பத்தில் ஆண்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. பெண் கணவனுக்கு அடங்கி நடப்பவளாகவும் எல்லோருக்கும் சுவையாக சமைத்து போடுபவளாகவும், குழந்தைகளைப் பெற்று எடுக்கும் இயந்திரமாகவும், மூத்தோருக்குப் பணிவிடையும் செய்பவளாகவும் சமூகம் அவளை அடக்கி ஒடுக்கி முடக்கி வீட்டின் மூலைகளுக்குள் இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தது. குல மாதர்களின் கற்பினைக் காக்கப் பல கட்டுப்பாடுகளை ஆண்கள் விதித்தனர்.

கற்பின் பெயரால் பெண்களை சிறை வைக்கும் நிலை ஏற்பட்டது. பெண்கள் கல்வி கற்றால் அடக்கம், ஒழுக்கம், கற்ப ஒழுக்கங்களில் தவறி விடுவார்கள். என நினைத்த ஆடவர்கள், பெண்கள் கல்வி கற்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. பெண்கள் பருவம் அடையும் முன்பே திருமணம் செய்து கொடுக்கும் பால்யத் திருமணம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. பெண்கள் பார்க்காத, பழக்கமில்லாத, விருப்பம் இல்லாத, வயதில் கூடிய ஆண்களை கட்டாயப்படுத்தி பெண்களுக்கு திருமணம் செய்து வைத்தனர். திருமணம் செய்த பெண்கள் வேறு ஆடவரை நிமிர்ந்து பார்ப்பதற்கும், பேசுவதற்கும் தடை போடப்பட்டது. கணவன் இறந்தால் மனைவியும் உடன்கட்டை ஏறி எரிந்து சாம்பலாக நிர்ப்பந்திக்கப்பட்டனர். இல்லாவிட்டால் மொட்டை அடித்து, வெள்ளைப் புடைவை அணிந்து ஆபரணங்களையும் களைந்து அமங்கலி எனும் பட்டம் சூட்டி வீட்டின் ஒரு மூலையில் ஒதுங்கி இருக்கும் நிலையை ஏற்படுத்தினர். எந்த காலத்திலும் பெண்கள் முன்னுக்கு வரக்கூடாது என தடைவிதித்தனர். இவ்வாறு பெண்கள் அடக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான காலகட்டத்தில் பலர் பெண்களின் உரிமைகளை மீட்டெடுக்கக் குரல் கொடுத்தனர். அவர்களில் விடிவெள்ளியாக விளங்கியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் மற்றும் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். இவர்கள் பெண் அடிமைத்தனத்தை எதிர்த்து பெண் விடுதலைக்காகக் குரல் கொடுத்தனர்.

பாரதியார், **"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார் வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"** என்று சங்கநாதம் செய்தார் பேதைமையே பெண்களின் அணிகள் எனவும் வீட்டு வேலை செய்யப் பிறந்த பெண்ணுக்கு ஏட்டுக்கல்வி எதற்கு எனவும் வீட்டிற்குள் பெண் பேதையை பூட்டி வைப்போம் என எக்காளம் இட்ட ஆண்களை நாணித் தலை குனிய வைத்தார். **"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்".** ஆணுக்குப் பெண் இங்கே இளைப்பில்லை காணொன்று கும்மியடி என்று ஆணாதிக்க சமுதாயத்தை அடக்கினர். இல்லற வாழ்வில் ஆணும் பெண்ணும் ஒற்றுமையுடன் அறம் காத்து பொருள் தேடி இன்பம் அனுபவிக்க வேண்டும். இவ்வாறு ஆணும் பெண்ணும் சரி நிகர் சமானமாக வாழ வேண்டும் என்பதையும் பாரதியார் **"மாதர் தம்மை இழிவு செய்த மடமை தன்னைக் கொழுத்துவோம் ...ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்ந்திடுவோம் இந்நாட்டிலே"** என்று கூறி மனநிலையை மாற்றி ஆணாதிக்கத்தை அழித்து பெண் அடிமை விலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைத்து பாரதி எதிர்பார்த்த புதுமைப் பெண்களைப் பற்றிய கனவு நினைவானது. வீட்டுக்குள் முடங்கி கிடந்த பெண்கள் விடுதலை பெற்று உயிர் கொண்டு எழுந்தனர்.

ஏடு எடுத்து கல்வி கற்றனர். ஆண்கள் துலங்கிய அத்தனை இடங்களிலும் பெண்களும் துலங்கினர். ஆட்சித்துறை, அரசியல்துறை, அறிவியல்துறை, விஞ்ஞானதுறை, மருத்துவத்துறை, சட்டத்துறை, நீதித்துறை, விளையாட்டுத்துறை, ஊடகத்துறை, கணிதத்துறை எனச் சகல துறைகளிலும் பெண்கள் தடம் பதித்து ஆண்களுக்குச் சமனாக ஆண்களுக்கு மேலாகத் தமது ஆளுமைகளை வெளிப்படுத்தி வெற்றியும் பெற்றனர். விமானங்களை ஓட்டுவது, விண்வெளிக்குச் சென்று ஆய்வு செய்வது, புதிய மருந்துகளைக் கண்டுபிடித்து வைத்தியத்துறையில் சாதனை செய்வது, தகவல் தொழில்நுட்பத் துறையில் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்துவது என பெண்கள் முத்திரை பதிக்காத துறைகளே இல்லை எனும் அளவிற்கு பெண்கள் முன்னேற்றம் அடைந்தனர்.

இவ்வாறு பெண்கள் பல துறைகளிலும் முன்னேற்றம் அடைந்ததனால் ஒரு குடும்பத்தை நிர்வகித்து எதிர்கொள்ளும் சவால்களை தீர்த்து பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுப்பவர்களாகவே பெண்கள் பெரும்பாலும் உள்ளனர். மேலும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் நமது நாட்டில் குறிப்பாக தமிழர் தாயக பிரதேசங்களில் எத்தனை உள்ளன அத்தனை குடும்பங்களும் பெண்களின் சுய தொழில் முயற்சிகளால் வெற்றி கண்டு பொருளாதாரத்தில் உயர்ந்துள்ளனர். வரவு செலவுகளைத் திட்டமிடல், சேமிப்பு ஆற்றல், பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுப்பு, விடாமுயற்சி, சவால்களை எதிர்கொண்டு வெற்றிகொள்ளும் திறன் போன்ற பல்வேறு குணப் பண்புகள் பெண்களிடம் இயல்பாகவே அமைந்துள்ளன. இவற்றுடன் கல்வி அறிவையும் வளர்த்துக் கொண்டால் பெண்களால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. உலகில் பெரும்பாலான நாடுகளில் நாட்டை ஆள்வது ஆணாக இருந்தாலும் வீட்டை ஆள்பவர்களாக பெண்களே இருக்கின்றனர். தொழில் செய்யும் நிறுவனங்களில் நசுக்கப்படும் பெண்கள் குரல் எழுப்பினார்கள். வேலை நேரத்தைக் குறைக்கவும், சம்பளத்தை அதிகரிக்கவும், பெண்கள் வாக்களிக்கவும், உரிமை கோரியும் செய்த போராட்டங்களின் பின்னணியின் விளைவாகவே பங்குனி 8ஆம்தேதி சர்வதேச மகளிர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு சர்வதேச ரீதியாக பெண்கள் மதிக்கப்பட்டும் போற்றப்படும் நற்பேறு பெற்றனர். இவ்வாறு போற்றப்பட்ட பெண்களில் சிலருடைய நிலை காலப்போக்கில் மாற்றமடையத் தொடங்கியது. **"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு"** என்ற ஆன்றோர் வாக்கிற்கு ஏற்ப பெண் விடுதலையே பெண்களைச் சீரழிவுக்கு இட்டுச் சென்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் சுதந்திரம் என்ற போர்வையில் குடும்பத்திற்கு அடங்காத காரணத்தினால் பொறுமை, அடக்கம், ஒழுக்கம், கற்புடைமை என்ற பெண்களுக்குரிய அடையாளங்களை அகற்றி தடம் மாறிச்சென்று சமூகவிரோத செயல்களில் ஈடுபடுகின்ற சில பெண்கள் இன்றைய நிலையில் காணப்படுகின்றார்கள் என்பது கவலைக்குரிய விடயமாகும். நாம் ஒவ்வொருவரும் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் உண்மை தெளிவாகப் புலப்படும். பெண் அடிமைத்தனத்தை நீக்கி மறுக்கப்பட்ட கல்வியைப் பெண்களுக்கு வழங்கி பெண்களுக்கு விடுதலை உணர்வை ஏற்படுத்தியதற்குப் பெண்கள் சீரழிந்து சின்னாபின்னம் ஆவதற்கும் பெண்மையின் வரையறை உணராது நடக்கும் நிலையை இன்று பாரதி பார்த்திருந்தால் சகித்துக் கொள்வானா? இல்லைத் தற்கொலை செய்திருப்பான் என்று கூறவேண்டும். பல பெண்கள், இது விடுதலை, இது சுதந்திரம் அதன் எல்லை எது என்று தெரியாது கட்டுக்கடங்காத துஷ்பிரயோகங்களுக்கு துணைப் பொருளாக பயன்பட்டு வருகின்றனர்.

நமது நாட்டில் எந்த பிரதேசத்தில் பார்த்தாலும் பெண்கள் குறிப்பாக சில இளம் தமிழ்ப் பெண்கள் பூங்காக்களிலும், கடற்கரைகளிலும், வயல்வெளிகளின் ஓரங்களில் வந்து பொது இடங்களிலும் அந்நிய ஆடவர்களுடன் பழகுவதைக் காணலாம். புனிதமான காதலைக் கொச்சைப்படுத்தி சட்டை மாற்றுவது போல் காலத்திற்கு காலம் Boy Friend என்ற பெயரில் பல ஆடவர்களுடன் அலைவதைக் காணக் கூடியதாக உள்ளது. இவ்வாறான செயல்களைத் தட்டிக் கேட்க முடியாத துர்ப்பாக்கிய நிலையே இன்று நாட்டில் உள்ளது. பெற்றோர் கண்களில் மண்ணைத் தூவி முகம் தெரியாத ஆணுடனும் முகநூல் காதலாலும், தொலைபேசித் தொடர்புகளாலும் வாழ்க்கையைத் தொலைத்த பெண்கள் ஏராளம் ஏராளம். பெற்றோர் கண்டிக்க முற்பட்டால் தற்கொலை செய்து விடுவேன் என்றும் தனக்கு ஏற்பட்ட தோல்வி அவமானத்தை தாங்கும் தன்னம்பிக்கை இழந்து தற்கொலை செய்யும் முடிவுக்கு வருவதுண்டு. பெற்று வளர்த்து ஆசையாக வளர்த்த பெற்றோருக்கு காலம் முழுவதும் கவலை ஏற்படுத்துகின்றனர். தமிழர் எம் பண்பாட்டுக்கு முரணாக அரைகுறை ஆடை அணிந்து இரவு விடுதிகளிலும், ஆடம்பர விழாக்களிலும், பொழுதுபோக்கு என்ற பெயரில் தங்களைத் தாங்களே சீரழித்துக் கொள்ளும் பெண்களையும் காணமுடிகிறது. விளம்பரங்கள் போட்டிகள் என்று திரைக்குப் பின்னால் பெண்கள் ஆபாசக் காட்சிப் படங்கள், நடனங்களுக்கு விலை போவதையும் மறுப்பதற்கு இல்லை. முறை தவறி கற்பை இழக்கும் பெண்கள் ரகசியமாக கருக்கலைப்பு செய்வதற்கும் தயங்குவதில்லை. உலகத்தையே அச்சுறுத்தும் அரக்கனாக வர்ணிக்கப்படும் போதைப் பொருள் கடத்தல், விற்பனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாவனைகளிலும் பெண்களுக்கு கணிசமான பங்கு உண்டு என்பதையும் மறக்க முடியாது. எந்த வகையிலும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற பேரவாவினால் போதைப் பொருட்களை கடத்திச் செல்வதற்கும் விற்பனை செய்வதற்கும் பெரும் 'மாபியா' கும்பலோடு சேர்ந்து தமது வாழ்க்கையை சீரழித்துக் கொள்கின்றார்கள்.

நகர்ப்புறங்களில் மட்டுமின்றி கிராமப்புறங்களிலும் கூட கசிப்பு, கள்ளச்சாராயம் என்ற பெயரிலே போதைப்பொருட்களை விற்பனை செய்யும் நிலையில், பல ஆடவர்கள் வீடு தேடிச் சென்று போதைப் பொருட்களை வாங்கிப் பாவிப்பதால் பல சமூக விரோத செயல்களுக்கு ஆண்கள் தூண்டப்படுகிறார்கள். குடும்பத்தின் குலவிளக்காக வாழ வேண்டிய பெண்கள் காவல்துறைக்குத் தகவல் கொடுத்தால், காவல்துறையினர் சட்ட ரீதியாகத் தண்டனை வழங்குவது அதிகரிக்கும். பெண்கள் கொடுக்கும் பல லட்சம், பாலியல் லஞ்சம் போன்றவற்றைப் பெற்றுகொண்டு அவர்களை வெளியில் உலவ விடுவதும் இப்பொழுது சர்வ சாதாரணமாகிவிட்டது. போதைப் பொருட்கள் விற்பனை செய்யும் வீடுகள் காலப்போக்கில் விபச்சார வீடுகளாக மாறும் நிலையும் காணப்படுகின்றன. பெண்களால் மேற்கொள்ளப்படும் சமூக விரோத செயல்களுக்கு எதிராக குரல் கொடுப்பவர்கள் கத்திக்குத்துக்கு இலக்காக வேண்டியும் வரும். பெண்களின் நிலையை ஜனரஞ்சகமாக "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" என்று கூறியுள்ளார்கள் போலும். தவறு விடுவதும் அதை உணர்ந்து திருந்தி வாழ்வதும் மனித இயல்பாகும். இதற்குப் பெண்களும் விதிவிலக்கல்ல. பெண்களை சக்தியின் மறுவடிவம் எனநினைக்கும் போது சாதனை படைக்கப் பிறந்த பெண்கள் சாக்கடைகளாக மாறக்கூடாது. குற்றங்களை விடுத்து குலவிளக்காக ஒளி வீச வேண்டும். ஒவ்வொரு குடும்பப் பெண்ணும் தனது குடும்பம் நிம்மதியாக சந்தோஷமாக வாழ வேண்டும் காமம், குரோதம், பொறாமை, பழிவாங்கல் போன்ற தீய எண்ணங்களை அடிவோடு அகற்றி விட வேண்டும். அத்தோடு தமிழர்களின் பண்பாடு, கலாசாரத்தைப் பேணித் தாமும் நல்வழி நடந்து மற்றவர்களும் நடக்க வழிகாட்ட வேண்டும். பாரதி கண்ட புதுமைப் பெண்களாக பெண்கள் மறுமலர்ச்சி அடைய வேண்டும் வாழ்க பெண்ணினம், வளர்க நம் நாடு .

**திருமதி மஞ்சுளா யோகநாதன்**
**ஆசிரியர்**
**கிளி / பரந்தன் இந்து மகா வித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்ப் பக்தியிலக்கியச் செல்நெறியில் பாரதியாரின் கண்ணன் பாட்டு

பக்தியின் மொழியாகச் சிறப்பிக்கப்படும் மொழி தமிழ் ஆகும். நீண்ட இலக்கியப் பாரம்பரியமுடைய மொழியான தமிழ் செழுமையான பக்தியிலக்கிய மரபையும் கொண்டுள்ளது. தொன்மைமிகு சங்க இலக்கியங்களிலும் பக்தி சார்ந்த பாடல்களை இனங்காணமுடியுமாயினும் பக்தியை தனித்துவமான பாடுபொருளாக்கி பல்வேறு உத்திகளினூடாகப் பாடும்மரபு காரைக்காலம்மையாருடன் ஆரம்பிப்பதனைக் காண்கிறோம். தொடர்ந்து பல்லவர்காலம் ஏராளமான பக்தி இலக்கியங்களைத் தந்துள்ளது. இன்றுவரை தமிழில் பக்தியிலக்கியத்தின் தொடர்ச்சியைக் காணமுடிகிறது. இவ்வாறாக தமிழிலக்கியச் சுரங்கத்தில் நிறைந்து கிடக்கும் பக்தியிலக்கியச் செல்வங்களைக் கண்டு 'தமிழிலுள்ள பக்தி இலக்கியங்களைப் போல அழகிலும் ஆழத்திலும் பரப்பிலும் இத்துணை இலக்கியங்கள் வேறெந்த மொழியிலும் இருப்பதாக நான் அறியேன்' என வியக்கிறார் தனிநாயகமடிகளார். தமிழ்க் கவிதைச் செல்நெறியின் பிரிநிலைக் கோடாகக் கருதப்படும் மகாகவி பாரதியார் தமிழில் நவீன கவிதையின் எழுச்சிக்கு வழிகோலிய அதேவேளையில் தமிழ் இலக்கியப் பரப்பில் தொடர்ந்து வந்த கவிதை மரபினை உள்வாங்கிச் செழுமைப்படுத்தவும் தவறவில்லை. ஏனையவற்றைப் போலவே பக்தியிலக்கிய மரபும் பாரதியாரிடம் தொடர்ந்து புதுப்பரிமாணம் பெற்றது. புரட்சிகரமாகப் புதுமையும் செழுமையும் கொடுத்து பக்தியிலக்கியத்தைப் புதுப்பாதையில் அழைத்து வந்தார் பாரதியார். அதற்குச் சிறந்த சான்றாகக் கண்ணன் பாட்டு அமைந்துள்ளது எனலாம்.

மகாகவி பாரதியாரின் கவித்துவ ஆளுமையை வெளிப்படுத்திய முப்பெரும் படைப்புக்களாக பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு என்பன கருதப்படுகின்றன. தேச விடுதலை மற்றும் பெண்விடுதலைக்கான குரலாக பாஞ்சாலி சபதம் அமைய தத்துவ விசாரத்திற்குக் களமமைத்துக் கொடுத்துள்ளது குயில்பாட்டு. கண்ணன் பாட்டோ பக்திரசம் நனி சொட்டவைத்து பாரதியாரின் பிறிதொரு முகத்தைத் தெளிவாகத் தரிசிக்கவைக்கிறது. இறையீடுபாடு மிக்கவரான பாரதியார், கண்ணன் பாட்டில் கண்ணன் மீதான தீராக்காதலுடனான ஈடுபாட்டை மாத்திரமன்றி தனது புதுமை புகுத்தும் இயல்பையும் வெளிப்படுத்தியிருக்கிறார். இருபத்தி மூன்று தலைப்புக்களில் அமைந்த கண்ணன் பாட்டில் தோழனாக, தாயாக, தந்தையாக, சேவகனாக, அரசனாக, சீடனாக, சற்குருவாக, குழந்தையாக, விளையாட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாக, காதலனாக, காந்தனாக, காதலியாக, ஆண்டானாக, குலதெய்வமாக எனப் பன்முகமாகக் கண்ணனைத் தரிசித்து, ஈடுபட்டு எம்மையும் பல்பரிமாண அனுபவத்தைப் பெறச்செய்கிறார். இறைவனை பல்வேறு உறவுநிலைகளில் தரிசித்துப் பாடுவது என்பது எமது பக்தியிலக்கியப் பண்புகளுலொன்றுதான். ஆனாலும் இதுவரையில்லாத வகையில் இறைவனைக் காதலியாக, சீடனாக, வேலைக்காரனாகத் தரிசித்துப் பக்தியிலக்கிய மரபில் புதுமை செய்கிறார் பாரதியார்.

அகப்பொருள் துறைக்குரிய நுட்பங்களைப் பக்தியிலங்களுக்குப் பயன்படுத்தி சிற்றின்பக் காதலினூடாகப் பேரின்பக் காதலைப் பேசுவது என்பது எமது மரபேயாகும். ஆனால் எப்பொழுதும் இறைவனை ஆண்பாலாக அதாவது தலைவனாகப் பாவித்தே நாயன்மார்களும் ஆழ்வார்களும் பின்வந்தோரும் பாடிவந்துள்ளனர். பெண்மையின் புனிதத்தைப் பேணும் பண்டைய சிந்னையின் வெளிப்பாடாக அது இருந்திருக்கலாம். ஆனால் பாரதியாரோ இந்த மரபினையுடைத்து கண்ணனைப் பெண்ணாக்கி, தன் காதலியாக்கி, காதலிலுருகிப் புதுமை செய்துள்ளார். "துண்டிற் புழுவினைப்போல் வெளியே சுடர் விளக்கினைப் போல், நீண்ட பொழுதாக எனது நெஞ்சந் துடித்ததடீ" என கண்ணனைக் காதலனாக்கி காதல் வயப்பட்டு விரகதாபத்தால் தோழியிடம் புலம்பும் பெண்ணாகத் துடித்த பாரதியாரால் "......... வார்த்தை தவறிவிட்டாய் அடி கண்ணம்மா மார்பு துடிக்குதடீ, பார்த்த இடத்திலெல்லாம் உன்னைப் போலவே பாவை தெரியுதடீ மேனி கொதிக்குதடீ தலை சுற்றியே வேதனை செய்குதடீ, வானிடத்தையெல்லாம் இந்த வெண்ணிலா வந்து தழுவுதுபார், மோனத்திருக்குதடீ இந்த வையகம் மூழ்கித் துயிலினிலே, நானொருவன் மட்டிலும் பிரிவென்பதோர் நரகத்துழலுவதோ?" என ஓர் ஆணாக, கண்ணனைக் காதலியாக்கி பிரிவுத்துயரில் வருந்தவும் முடிந்திருக்கிறது. இரண்டுமே எமக்கு விருந்துதான்.

உருவமற்றவனாய் எங்கும் வியாபித்திருக்கும் இறைவனுக்கு உருவம் கொடுத்து அதில் ஈடுபட்டுப் பாடும் பண்பு பக்தியிலக்கியங்களுக்குரித்தானதே. இறைவன் காதலியாகும்போது அவள் அழகில் இலயிக்கும் காதலனிடம் கவிதை கொட்டாதா என்ன? "சுட்டும் விழிச் சுடர்தான் கண்ணம்மா, சூரிய சந்திரரோ? வட்டக் கரியவிழி கண்ணம்மா வானக் கருமை கொல்லோ? பட்டுக் கருநீலப் புடைவை பதித்த நல்வயிரம் நட்ட நடுநிசியில் தெரியும் நட்சத்திரங்களடீ" எனக் காதலியாகிய கண்ணனை வர்ணிக்கிறார் பாரதியார். பதியோடு ஒன்றிக்கும் பசுவின் பேரின்பத்திற்குக் குறியீடாகச் சிற்றின்பக் காதலைப் பாடவந்த பாரதியார் காதலியாகிய கண்ணனோடு ஒன்றித்த தன்நிலையை அழகுறச் சித்திரிக்கின்றார். "பாயுமொளி நீ யெனக்கு, பார்க்கும் விழி நானுனக்கு வாயுரைக்க வருகுதில்லை, வாழிநின்றன் மேன்மையெல்லாம்" என்றும் "வானமழை நீயெனக்கு, வண்ண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயில் நானுனக்கு பானமடி நீயெனக்கு, பாண்டமடி நானுனக்கு ஞானவொளி வீசுதடி, நங்கை நின்றன் சோதி முகம் ஊனமறு நல்லழகே, ஊறுசுவையே" என்றும் பாடுவதில் பாரதியாரின் காதற் கிறக்கத்தைத் தெளிவாகவே உணரமுடிகிறது.

இயற்கையில் இறைவனைக் காண்பதும் இயற்கையழகில் ஈடுபட்டுப் பெறும் அனுபவத்தை இறையனுபவமாகவே சுகித்து வெளிப்படுத்துவதும் பக்தியிலக்கியங்களின் உத்திகளுளொன்று. இயற்கையீடுபாடு மிகுந்தவரான பாரதியாரும் இயற்கையழகில் இறைவனைக் கண்டு எமைச் சிலிர்க்கவைக்கிறார். கண்ணம்மா என்ற அவரது காதலியுடனான, உரையாடல் பாங்கில் அமையுமொரு பாடல் படிப்போர் மனங்களில் அழகிய கடற்கரைக் காதல்க் காட்சியையே விரித்துவிடுகிறது. "மாலைப் பொழுதிலொரு மேடைமிசையே வானையும் கடலையும் நோக்கியிருந்தேன் மூலைக் கடலினையவ் வான வளையம் முத்தமிட்டே தழுவி முகிழ்த்தல் கண்டேன்................ சாலப் பலபலநற் பகற்கனவில் தன்னை மறந்தலயந் தன்னிலிருந்தேன்" என்றவாறு இயற்கையிலீடுபட்டிருந்த தலைவனின் (பாரதியாரின்) கண்களைப் பின்புறமாகவந்து தலைவியாகிய கண்ணம்மா (கண்ணன்) தன் கைகளால்ப் பொத்துகிறாள். காதலன் தன் காதலியை அறியமாட்டானா என்ன? "பாங்கினிற் கையிரண்டுந் தீண்டியறிந்தேன், பட்டுடை வீசுகமழ் தன்னிலறிந்தேன்........" என வந்திருப்பவள் தன்னவள்தான் என்பதனை அறிந்துகொண்டு "வாங்கிவிடடி கையையேடி கண்ணம்மா மாயமெவரிடத்தில்?" என்று கேட்கிறான். பின்னர் தலைவி வினவிய வினாக்களுக்கு அலைகடலிலும் வானிலும் அலைநுரையிலும் நீர்க்குமிழிகளிலும் தலைவியின் முகத்தையே கண்டதாகப் பதிலிறுத்து, "பிரித்துப் பிரித்துநித மேக மளந்தே பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன்றில்லை" என வியக்கிறான் தலைவன். படிப்போர் மனதில் திரைப்படக் காட்சியாகவே விரியும் இப்பாடல் அகத்திணைக்கு அகத்திணையாகவும் பக்திக்குப் பக்தியாகவும் அமைந்து சுவைக்கிறது.

கண்ணன் பாடல்கள் பற்றிக்குறிப்பிடும்போது "எல்லாவற்றிலும் சிகரமாக விளங்குவது கண்ணனின் காதல் காட்சிகள்தாம். சாதாரண ஆண், பெண் காதல் நெகிழ்ச்சியின் பல்வேறு கவசங்களையே கையாண்டு தெவிட்டாத தேவசுகத்தைப் பாடும் அந்தக்கவிதையின் கற்பனை, தமிழ் இலக்கிய அகத்துறைக் காட்சிகளிலும் பக்தியிலக்கியப் பண்புகளிலும் எந்நாளும் அழியாத மகாகவிதை" என கவிஞர் திருலோக சீதாராம் அவர்கள் கூறியிருப்பதனை மனங்கொள்ள வேண்டும். கண்ணம்மா என் காதலி என்று பாரதியார் அழைப்பது அவருடைய பக்தி அனுபவத்தின் முதிர்ச்சி என்று கொள்ளவேண்டுமே அல்லாமல் வெறும் கவிதை அழகுக்காக அவர் படைத்த கற்பனையென்று தள்ளக்கூடாது. இவற்றை வெறுமனே கவிதையாகப் படிக்கும் எமக்கு இவை சாதாரண காதற் பாடல்களாகத் தெரியக்கூடும். ஆனால் உள்ளார்ந்த உணர்வினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்துகொண்டு இறையீடுபாட்டோடு படிப்போர் பாரதியாரின் மனநிலையையும் இப்பாடல்களினூடு தெறிக்கும் பக்தியனுபவத்தினையும் தெளிவாகவே புரிந்துகொள்வர்.

இறைவனைக் குருவாகக் கண்டு மாணிக்கவாசகர் முதலியோர் பாடிக் களித்துள்ளனர். ஆனால் இறைவனைத் தம் சீடனாகப் பாட புரட்சி விரும்பியான பாரதியாராற்தான் முடிந்துள்ளது. "யானேயாகி என்னலாற் பிறவாய், யானும் அவையுமாய் இரண்டினும் வேறாய், யாதோ பொருளாம் மாயக் கண்ணன், என்னிலும் அறிவிற் குறைந்தவன் போலவும், என்னைத் துணைக்கொண்டு என்னுடை முயற்சியால், என்னடை பழகலால் என்மொழி கேட்டலால், மேம்பாடெய்த வேண்டினோன் போலவும், யான் சொல்லுங் கவிதை என்மதியளவை இவற்றினைப் பெருமையிலங்கின என்று கருதுவான் போலவும் யான் சொலுங் கவிதை என்மதியளவை, இவற்றினைப் பெருமையிலங்கின வென்று கருதுவான் போலவும், கண்ணக் கள்வன் சீடனா வந்தென்னைச் சேர்ந்தனன், தெய்வமே!" எனத் தொடங்கி விரியும் குரு சிஷ்ய உறவு அபாரமான கற்பனை. ஈற்றில் குருவிற்கு உபதேசிக்கும் சீடனாக கண்ணன் "மகனே, ஒன்றையாக்குதல் மாற்றுதல் அழித்திடலெல்லாம் நின்செயலன்றுகாண தோற்றேனெனநீ உரைத்திடும் பொழுதிலே வென்றாய் உலகினில் வேண்டிய தொழிலெலாம் ஆசையும் தாபமும் அகற்றியே புரிந்து வாழ்க நீ" என உரைப்பதாக முடிக்கையில் இறைதரிசனத்தைக் கண்டுதெளிகிறோம். வித்தியாசமான கற்பனையில் இறைவனோடு உறவாடவும் அதனை இலக்கியமாக்கி விருந்தாக்கவும் அதில் தத்துவத்தைப் பொதிந்துவைக்கவும் பாரதியாரால் முடியாதா என்ன?

இறைவனைத்தன் தோழனாகக் கருதிப் பாடியவர் சுந்தரர். அந்த நட்பின் நெருக்கத்தினால் தான் குண்டையூர்க் கிழாரிடம் பெற்ற நெல்லை எடுத்து வந்து தருமாறு சிவனிடம் சுந்தரர் கேட்டார். "கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப் பெற்றேன் ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே" என்பது அவரது வேண்டுதல். ஆனால் தனது பணிகளைச் செய்வதற்குரிய சேவகனாக இறைவனைப் பார்க்க, உறவாட பாரதியாரால் முடிந்துள்ளது. "கண்ணையிமை இரண்டும் காப்பதுபோல், என்குடும்பம் வண்ணமுறக் காக்கின்றான் வாய்முணுத்தல் கண்டறியேன் வீதி பெருக்குகிறான்- வீடு சுத்தமாக்குகிறான் .............. நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய் பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய் எங்கிருந்தோ வந்தான், இடைச்சாதி என்று சொன்னான். இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்" என்று சேவகனாக வந்த கண்ணனுடனான அனுபவத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாகப் பதிவுசெய்கிறார். "கண்ணன் என்னகத்தே கால்வைத்த நாள்முதலாய் எண்ணம் விசாரம் எதுவுமவன் பொறுப்பாய்ச் செல்வம், இளமாண்பு, சீர், சிறப்பு, நற்கீர்த்தி, கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம், தெளிவே வடிவாஞ் சிவஞானம் என்றும் ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கிவருகின்றனகாண். கண்ணனைநான் ஆட்கொண்டேன், கண்கொண்டேன், கண்கொண்டேன். கண்ணனெனை ஆட்கொள்ளக் காரணமுமுள்ளனவே" என்பதில் இறையனுபவத்தைக் கண்டுதெளியலாம்.

பாரதியாரின் கண்ணன் பாட்டு தமிழ்ப் பக்திச் செல்நெறியில் புதிய அனுபவம் எனலாம். நாயன்மார்களும் ஆழ்வார்களும் வளப்படுத்திய பக்தியிலக்கியநெறியில் புதிய தரிசனங்களைப் பாரதியாரால் தரமுடிந்துள்ளது. "கண்ணன் பாட்டு என்பது பாரதியின் வாழ்க்கைத் தரிசனம். வாழ்க்கை தான் கண்ணன் என்றால் அதில் ஒன்றிப் பயின்று வரும் உயிருணர்வு பாரதி. பாரதி தன்னை விஞ்சிப் படைத்த படைப்பு என்று அதைச் சொல்ல வேண்டும்" என ஸ்ரீரங்கம்.வி.மோகனரங்கன் குறிப்பிடுவது நிதர்சனமாதே. "நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ? சொல்லடி சிவசக்தி எனைச் சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்" எனக் கேட்டு, தனக்குத் தேவையானதைப் பட்டியலிட்டு "இவை அருள்வதில் உனக்கெதும் தடையுளதோ?" என வினவும் பாரதியாரின் பக்தி வைராக்கியமும் ஞானமிடுக்கும் கண்ணன் பாட்டின் பலவிடங்களிலும் வெளிப்படுவதனைக் காணலாம். பாரதியெனும் யுகக் கவிஞனின் முத்திரைகளுள் ஒன்றாக கண்ணன் பாட்டு அமைகிற அதேவேளையில் தமிழ்ப் பக்தியிலக்கிப் பரப்பிலும் அது தனித்துவத்தோடு விளங்குகிறது என்பதில் மாற்றுக்கருத்திற்கிடமில்லை. பாரதியாரின் புகழ் வையகத்தில் நிலைக்கும்வரை, பக்தியிலக்கியங்கள் அவனியில் பயிலப்படும்வரை கண்ணன் பாட்டும் படிக்கப்படும் இரசிக்கப்படும் போற்றப்படும்.

*சிவகுருநாதன் கேசவன்*
*விரிவுரையாளர்*
*சியன தேசிய கல்வியற் கல்லூரி*
*வியாங்கொட*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வள்ளுவர் நெறியில் வாழ்வோம்

***"யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் எங்கும் காணோம்"*** என்று தமிழின் சிறப்பைக் கூறிய பாரதி "யாம் அறிந்த புலவர்களுள் வள்ளுவன் போலும் இனி இவ்வுலகில் ஒரு கவி மாமுனியைக் காணோம்" என்கிறார். வள்ளுவம் "தமிழனுக்குரியது" என்னும் நிலையைக் கடந்து உலகத்தவர் அனைவர்க்கும் உரியதாக உள்ளமையை உணர்ந்த பாரதி "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு", எனப் புகழ்ந்துரைத்தார். வள்ளுவப் பொருட் சிறப்பை அறிந்த மதுரைத் தமிழ் நாகனார் "எல்லாப் பொருளும் இதன் பால் உள" என்று தெளிந்துரைத்துள்ளார். இவை வள்ளுவத்தின் காலமும் எல்லையும் கடந்து நுண்பொருட்ச் சிறப்பை உணர்த்துவன. ஆம், பாரதியின் வார்த்தைகளும் மதுரைத் தமிழ்நாகனாரினதும் வார்த்தைகள் வெறும் புகழ்ச்சியல்ல. உலகமழியா உண்மையாகும். திருக்குறள் நீதி நூல் மட்டுமல்ல. அது நம் வாழ்வியல் அங்கம் பெறும் ஒரு மருத்துவ நூல் என்பேன். ஏனெனில் அவை மனதின் நோய்களை நீக்கவல்லன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனுக்காக மட்டுமல்ல, இருபத்தோராம் நூற்றாண்டின் புதிய தலைமுறையினர்க்கும் இனிவரும் சந்ததியினருக்கும் வழிகாட்டும் புரட்சி நூலாகும். வள்ளுவத்தின் பெருமையைக் காலந்தோறும் புதிய புதிய கருத்தாக்கங்களைத் தந்து, இனம், மொழி, நாடு என்னும் எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வளப்படுத்தி நாம் வள்ளுவ நெறியில் வாழ்வோம். சங்க காலத்தைத் தொடர்ந்து தமிழுக்கும், தமிழர்க்கும் கிடைத்த அரிய களஞ்சியமான வள்ளுவத்தில் உலகளாவிய சிந்தனைகளும் மனிதனை உயர்த்தும் உயரிய நோக்கும் காணப்படுகிறது.

வள்ளுவம் தான் தோன்றிய காலத்தோடு நின்று விடாமல் இந்த நூற்றாண்டு மனிதனுக்கும் வாழ்க்கையை வாழச்சொல்லிக் கொடுக்கிறது. வள்ளுவம் இலக்கியம் என்னும் நிலையில் நின்று விடாமல் மனித வாழ்வியல் கூறுகளை காட்டும் பதிவுகளாக உள்ளது. இதனைச் சராசரி மனிதன் அன்றாட வாழ்க்கையில் ஒழுகவேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாகவே நாம் நோக்கவேண்டும். வள்ளுவத்தில் உள்ள ஒவ்வொரு குறளும் தனி மனித வாழ்க்கையின் நெறிகளை, வழிமுறைகளைத் தருவன. மானிடப் பண்பு இயல்புகளுக்கு ஓர் உறைவிடமாய் வாழ்க்கை, வழி நெறிமுறைகளுக்கான வழிகாட்டியாய் அமைந்துள்ளது என்றால் மிகையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரண்டடி கொடுத்து இவ்வுலகைத் திருத்த முயன்ற ஆசிரியர் அவர்" என்று அவரின் பொருளுண்மையை நாம் விளக்கவேண்டும். உயிரினத்தின் உச்சியில் வாழும் இன்றைய மனிதனை, அவனது வாழ்க்கையைப் பகுத்து நோக்கி, அறம், பொருள், இன்பம் ஆகிய முதன்மைப் பயனை அறிய வைத்துப் பயனுடைய வாழ்க்கை வாழ வள்ளுவம் வழி காட்டுகிறது. தனி மனிதநிலை, குடும்ப நிலை, உறவினர் நிலை, சமூக உறுப்பினர் நிலை, குடிமக்கள் நிலை என்னும் தளங்களில் மனிதர்கள் பாதுகாக்க வேண்டிய பண்புகள், ஆற்ற வேண்டிய பணிகள், எனப் பன்முகக் கூறுகளை ஒழுங்குற அமைத்து ஒரு முழுமையான வாழ்வியல் கருத்தாக்கத்தை வள்ளுவம் தந்துள்ளது. தமிழ்ச் சமுதாயத்தில் காலங்காலமாய் இருந்து வந்த மரபுத்தளைகளை உடைத்து, மனிதப் பழக்க வழக்கங்களை மாற்றித் தனிமனிதத் தூய்மையை உருவாக்க வள்ளுவர் முயன்றுள்ளார். மது அருந்துதலும், புலால் உண்ணுதலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்கம் என்னும் நிலையை மாற்றி மனித மனத்தினை, வாழ்வின் பயனைத் தடம்மாற்றும் தவறுகள் என வள்ளுவர் சுட்டிக் காட்டி உயிர்களிடத்தில் கொள்ளவேண்டிய ஓம்புதலை நமக்குப் புலப்படுத்துகிறார்.

புலால் உண்பது மனித நெறி அல்ல என்பது வள்ளுவரின் கருத்தாக உள்ளது. இன்றைய மனிதர்களின் உணவு முறையில் சைவ உணவே சிறந்தது என்பதை அறிவியல் ஆய்வுகள் மூலம் மேலைநாட்டு உணவியல் வல்லுநர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். தெய்வப் புலவர் வள்ளுவர் "புலால் மறுத்தல்" என்னும் அதிகாரத்துள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதனை விளக்கமுறச் செய்துள்ளார்.

*"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*எல்லா உயிரும் தொழும்"*

என்னும் குறட்பா மனிதன் உயர்வதற்கான வழியைக் காட்டுகிறது. அன்பு, பண்பு, நட்பு போன்ற வாழ்வியல் இலக்குகளை எளிய முறையில் மனித மனம் ஏற்கும் வகையில் உரைத்துத் தனி மனித வாழ்க்கையை வள்ளுவர் பண்படுத்தியுள்ளார். மனித வாழ்க்கை ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்றுவிடாமல் விரிந்து பரந்து முக்கியத்துவம் மிக்கதாக அமைய வேண்டும். மனித மனங்களை விரிவுபடுத்தி அறவழிப்பட்ட சமுதாயத்தை உருவாக்குவது திருக்குறளின் நோக்காகும். மனமாசின்றி வாழும் வாழ்க்கை சிறப்புடையது. அதுவே அறங்களில் முழுமை. மனித வாழ்க்கை நெறி என்கிறார்.

*"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்*
*ஆகுல நீர பிற.*

என்னும் குறட்பா இதனை உணர்த்துகிறது. அறம் என்பது பற்றிய இலக்கிய மரபுசார் கருத்தாக்கத்தை வள்ளுவர் மாற்றியமைக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அறமெனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாத இதுகேள் மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டது இல்" என்னும் காப்பியக் கருத்தினை மறு ஆய்வு செய்து அறத்திற்குப் புதிய விளக்கங்களைத் தந்தவர் வள்ளுவர். மனத்தூய்மை, ஈகை, காதல் என்னும் தூயநெறிகளை வாழ்வியல் அறமாகக் கொள்ள வேண்டியதின் தேவையை உணர்த்தியுள்ளார்.

திருக்குறள் அன்பு, பண்பு, இன்சொல், நன்றியறிதல் என மனித மாண்புகளை விளக்குகிறது. இவற்றைப் பின்பற்றுவோர் பேற்றினையும் ஒதுக்கியவர் அடையும் இழிவினையும் திறம்படக் காட்டுகிறது. "வாய்மை" என்பதே தலையாய அறம் என்கிறது வள்ளுவம். பொய்மை கோலோச்சும் இக்கால மனித சமுதாயத்திற்கு வள்ளுவர் கருத்துக்கள் மலர்ச்சியை உண்டாக்கும் மருந்தாகக் கொள்ளலாம். அறங்களில் எல்லாம் வாய்மையே சிறப்புடையது என்பதை

*"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற*
*செய்யாமை செய்யாமை நன்று*

என்னும் குறட்பாவால் அறிய முடிகிறது.

மனிதர்களின் வாழ்க்கை நெறியை உயர்த்தும் கோட்பாடாக வள்ளுவம் மூன்று அறங்களைப் பின்பற்றுமாறு வலியுறுத்துகிறது.

*1. ஆன்மீக அறம்*
*2. ஈதல் அறம்*
*3. காதல் அறம்*

கடவுளை "அறிவு, ஆற்றல், அப்பாற்பட்ட நிலை" என்றும் கருதுகோள் நிலையில் வைத்து மனித ஒருமைக்கும் சமுதாய அமைதிக்கும் வள்ளுவர் குறள் வழிக் குரல் கொடுத்துள்ளார். முதற் குறட்பாவில் "உலகு" என நினைவூட்டி உலகளாவிய நேயத்தை மறைமுகமாக உணர்த்தியுள்ளார். கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால் சண்டையிட்டுக் கொள்ளும் மனிதனுக்கு, அவனது மனமாற்றத்திற்கு வள்ளுவம் ஒரு புதிய ஆன்மீக அறத்தை தந்துள்ளது.

வள்ளுவம் கடவுளை நம்புகிறது. ஆனால் அது ஆணும் அல்ல பெண்ணுமல்ல. வள்ளுவம், காட்டும் கடவுளுக்குக் கோபுரங்கள், கோட்டைகள் இல்லை. வள்ளுவத்தின் கடவுளுக்குக் கணக்கும் இல்லை வழக்கும் இல்லை. அது பேரறிவு தூய்மையான அறிவு குணங்களின் திருவுரு இன்பத்தின் திருவுரு அன்பின் திருவுரு அறத்தின் அடையாளம்! என்னும் அறிஞர் கருத்தும் இதனைத் தெளிவுபடுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதப் பண்பினை உயர்த்தும் ஒரு நெறி ஈகை. பிறருக்குக் கொடுத்து மகிழும் மனம் பெற்றால் மனிதன் பக்குவம் அடைந்தவனாகிவிடுவான். போட்டியும், பொறாமையும் அடுத்தவர் பொருளைக் கவரும் எண்ணமும் மனிதனை மிருக நிலைக்குக் கொண்டு செல்லும். ஈகைக் குணம் ஒன்றே மனிதனை மாண்புடையவனாக்கும். வள்ளுவர் ஈகைக் குணமே உயிரின் ஊதியம் என்பர்.

***ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது***
***ஊதியம் இல்லை உயிர்க்கு***

கொடுத்துப் புகழுடையும் வாழ்க்கையே பயனுடைய வாழ்க்கை என்பதைக் குறள் உணர்த்துகிறது. காமத்துப்பால் அறவழிப்பட்ட காதலுறவுகளை எடுத்துரைத்துள்ளது. காதலையும், ஆண்-பெண் உறவையும் வள்ளுவர் நெறிப்படுத்தியுள்ளார். காமத்துப்பாலில் காதல், காதலர் உறவு நிலை ஆகியவற்றை இனிமை பயக்கப் பாடி, அன்பெனும் நெறிக்குள், மனங்களின் சங்கமத்திற்குள், மாசுபடாத வாழ்வியல் படிநிலையை வடித்துத் தந்துள்ளார். களவையும் கற்பையும் வகைப்படுத்தி "மனிதம்" அடையும் வாழ்க்கை நெறியை வள்ளுவர் தந்துள்ளார்.

பிறன்மனை நயத்தலையும், பரத்தையர் உறவையும், பெருங்குற்றமாகச் சொல்லி அன்புடைய காமத்தைச் சமுதாய அறமாகத் தந்துள்ளார். ஆண் – பெண் உறவு நிலை, திருமணத்திற்கு முன்னும் பின்னுமாகக் காதல் நிலை ஆகிய செய்திகளைக் குறள் விரிவாகப் பேசுகிறது. ஆண் – பெண் சமத்துவம் வள்ளுவரின் கொள்கையாகக் காணப்படுகிறது.

ஆண் மேலாதிக்க காலத்தில், அதற்கெதிரான, துணிவுடைய சிந்தனைகளை வழங்கியுள்ள வள்ளுவரின் அணுகுமுறை புரட்சிகரமானது. பெண்களின் உரிமைக்காகவும், உலகியல் மாற்றத்திற்காகவும் அவர் பாடுபட்டுள்ளார். பெண் ஆணுக்கு இணையானவள். ஆற்றல் மிக்கவள் என்பதை, **சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை** என்று ஆற்றலும் அறிவும் நிறையும் மிக்க பெண்களை உலகுக்கு உருவாக்கித் தந்தவர் வள்ளுவர் எனலாம். இத்தகைய வள்ளுவரின் வழிகாட்டல்தான் பிற்காலத்தில் பாவலன் பாரதியை "வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்" என்று பாட வைத்தது எனலாம்.

சாதி, மதத்தின் பெயரால் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் சமுதாயக் கொடுமைகள். இதனை மாற்ற வள்ளுவரின் குறட்பாக்கள் முனைந்துள்ளன. பிறப்பால் இனம் பிரித்த வருணாசிரம முறையை வள்ளுவம் எதிர்க்கிறது. பிறப்பால் அனைவரும் ஒன்றே என ஓங்கி ஒலிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்*

என்னும் குறட்பா வள்ளுவரை ஒரு சமுதாயப் புரட்சியாளராக அடையாளம் காட்டுகிறது.

**பகுத்தறிவு நோக்கு**

வள்ளுவரைத் தமிழ்கூறும் உலகில் தோன்றிய முதல் "பகுத்தறிவாளர்" எனக் கூறலாம். எந்தவொரு கருத்தையும், சிந்தனையையும் உள்ளவாறு ஏற்காமல் பகுத்து நோக்கி, உள்ளத் தெளிவு பெற்று ஏற்க வேண்டும் என்பதே வள்ளுவர் கொள்கை.

*எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு*

*எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு*

என்னும் குறட்பாக்கள் இதற்குச் சான்றாகும்.

**மானுடத்தின் மலர்ச்சி**

வள்ளுவரின் நெம்புகோல் அடிகள் மானுடத்தின் மலர்ச்சி எனலாம். மரபுகளைத் தகர்த்துப் புதுமையை நிலை நிறுத்துவது வள்ளுவரின் சமுதாயப் பணியாக இருக்கிறது.

*அந்தணர் என்போர் அறவோர்*
*அன்பின் வழியது உயிர்நிலை*
*மனநலம் மன்னுயிர்க்குக் காக்கும்*
*அறத்தால் வருவதே இன்பம்*

என்றெல்லாம் உயரிய சிந்தனைகளை வழங்கி மனித வாழ்க்கையை மலர்ச்சியடையச் செய்தவர் வள்ளுவர் ஒருவரே எனலாம்.

*திரு. இ. திருச்செந்தூரன்*
*ஆசிரியர்*
*கிளி/விவேகானந்த வித்தியாலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாலாட்டு எனும் அழகிய சீராட்டு
## [கண்ணன் மீது தாலாட்டுப் பாடிய பெரியாழ்வார்]

தாய்மை அன்பின் வெளிப்பாடாய் விளங்கும் தாலாட்டுப் பாடல்கள் என்றும் மக்கள் வாழ்வில் தனித்துவம் பெற்று வருகின்றன. இலக்கியத்தில் முதல்முதலில் தாலாட்டுப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. தாலாட்டு என்பது தால், எனவும் ஆட்டு எனவும் பிரித்துப் பொருள் அறியப்படும். தால் என்றால் நாக்கு. ஆட்டு என்றால் அசைத்தல். ஆகவே நாக்கினை அசைத்துப் பாடப்படுவது தாலாட்டு ஆகும். தாயின் வயிற்றில் இருந்து வெளிவரும் குழந்தை அழுகையுடன் வருகின்றது. குழந்தையின் அழுகையை நிறுத்த தாயானவள் பாடும் பாடல் தாலாட்டுப் பாடலாகும். அப்போது தாயின் வாயிலிருந்து "ஆராரோ" எனும் வார்த்தையும் உதயமாகின்றது. தாயின் அன்பும், அக்கறையும், பரிவும் ஒரு சேர குழந்தைக்கு தாலாட்டுப் பாடல் மூலம் கிடைக்கின்றது. இவ்வாறு தாய்க் குலம் உலகிற்கு அளித்த அழியாத கருவூலமாக தாலாட்டுப் பாடல்கள் அமைந்துள்ளன. தாயானவள் தன் குழந்தைக்கு தாலாட்டுப் பாடும் போது குழந்தை அழுகையை நிறுத்தி அமைதியாக உறக்கம் கொள்கின்றது. தாலாட்டைக் கேட்கும் மற்றவர் உள்ளமும் மகிழ்ச்சியடைகின்றது.

### தாலாட்டை அறிமுகம் செய்த ஆழ்வார்கள்

எம் தமிழ் இலக்கியங்களில் தாலாட்டுப் பாடல்களை முதல் முதலில் பாடியவர் பெரியாழ்வார் எனும் வைணவ ஆழ்வார். அவரைப் போல தாலாட்டுப் பாடிய இன்னொருவர் குலசேகராழ்வார். திருமாலின் மீது தீராத அன்பும், பக்தியும் கொண்ட இவ்விரு ஆழ்வார்களும் திருமாலைக் குழந்தையாகக் கண்டு தங்கள் தாலாட்டினால் பாடல் பாடி மகிழ்ந்தனர். பெரியாழ்வாரே தாலாட்டு எனும் வடிவத்தை தமிழில் முதன்முதலில் வித்திட்டவர் எனலாம்.

### பெரியாழ்வாரின் தாலாட்டு

விஸ்ணுவின் கிருஷ்ண அவதாரத்தில் தன் மனதைப் பறி கொடுத்த பெரியாழ்வார் கிருஷ்ணராகிய கண்ணன் மீது தாய்மை உணர்வு பொங்கிட அன்புருக தாலாட்டுப் பாடுகின்றார். கண்ணனை ஆயர்பாடி கோகுலத்தில் வளர்த்தவள் தாய் யசோதை. அவளது அரவணைப்பில் கண்ணன் சிறு வயதில் பல குறும்புகள், லீலைகளைச் செய்தவன். அவற்றை யசோதை அவன் அருகில் இருந்து அனுபவித்தவள். ஆகவே பெரியாழ்வாரும் தன்னைத் தாய் யசோதையாகப் பாவனை செய்து கண்ணனைத் தன் குழந்தையாகப் பாவனை செய்து பாடல் பாடினார். கண்ணனைத் தொட்டிலில் இட்டு அவனைச் உறங்கச் செய்ய தாலாட்டுப் பாடுகின்றார் பெரியாழ்வார். அப்போது தேவர்கள் எல்லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனுக்காக பல வகையான பொருட்களோடு கண்ணனைக் காண அங்கு வந்து நிற்கின்றனர். அவையனைத்தையும் கண்ணனுக்கு எடுத்துக் கூறி அவனைத் தாலாட்டி துயில் கொள்ள செய்வதற்கு முயற்சிக்கின்றாள் யசோதை.

### பிரம்மன் வழங்கிய அழகிய தொட்டில்

அழகிய தொட்டிலில் கண்ணனை படுக்க வைத்து அவனை துயில் கொள்ளச் செய்கின்றாள் தாய் யசோதை. அப்போது பெரியாழ்வார் யாசோதையாகவே மாறிவிடுகின்றார். பாடல் இதுவே,

*மாணிக்கம் கட்டி வயிரம் இடை கட்டி*
*ஆணிப் பொன்னால் செய்த சிறு தொட்டில்*
*பேணி உனக்குப் பிரமன் விடு தந்தான்*
*மாணிக் குறளனே தாலேலோ*
*வையம் அளந்தோனே தாலேலோ*

அழகிய பாடல் அல்லவா? இப்பாடலின் கருத்தைக் காண்போம். மாணிக்கங்களை இரு பக்கமும் கட்டி இடையிலே வயிரங்களை இணைத்து, ஆணிப் பொன்னால் செய்யப்பட்ட வண்ண மயமான தொட்டிலை படைப்புத் தொழில் செய்யும் பிரம்மன் உனக்காக கொண்டு வந்து தந்துள்ளான். வாமனனாக உருவம் தாங்கி மூவுலகங்களையும் அளவிட்டவனே, உனக்கு தாலேலோ கூறுகின்றேன், நீ உறங்குவாயாக, என பெரியாழ்வார் யசோதையாக பாடுகின்றார்.

### சிவபெருமான் வழங்கிய உபசாரம்

தொடர்ந்தும் பாடுகின்றாள் யசோதை. சிவபெருமான் உன் இடுப்பில் கட்டுவதற்காக பொன் மணிகளால் செய்யப்பட்டு மாதுளம் பூவை இடையிலே வைத்து கோர்க்கப்பட்ட அரைஞாணை உனக்காக அனுப்பி வைத்துள்ளான். என் செல்வமே, அழாதே, உனக்கு தாலேலோ என தாலாட்டுகின்றாள் யசோதை.

*உடையார் கனமணியோடு ஒண் மாதுளம் பூ*
*இடைவிரவிக் கோத்த எழில் தெழ்கினோடும்*
*விடை ஏறு காபாலி ஈசன் விடு தந்தான்*
*உடையாய் அழேல், அழேல் தாலாலோ*
*உலகம் அளந்தானே தாலேலோ*

எனும் பாடல் அக்காட்சியை தெளிவுறுத்துகின்றது.

### தேவர்கள் கண்ணனுக்கு அளித்தவை

தேவர்கள் தலைவனான இந்திரன் அழகிய கிங்கிணியைத் உனக்காகத் தந்து உன்னைப் பணிந்து நிற்கின்றான். தாமரை மலர் போன்ற கண்களைக் கொண்டவனே! உனக்கு தாலேலோ, என்கின்றாள் யசோதை. அடுத்து, வானுலகத்தில் வாசம் செய்யும் தேவர்கள் எல்லோரும் உனக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிகலன்களாக வலம்புரிச் சங்கு, கொலுசு, சரிகை, என்பவற்றை விருப்புடன் தந்துள்ளனர். அவற்றை அன்போடு கண்ணனுக்கு எடுத்துக்கூறி யசோதையாக இருந்து தாலாட்டுகின்றார் பெரியாழ்வார்.

*சங்கின் வலம்புரியும் சேவடிக் கிண்கிணியும்*
*அங்கைச் சரி வளையும் நாணும் அரைத் தொடரும்*
*அம் கண் விசும்பில் அமரர்கள் போ தந்தார்*
*செங் கண் கரு முகிலே தாலேலோ*
*தேவகி சிங்கமே தாலேலோ.*

சிவந்த கண்களைக் கொண்டவனே, கருமுகில் போன்ற திருமேனி படைத்தவனே, தேவகியின் சிங்கக் குட்டி போன்றவனே, விரைந்து துயில் கொள்வாயாக உனக்கு தாலேலோ, என யசோதை உருகிப் பாடுகின்றாள்.

## குபேரன் கண்ணனுக்கு அளித்த வெகுமதி

செல்வத்தின் அதிபதி குபேரன், கண்ணனைக் காண கையில் பல பொருட்களோடு வந்து நிற்கின்றான். யசோதை அதனை கண்ணனுக்கு எடுத்துக்கூறுகின்றாள். பாடலைப் பாடியுங்கள்.

*எழில் ஆர் திருமார்புக்கு ஏற்கும் இவை என்று*
*அழகிய ஐம்படையும் ஆரமும் கொண்டு*
*வழுஇல் கொடையான் வயிச்சிரவணன்*
*தொழுது உவனாய் நின்றான் தாலேலோ*
*தூமணி வண்ணனே தாலேலோ*

ஆம், கண்ணனின் மார்பில் அணிவதற்கு பொருத்தமானது எனக் கருதி, ஐந்து ஆயுதங்களை மாலை போன்று கோர்த்து, கழுத்தில் அணியும் ஆபரணமாக கொண்டு வந்து விருப்போடு உன்னை வணங்குவதற்கு குபேரன் வந்து நிற்கின்றான். தூய்மையான மணி போன்ற வண்ணம் படைத்தவனே, நீ உறங்குவாயாக, உனக்கு தாலேலோ என்கின்றாள் யசோதை.

## முத்தேவியரும் கண்ணனுக்கு கொடுத்தவை

கண்ணன் தொட்டிலில் உறங்கும் அழகைக் காண்பதற்கு திருமகளும், நிலமகளும் கூடவே துர்க்காதேவியும் வந்துள்ளாள். அவர்கள் கண்ணனுக்காக பல வெகுமதிகளைக் கொண்டு வந்துள்ளனர் என கண்ணனிடம் யசோதை உரைக்கின்றாள். கண்ணனின் மார்பில் சூட்டுவதற்காக நறுமணம் பொருந்திய துளசி இலைகளையும், கற்பகத் தருவின் மலர்களையும் சேர்த்து மாலையாகக் கோர்த்து நிலமகளாகிய திருமகள் உனக்காக கொண்டு வந்துள்ளாள் என உரைக்கின்றாள் யசோதை, அடுத்து, உனது இடுப்பில் கட்டுவதற்கு கச்சு, அதில் செருகுவதற்கு குறுவாள், தோளில் பொருந்தத் தக்கதான தங்க வளை, மற்றும் பட்டாடை, நெற்றிக்கு மணிச் சுட்டி என பலவகையான பொருட்களை நிலமகள் விருப்போடு கொண்டு வந்துள்ளாள் என அன்புருகப் பாடுகின்றார் பெரியாழ்வார். தவிர, உன் திருமேனியில் பூசுவதற்காக வாசனைத்திரவியம் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சள் பொடிகளும், கண்களுக்கு இடும் மையும், நெற்றிக்கு இடும் சிந்தூரமும் கொண்டு விருப்போடு உன் அருகில் வந்து நிற்கின்றாள். பூதனையிடம் நச்சு முலையுண்ட அச்சுதனே கண்ணுறங்காய். என் கருமுகில் வண்ணனே விரைந்து துயில் கொள்வாயாக என தாயன்பு மிக்க யசோதையாகவே மாறி விடுகின்றார் பெரியாழ்வார்.

இவ்வாறு தாயன்பின் பிரதிபலிப்பாக ஓர் அழகிய உயிரோட்டமாக இத் தாலாட்டுப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன எனலாம். ஆழ்வார்கள் வித்திட்ட தாலாட்டானது தமிழ் இலக்கியத்தில் பிற்காலத்தில் பல தாலாட்டுப்பாடல்கள் தோன்றிட வழிவகுத்தது. அன்றும், இன்றும், என்றும் தாலாட்டு என்பது குழந்தை மீது தாய் கொண்டுள்ள உயிரியல் இணைப்பு மிக்க ஓர் அற்புதமான சீராட்டு என்றால் மிகையாகாது.

**கலாவிபூஷணம், கலாரத்ன விபூஷண்**
**இரா. நிஷாந்தன்**
**தமிழாசிரியர்**
**கிளிநொச்சி தெற்கு கல்வி வலயம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழ்மொழிக்கு, பழந்தமிழ் இடைக்காலத் தமிழ் தற்காலத் தமிழ் என்ற பாகுபாட்டின் காரணங்கள்

மொழியானது மக்கள் வாழ்வில் பிறந்து மக்களால் வளர்க்கப்பட்ட மக்களின் வாழ்வை நாகரிகம் உடையதாக உயர்த்தி வரும் அரிய கலையாகும். எமது முன்னோர்கள் விட்டுச் சென்ற கருவூலத்தைக் காண்பதற்குத் துணையாக அமைகின்றது. திராவிட மொழியானது இலக்கண இலக்கியத்தைக் கொண்டுள்ளது. தமிழ் மொழியை பழமைக்குப் பழமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் வழங்குகின்றது ஆனால் மொழியானது காலத்திற்குக் காலம் மாற்றம் அடைந்து வருகின்றது "கடி சொல் இல்லை காலத்தும் படி நீ " என தொல்காப்பியம் பழையன கழிதலும் புதியன புகுதலும் வலுவள கால வகையினாலே நன்னூல் ஆறும் குறிப்பிட்டு இருக்க காணலாம்

மொழி வளர்ச்சியானது, மொழி வளர்வது கடன் வாங்கலாலும், பரிணாம வளர்ச்சியினாலும் என்பர். மொழியியாளர்கள் மொழி வரலாறு என்பது மொழியில் ஏற்படும் மொழியியல் உருபணியில், சொற்பொருள், சொற்றொடர் அமைப்பு சொற்கோவை போன்றனவற்றில் ஏற்படும் மாற்றத்தை ஆராய்வதாகும். தமிழ் மொழியின் வரலாற்றை மூன்று காலப் பகுதியாக வகுத்து நோக்கலாம். பழந்தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத் தமிழ்.

மனித வாழ்வில் பின்னிப்பிணைந்து வரும் மொழிக்கு ஆண்டு ரீதியாக வரையறை செய்து அதனை பிரித்து ஆராய முடியாது. ஏனெனில் ஒரு காலத்தில் மொழியாகக் காணப்பட்ட வரன்முறைகள் மற்றைய காலகட்டத்தில் முற்றாக இல்லாது போய் விடும் எனக் கூற முடியாது. அதன் எச்சங்கள் இருக்கவே செய்யும் அந்த வகையில் கிறிஸ்துவுக்கு பின் மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் கிறிஸ்துவுக்குப் பின் ஆறாம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் கிடைக்கும் தமிழ் மொழி ஆவணத்தைக் கொண்டு அதனைப் பழந்தமிழென்றும் குறிப்பிட்டனர். உதாரணமாக ***பிராமிக் காலம், தொல்காப்பியர் காலம், சங்க காலம், சங்கமருவிய காலம்*** போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கிறிஸ்துவுக்குப்பின் ஆறாம் நூற்றாண்டுக்கும் 18 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலம் வரை இடைத்தமிழ் காலம் என்று கூறுவர். உதாரணமாக ***பல்லவர்காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், மராட்டிய காலம்*** போன்றவற்றை குறிப்பிடலாம். கி.பி 19ஆம் நூற்றாண்டு முதல் தற்காலம் வரை நவீன காலம் அல்லது தற்காலம் என்றும் பிரித்து நோக்கப்படுகின்றது. உதாரணமாக 19ஆம் நூற்றாண்டு காலம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காலகட்டத்தில் மொழிக் கூறு அடுத்த காலகட்டத்தில் தொடரவே செய்யும் ஆனால் அவற்றுக்கு இடையே உள்ள முக்கிய வேறுபாடு பண்டைத் தமிழ் எனக் கூறும்போது சங்ககாலம், சங்கமருவியகாலத் தமிழையும் இடைக்காலம் எனும் போது பல்லவ, சோழ நாயக்கர் காலத் தமிழையும் குறித்து நிற்கும். இதுவே பழந்தமிழுக்கும் இடைக்காலத் தமிழுக்குமான வேறுபாடாகும்.

பழந்தமிழ் அல்லது முன்தமிழ் அல்லது தொல் பழந்தமிழ் என்பவற்றுள் தமிழ் பிராமிக் கல்வெட்டு, தொல்காப்பியம் என்பன அடங்கும். மத்திய பழந்தமிழில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பவும் பின் தமிழில் திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்பனவும் நிலம் மற்றும் அந்நில மக்கள் குறித்தும் பாடப்பட்டது. திருக்குறள், மணிமேகலை போன்ற நூல்கள் தொடர் செய்யுள்களாகவும், முத்தமிழ்க் காப்பியமாகவும் காணப்படுகிறது.

இடைக்காலத் தமிழினை முன்னிடைக்காலத் தமிழ், மத்திய இடைக்காலத் தமிழென்றும் அடிப்படையில் பல்லவ, சோழ, நாயக்கர் காலத்தைப் பிரிக்கலாம். பழந்தமிழிலும் இடைக்காலத் தமிழிலும் வழக்கில் இருந்த இலக்கண அமைப்பு சொற் தொகுதி, சொற்பொருள் என்பவை வேறுபடுவதை அவதானிக்கலாம். உதாரணமாக சங்க காலத்தில் தோற்றம் பெற்ற ஐங்குறுநூறில் வருகின்ற வேளாபத்து, 57ஆம் பாடலை உரை ஆசிரியர் துணை யின்றிப் பொருள் விளங்க முடியாது. *'புதன் இசை முடங்கும வேள வெண்பு....*

சங்கமருவிய காலத்தில் தோற்றம் பெற்ற மணிமேகலையில் இடம்பெற்றுள்ள "தாயில் தூவா குளறி ..."எனும் பாடலில் சொற்கள் கடினமானவை என்பதோடு பாடல் அமைப்பு இடைக்காலத்தில் இருந்து வேறுபடுகிறது. இடைக்காலத் தமிழில் உதாரணமாக அப்பர் தேவாரத்தில் "மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும்..." என்ற பாடல் சில சொல் அமைப்பைத் தவிர பெரும்பாலும் நாம் அறிந்த சொற்கள் எமக்கு விளங்கக்கூடிய ஒலியமைப்பையும் உடையதாக அமைந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஒலி வேறுபாடு

பழந்தமிழில் வல்லின வெடிப்பொலியாகிய *நகரம்* நுனி அண்ண வெடிப்பொலியாகிய (ன) னகரம் தனித்தனியாக இருந்தது. இடைக்காலத்தில் இரண்டும் சேர்த்து எழுதப்படுகிறது. பல்லவர் காலத்தில் *நகரம்* மொழிக்கு ஈற்றில் வருவது மறைந்தது தொல்காப்பியர் *யகரம்* மொழி முதலில் எல்லா இடத்திலும் வராது என்று கூற, நன்னூலார் வரும் என்கிறார். ஆனால் இடைக்காலத்தில் *யகரம்* எல்லா இடத்திலும் வந்துள்ளது. ***பழந்தமிழில் உதாரணமாக*** யாடு யாமை யான்டு யாறு யார் யாணை இடைக்காலத் தமிழில் ஆடு, ஆமை, ஆண்டு, ஆறு, ஆர், ஆணை எனினும் யார் , யாணை ஆகியன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாது நின்ற போதிலும் ஆர், ஆணை என்று கூறப்படுகின்றது. யாமன் , யவனர் யூகம், யோகம் என்ற சொற்றொடர் பழந்தமிழில் வழங்கப்பட்டன. யவனம் யோகி என்பன இடைக்காலத்தில் வழங்கப்பட்டுள்ளன.

## இலக்கண வேறுபாடு

ஆல், இல், ஏல் எனும் சொற்றொடர்கள் பல்லவர், சோழர் காலப்பகுதியில் மிகுதியாக காணப்பட்டுள்ளது. உதாரணம் "நிலைபெறுமாறென்னுதியேல்.." (அப்பர் சுவாமிகள் 2395 ஆம் பதிகம்) இல் இலக்கண வேறுபாடு பண்டைத் தமிழில் இல்லை. பண்டைக் காலத்தில் ஒருமை முன்னிலையில் இருந்துள்ளது. ***உதாரணமாக காண்பீ, செய்வீ*** இடைக்காலத்தில் ' கள் விகுதி' பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணம் அவர்கள் இவ்வாறாக ஏவல் வினை வினையெச்சம் எதிர்மறை பெற்ற வடிவங்கள் பாதுகாக்கும் விகுதி என இவற்றின் வேறுபாடுகளை நாம் உணரலாம்.

## தற்காலத் தமிழ்

மேலைநாட்டவரின் வருகைக்குப் பின்னர் தமிழ் மொழி வரலாற்றில் குறிப்பாக 19ஆம் நூற்றாண்டுக்குப் பின் பெரியதொரு மாற்றம் ஏற்பட்டது. இதற்கு காரணமாக மேலை நாட்டவரின் வருகை, ஆங்கில மொழியின் செல்வாக்கு, அச்சியந்திர வருகை 19 நூற்றாண்டுக்கு முன்னர் நாட்டில் அமைதியின்மைக் கண்டோம். கிறிஸ்தவ சமயம் பரவியவையும் புதிய கல்வி முறைமை தோன்றியதையும் அறிவோம். மேல்நாட்டவர் தொடர்பாடல், சிறுகதை, புதினம், பத்திரிகை , உரைநடை போன்ற பல்வேறு துறைகளில் தமிழ் மொழியும் நவீன மொழியாக வாழத் தலைப்பட்டது.

வெளிநாட்டு அறிஞர்களான ஜோசப் கோன்செண்ட்ரைன் பெஸ்கி, கிறால், ஜி.யூ போப் ஆர்டன், கால்ட்டுவெல் ஆகியோர் 19ஆம் நூற்றாண்டு நவீன தமிழைக் குறிப்பாக, பேச்சுத் தமிழைப் பற்றி நன்கு ஆராய்ந்து உள்ளனர் . கால்ட்டு வெல் அவர்களைத் ***திராவிட மொழியின் தந்தை*** எனக் கூறுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். அவருடைய ***திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்*** இதற்குத்தக்க சான்றாக உரைநடை வளர்ச்சி பெற்றுள்ளது. கலையியல், அறிவியல் போன்ற துறைகள் வளர்ச்சி அடைந்துள்ளன, மாற்றம் அடைந்துள்ளன. புதிய புதிய சொல்லாக்கம் துணை வினை போன்றவற்றின் மாற்றம் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளன. இவ்வாறாக மத்திய காலகட்டங்களின் ஒப்பீடுகள் தற்காலத் தமிழ் பல்வேறு வகையில் ஒப்பீடுகளில் வேறுபட்டு நிற்பதை காண்கிறோம்.

***திரு.திருமதி றோசிகா சுஜவரதன்***
***ஆசிரியர்கள்***
***கிளி / பூநகரி நல்லூர் ம.வி***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அழகியற் கல்வியின் அவசியம்

உயர்ந்த பண்புகளை வெளிப்படுத்தும் கலையே அழகியற்கலைகள் ஆகும். அவை லலிதகலைகள் என்றும் அழைக்கப்படுகின்றன. சங்கீதம், சித்திரம், நடனம், ஓவியம் போன்றன லலித கலைகள் ஆகும். மனிதனின் உள்ளத்தில் உணர்ச்சிகளை எழுப்பி இன்பத்தையும், மனநிறைவையும் கற்பனை வளத்தையும் தருகின்றன. இசைக்கலையானது உணர்ச்சி வழியாக செவியினுள் புகுந்து மனதை நிறைவிக்கின்றது. கண்ணின் வழியாகக் கருத்தினுள் புகுந்து மனதை நிறைவிப்பன சிற்பம் ஓவியம் போன்றன. கண்டும் கேட்டும் இன்பமடையக் கூடிய கலைகள் இசையும் நடனமுமேயாகும்.

உள்ளத்திற்கு அமைதியையும், சாந்தத்தினையும் சந்தோசத்தினையும் தரவல்லது இசை. மென்மையான ஒலிகளைக் கேட்கும் கர்ப்பிணித் தாய்மார்கள் நல்ல இரசனை உணர்வுள்ள குழந்தைகளைப் பிரசவிக்கின்றனர். எனவே இசையானது அனைத்தையும் ஆட்கொள்ளுகின்றது. குழந்தையானது கருவிலிருக்கும் போதே இரசிக்கத் தொடங்குகின்றது. மென்மை கடினம் போன்ற ஒலிவேறுபாடுகளுக்கமைய வேறுபட்ட அசைவுகளைப்பிரதிபலிக்கின்றது. இதனைக் குழந்தைகளின் ஒலிவேறுபாடுகளைப் பிரித்தறியும் ஆற்றல் இயல்பாகவே வளர்ச்சியடைகின்றன. இவ்வாற்றலானது படிப்படியாக வளர்ச்சியடையும் போது கண்கள், முகம், உடல் உறுப்புகள் அனைத்தையும் ஓர் இசை உணர்வுடன் அசைக்கத் தொடங்குகின்றன. ஒலிகளுக்கேற்ப அசைவுகளும் வேறுபடுகின்றன. இதனையே அழகியல் உணர்வு என்கின்றோம்.

குழந்தையானது கருவில் இருக்கும்போதே கற்கத்தொடங்குகின்றது. பிறக்கும்போதே சில இசைபாக்கங்களுடன் பிறக்கின்றது. குழந்தை வெற்றுக்குடமாக மண்ணில் பிறப்பதில்லை. ஒரு சிலவற்றைக் கற்றுக்கொண்டே பிறக்கின்றது. குழந்தைப் பராயத்திலிருந்தே அழகியல் உணர்வு, இரசனை என்பன வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இவற்றினை வளர்த்தெடுப்பதனால் பிள்ளைகளின் சிந்தனை ஆற்றலானது விருத்தியடைகின்றது. நாம் வாழும் சூழலை இரசிக்கவும் நேசிக்கவும் பழகுகின்றது. அழகியல் உணர்வுள்ள ஒரு குழந்தை சமநிலை ஆளுமை உள்ள ஒருவராக வளர்ச்சிபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று ஆளுமை வளர்ச்சி. இவ் ஆளுமையை ஏற்படுத்துவதற்கு தனியாளின் அறிதல் ஆட்சி, எழுச்சி ஆட்சி, உள இயக்க ஆட்சி ஆகியவற்றின் வளர்ச்சி அவசியமானதாகும். எழுச்சி ஆட்சி விருத்தியாவதற்கு அழகியற் பாடங்களைக் கற்க வேண்டும்.

ஒருவன் சமூகத்திற்கு ஏற்ற ஒரு நற்பிரசையாக வாழவேண்டுமாயின் அவனிடத்தில் நல்ல மனப்பாங்கு வளர்ச்சி பெற வேண்டும். சமூகப்பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் பார்க்கின்ற அணுகுகின்ற மனப்பாங்கானது வளர்ச்சி பெறவேண்டும். அவை பிள்ளைப் பருவத்திலிருந்தே வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அதற்கு கருணை, அன்பு, பொறுமை, சகிப்புத்தன்மை, பண்பு போன்ற குணப்பண்புகளை பிள்ளையின் உள்ளத்தில் பதியச் செய்வதற்கு அழகியற் கல்வியானது அவசியமாகின்றது.

சூழலின் அழகை ,ரசிப்பதற்கும், மதிப்பதற்கும், பேணுவதற்கும் அழகியற் செயற்பாடுகள் வழிவகிக்கின்றன. இயற்கையின் அழகைக் கண்டு இரசிப்பதில் ஈடுபடும்போது பிள்ளையின் நயத்தல் திறனானது விருத்தியடைகின்றது. தான்வாழும் வீட்டையும், சுற்றுச்சூழல், பாடசாலை போன்ற இடங்களை துப்பரவாகவும் அழகாகவும் வைத்திருப்பார்கள். இரசனை நயப்பு விருத்தியடையும்போது குரோதம், பகைமை, பொறாமை போன்ற சமூகத்திற்கு நன்மை விளைவிக்காத மன எழுச்சிகளை இல்லாமல் செய்து தர்ம சிந்தனைமிக்க சமுதாயம் இந்த அழகியற் கல்வியைக் கற்பதனால் உருவாகும். இதனால் அழகியற் கல்வியானது முக்கியம் பெறுகின்றது.

இவ்வாறான உயர்பண்புகளைக் கொண்ட ஒருவர் இயல்பாகவே சமூக நலனிற்கு மதிப்பளிப்பர். மற்றவர்களுக்கு உதவிசெய்வதற்கும், ஒத்துழைப்பு வழங்குதல், கூட்டுறவுடன் செயலாற்றும் வல்லமை போன்ற பண்புகளுடன் காணப்படுவர். அழகியற் கலைகளினூடாக தனது கலாச்சார விழுமியங்களை மதித்து நடப்பதற்கும் வெவ்வேறு கலாச்சாரங்களை இனங்காண்பதற்கும் மதிப்பளித்து நடப்பதற்கும் முற்படுவார்.

அத்தோடு அழகியற்பாடங்கள் தனிமையில் ஒரு நண்பனாக அமைவது மட்டுமன்றி வெளி உலகுடனும் ஒத்து வாழ்வதற்கும் வழிவகுக்கும். ஓய்வுநேரங்களை பயனுள்ள வகையில் அறிவுடைமையுடன் செலவுசெய்வதற்கும் காரணமாகின்றன. தனித்தேனும் ஒருமித்தேனும் மகிழ்வெய்தக் கூடிய சமூகத்திற்கு நன்மை தரும் ஒரு ஊடகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளம்சார்ந்த செயற்பாடான நயத்தலானது யாதேனும் ஒரு புலனால் உணரப்படும்போதும் அந்த அனுபமானது பெறப்படுகின்றது. இதனை அழகியற் கல்வியூடாக மேம்படுத்தலாம். தம் இதயத்தைத் தொட்ட அழகியல் ஆக்கங்களை மற்றவர்களுடைய மனதில் பிறப்பிப்பதற்காக முயற்சிக்கின்றனர். அப்போது ஆக்கசிந்தனை வெளிப்படுகின்றது.

இவ்வாக்க சிந்தனையினை ஆய்வுரீதியாக மதிப்பீட்டிற்கு உட்படுத்துவார். அப்போது விமர்சிக்கும் ஆற்றல், அனுபவம் பெறப்படுகின்றது. தனியாள் வளர்ச்சிக்கு அழகியற் கல்வியின் செயற்பாடுகள் உதவுவது போன்று கல்விப்பரப்பில் வேறு விடயங்களையும் கற்பதற்கான ஒரு ஊடகம் அழகியற் பாடங்கள் என்ற வகையிலும் அழகியற்கல்வி முக்கியம் பெறுகின்றது. செய்முறைகளும் அனுபவங்களும் நிறைந்ததாகக் காணப்படும் அழகியற் பாடங்களை ஊடகமாக்கிக் கொள்வதன் மூலம் அதிக முயற்சி இன்றியே ஏனைய பாடவிடயங்களைக் கற்றுக்கொள்ள முடியும். எனவே இவ்விடயங்களை எல்லாம் பார்க்கும்போது முன்பள்ளி முதல் பாடசாலைப் பாடவிதானம் வரை அழகியற் கல்வியானது மிகவும் உன்னதமானதொரு இடத்தினை வகிக்கின்றது.

*"கலை இன்பமே நிலை இன்பம்"*



*திருமதி திலகவதி ரவிச்சந்திரன்*
*இசை ஆசிரியை*
*யா/ கச்சாய் மகாவித்தியாலயம்*
*கொடிகாமம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இருபத்தோராம் நூற்றாண்டின் கல்வி மறு சீரமைப்பு

**அறிமுகம்**

இலங்கையின் கல்விப் போக்கில் கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட அனுபவங்களின் வாயிலாக உலகளாவியதும் உள்நாட்டினதும் கலவையாக இலங்கையின் நிலை பேறான அபிவிருத்தி என்பது சிந்திக்கத் தூண்டியுள்ளது. மனித வரலாற்றின் மேம்பாட்டிற்கும் சமூக அபிவிருத்திக்கும் இடையிலான வலுவான தொடர்பை ஏற்படுத்தும் வகையில் கல்வி மறு சீரமைப்புப் பேசப்படுகிறது. சுதந்திரத்தின் பின்னரான 70 ஆண்டுகள் கடந்த நிலையிலும் வெவ்வேறு கல்வி மறு சீரமைப்புகளை காலத்திற்குக் காலம் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் அரசு மேற்கொண்டு வந்த போதும் எதிர்பார்த்த இலக்கை இலங்கை இன்னும் எட்டவில்லை என்பது நிதர்சனமான உண்மையே!

பிரித்தானியக் குடியேற்ற வாத கல்விக் கொள்கையின் தாக்கம் இன்னும் அகன்ற பாடில்லை தனி மனித வளர்ச்சிக்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் இற்றை வரை உதவும் கல்வியானது நாட்டின் நிலைபேறான அபிவிருத்திக்கு பங்காற்றும் வகையில் மாற்றங்களை உள்வாங்க வேண்டிய தேவை சகல கல்வியலாளர்களாலும் உரைக்கப்பட்டதன் விளைவாக 21 ஆம் நூற்றாண்டின் புதிய கல்வி மறுசீரமைப்பானது 2023 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வருவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் கலைத்திட்டம்,பாடசாலையின் ஆசிரியர்கள்,மாணவர்கள்,அதிபர்கள் எனப் பல மட்டங்களும் ஏற்படுத்தவிருக்கும் சீரமைப்புகளைத் தொட்டுச் செல்வதே இக்கட்டுரை நோக்கமாகும்.

**கல்வி மறு சீரமைப்பு மூல கூட்டுத் துறைகளும் கலைத்திட்டமும்**

வளமான தேசத்தை உருவாக்கும் அடித்தளமாக “எமக்குள்ள பெறுமதி மிக்க வளமான மானிட வள அபிவிருத்தியினால் நோயற்ற விளைதிறனான தனிநபரும் மகிழ்வாக வாழ்கின்ற குடும்பமும்” எனும் எண்ணக் கருவை அடியொற்றி மானிட வளத்தை விருத்தி செய்யும் கொள்கைக்கு ஏற்பத் தீர்மானிக்கப்பட்ட கல்வி மறுசீரமைப்புச் செயற்பாடுகளைப் பின்வரும் ஒன்பது மூல கூற்றுத் துறைகளூடாக முன் வைக்கலாம் அவையாவன.

***1. முன்பள்ளிக் கல்விக்கு முன்னுரிமை வழங்கல்***

- தரப்படுத்தப்பட்ட முன்பள்ளிக் கல்விக்கு முன்னுரிமை வழங்கல்
- அனைத்து முன்பள்ளிக் கல்வியையும் சர்வதேசத் தரத்திற்கு உயர்த்துதல்
- எல்லா முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் பயிற்சி

***2. கல்வி நிர்வாக மறு சீரமைப்பு***

- உட்கட்டமைப்பு வசதிகள்
- அதிகஸ்டப் பிரதேச ஆசிரியர்களுக்குக் கொடுப்பனவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரிபூரணமான மும்மொழித் தேசிய பாடசாலைகள் -20
- பிள்ளை நேய ஆரம்பப் பாடசாலை
- பாடசாலை அடிப்படையிலான பல்கலைக்கழக அனுமதி
- முழுமையான ஆசிரிய சமூகத்தையும் பட்டதாரி ஆக்குதல்

3. ***கலைத்திட்ட மறு சீரமைப்பு***
- உள்ளடக்க அபிவிருத்திக் கற்பித்தல்
- மதிப்பீடும் கணிப்பீடும்
- பரீட்சை மையக் கல்விக்குப் பதிலாக மாணவர் மையக் கல்வி
- கற்றல் மையக் கல்வி

4. ***சுகாதாரத்துக்கு முதலிடம்***
- நிலைபேறான சுகாதார வேலை திட்டம்
- உள, சமூக நல்வாழ்வு
- ஆன்மீக நல்வாழ்வு

5. ***தேசிய பாடசாலைகள் ஆயிரம்***
- கொத்தணி பாடசாலைகள்
- எல்லாப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தேசிய பாடசாலைகள் -03

6. ***உயர் தொழில் விருத்தி***
- எல்லா ஆசிரிய சமூகத்தையும் பட்டதாரிகள் ஆக்குதல்
- செயற் சாதனைகளை முதன்மையாகக் கொண்ட பதவி உயர்வுக்கு ஒழுங்கு முறை

7. ***பாடசாலை கல்வியை தொழில் கல்வியுடன் இணைத்தல்***
- பரீட்சையில் சித்தியடைந்த சித்தி அடையாத எல்லோருக்கும் உயர்கல்விக்குச் சந்தர்ப்பம்
- சாதாரண தரத்தில் பாடசாலையை விட்டுச் செல்லும் எந்தவொரு பிள்ளைக்கும் தொழிற்கல்விச் சந்தர்ப்பம்

8. ***தொலைக்கல்வி ஊடாக மேலதிக கல்வி***
- நிகழ்நிலைக் கல்வி (Online Education)
- வார இறுதிக் கல்வி
- திறந்த கல்வி
- சுய கற்றல்
- உபாய முறை ஊடகத் திறனும் பயிற்சியும்

9. ***உயர் கல்வி***
- பல்கலைக்கழக உருவாக்கம்
- எல்லாப் பல்கலைக் கழகங்களையும் உலகத் தரத்திற்கு உயர்த்துதல்
- தொழில் துறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய 09 துறைகளை அடிப்படையாகக் கொண்டு எல்லாப் பிள்ளைகளும் கல்விக்குப் பிரவேசிக்கும் உரிமையுள்ள தரமான கல்வி முறைமையை உருவாக்குவதற்கு ஏதுவாகவே தற்போதைய கல்வி மறுசீரமைப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது இதனூடாகத் திறன்களை மேம்படுத்தி தொழிற் சந்தைக்குப் பொருத்தமான கல்வியில் ஈடுபடச் சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது எனலாம்.

மறு சீரமைப்புக்கு உட்படுத்தப்பட்ட மூலக்கூறுகளை ஏற்படுத்தும் வகையில் பொதுக் கல்விக்குப் பரிந்துரைக்கப்பட்ட விசேட செயற்பாடுகளாகப் பின்வருவன குறிப்பிடப் பட்டுள்ளன.

*1.* வளங்களையும் வசதிகளையும் பரிமாற்றிக் கொள்ளும் அடிப்படையில் பிரதேச கல்விப் பணிப்பாளரின் கீழ் கொத்தணி பாடசாலைகளில் உருவாக்குதல்

2. இரண்டு முறைகளின் கீழ் பாடசாலைகள் வகைப்படுத்தப்படுதல்

உதாரணமாக - Primary (6-11)
Secondary (12-13)
Post- secondary (University)

3. பாடசாலைக் கலைத்திட்டத்தில் STEAM எண்ணக் கருவானது சமயம், ஒழுக்கம், மனித விழுமியமும் ஒழுக்க நெறியும், மானுடவியல், பாலியல்கல்வி எனும் முக்கிய பாடங்களை உள்ளடக்குதல்

4. மாணவர்களின் தொடர் மதிப்பீட்டுச் சட்டமும் ஆலோசனைக் கோவையையும் அறிமுகம் செய்தல்

5. தனியாகவும் கூட்டாகவும் நான்கு மொழித் திறன்களையும் பரீட்சித்தல்

6. பல்கலைக்கழக அனுமதிக்கு "திறன் சான்றுபடுத்தல்" (Skill Passport) கட்டாயப் பகுதியாக்கப்படல்

7. முழுமையான பாடசாலைக் கட்டடங்களுக்கு மாணவ விருப்பையும் ஆற்றலையும் இனங்கண்டு வழிகாட்டலை அளிக்கும் பயிற்சிப் போதனைச் சேவையை உருவாக்குதல்.

இத்தகைய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் வகையில் பொதுமக்களின் கருத்தைப் பெற விளைந்திருப்பது 21 ஆம் நூற்றாண்டின் கல்வி மறு சீரமைப்பு எதிர்பார்த்த இலக்கை அடைய ஏதுவாக அமையும் என்பது எதிர்பார்ப்பாகும்

முன்மொழியப்பட்ட கல்வி மறுசீரமைப்பு புதிய மிலேனியத்தின் போக்குகளுடன் ஒன்றிணைதல் முக்கியமானது இதன் அடிப்படையில் நான்காவது கைத்தொழிற் புரட்சிக்கு ஏற்ற வகையில் 21 ஆம் நூற்றாண்டின் திறன்களைக் கல்வி ஊடாக மேம்படுத்துவதற்காகத் தான் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியும் இதன் அடிப்படையில் உலகமயமாதலுக்கு ஏற்ப நவீன உலகப் பொருளாதார, தொழில்நுட்ப, சமூகத்துறைகளில் விரைவாக நிகழ்கின்ற மாற்றங்களுக்கு ஏற்ப துலங்கலைக் காட்டும் கல்வியே வேண்டப்படுகின்றது இதற்காகத் தனிப்பட்ட ஒருவர் 21 ஆம் நூற்றாண்டில் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படும் திறன்களாக

1. **கற்றல் திறன்** - அதாவது, விமர்சனச்சிந்தனை, படைப்பாற்றல், சேர்ந்துவாழ்தல், தொடர்பாடல் என்பவையும்

2. **எழுத்தறிவு திறன்** - தகவல் தொழில் நுட்பம், ஊடக எழுத்தறிவு, தொழில்நுட்ப எழுத்தறிவு என்பனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **வாழ்க்கைத்திறன்** - நெகிழும் தன்மை, தலைமைத்துவம், ஆரம்பிக்கும் திறன் , உற்பத்தித்திறன், சமூகத்திறன் என்பனவும் கல்வி மூலம் வளர்த்தெடுக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய திறன்களையே சுருக்கமாக 3L எனக் குறிப்பிடுவர்.

**21ஆம் நூற்றாண்டில் பாடசாலைகள்**

நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிக்கும் திருப்தியுடைய பரம்பரையினரை உருவாக்கி நாட்டிற்கு வழங்கும் நிறுவனமாகப் பாடசாலைகள் விளங்குகின்றன. கல்வி முறைமைக்கும் தொழிற்சந்தைக்குமான பொருத்தப்பாடானது பாடசாலைகளினாலேயே ஏற்படுத்தப்பட முடியும். பிரச்சினைகளை இனங்கண்டு தர்க்க ரீதியாகச் சிந்தித்து முடிவெடுக்கும் ஆற்றல்களை உடைய சந்ததியினரைப் பாடசாலை எனும் தளத்திலிருந்து உருவாக்க முடியும் என்பது வெளிப்படையாகும்.

பாடசாலைகள் பலமான தலைவர்களின் வழிகாட்டலுடன் கூடியதும் தன்னம்பிக்கை யுடைய ஆசிரியர் சமுதாயத்தைக் கொண்டு இயங்க வேண்டும். கற்றல் கற்பித்தலிலும் ஏனைய செயற்பாடுகளினாலும் புத்தாக்க அணுகுமுறையைப் (Innovative Approaches) பயன்படுத்தி ஆசிரியர்களின் வழிகாட்டலில் மாணவர்களின் செயற்றிறனான கற்றல் வலுவுள்ளதாக்கும் கவர்ச்சிகரமான மத்திய நிலையமாகப் பாடசாலைகள் 21ம் நூற்றாண்டுக் கல்வி நோக்கி நகர்த்தப்படத் தயாராகின்றனர்.

பாடசாலைகள் குழுவேலைக்கும், பங்குபற்றுதலுக்குமேற்ற சூழலைக் கொண்டிருப்பதோடு, நீண்ட கால, குறுங்கால உபாய உத்திகளோடும் எதிர்பாராத நிலைமைகளுக்கு முகம் கொடுக்கக் கூடிய வழிமுறைகளையும் உள்வாங்கி இருக்க வேண்டும். இன்னும் நவீன தொழில்நுட்பத்தை செயற்றிறனாக்கும் அத்தியாவசிய வகைகளையும் சர்வதேசத்துடன் இணையத்தக்க சூழமைவையும் கொண்டிருக்க வேண்டும். இன்னும் பாடசாலை தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப் பங்குதாரர்களாக மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பேறுகளின் அடிப்படையில் மொடியூல் அடிப்படை, ஒருங்கிணைந்த அடிப்படை, தொழிநுட்பம், பல்லூடகம், யதார்த்தமான கற்றல், கலப்புக் கற்றல், பன்மொழிக்கற்றல், ஆக்கத்திறன், புத்தாக்கம் முதலான கலைத்திட்ட மாற்றங்களை முன்னெடுக்கக்கூடிய களமாகப் பாடசாலைகள் மாற்றம் பெறவேண்டிய தேவையும் இங்கு மேலோங்கிக் காணப்படுகிறது.

**21ஆம் நூற்றாண்டில் ஆசிரியர்கள்.**

இதுவரை உள்ள ஆசிரியர்கள் தமது கற்பித்தல் சாயலை மாற்ற வேண்டிய கட்டாயம் 21 ஆம் நூற்றாண்டுக் கல்வி மறுசீரமைப்பு உணர்த்தி நிற்கின்றது. குறிப்பாக,

1. கற்பித்தல் எப்பொழுதும் கற்றலை மையமாகக் கொண்டிருக்க வேண்டும்
2. மாணவர்கள் சுயமாகக் கற்றுத் தெளிய வாய்ப்பளித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைச் சமூகத்துடன் இணைத்து முன்னறிவுடன் மாணவரைக் கற்றலில் ஈடுபடத் தயார்ப்படுத்தல்.

4. மாணவர்களின் பல் தன்மை மற்றும் அவர்கள் கற்கும் சாயல் விருப்புக்களை இனம் காணல்

5. அனைத்து மாணவர்களும் வெற்றிக்கு வழி காட்டுவதோடு மாணவர் கற்பதற்கான வசதிகளை ஏற்படுத்தல்

6. தொழில்நுட்ப அறிவையும் குடியுரிமைத் தன்மையையும் ஊக்குவித்துத் தொழிலுக்கு வழிகாட்ட வேண்டும்.

இங்கு ஆசிரியர் எந்தவொரு கல்வி மறு சீரமைப்பையும் முன்னெடுக்கும் பிரதான கருத்தாக்கள் என்பதால், புதிய கல்வி மறு சீரமைப்பின் நோக்கங்களை உள்வாங்கி, மாணவர்களை அது நோக்கி நகர்த்துவதற்கான அறிவுத்தேடலுடைய ஆசிரியராகத் தம்மை வளர்க்க வேண்டியது கட்டாயமானதாகின்றது.

**21ஆம் நூற்றாண்டின் மாணவர்கள்.**

இருபத்தோராம் நூற்றாண்டின் மாணவர் பற்றிய கலாசார விமர்சனத்தின் ஊடாக மூன்று கட்டங்களை உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

**1. புத்தாயிரம் (Millennials)**

அதாவது இத்தகைய மாணவர்கள் எண்மான (Digital) தொழில்நுட்பத்திற்கு அந்நியமில்லாத, பிறப்பிலேயே தொழில்நுட்ப அறிவுடையோர். எண்மான ஊடகங்களின் பின்னணியில் வளரும் முதலாவது பரம்பரையினரைப் புத்தாயிரம் எனக் குறிப்பிடுகின்றனர். 1981 தொடக்கம் 1994/96 இற்கு இடையிற் பிறந்தோர். தற்போதைய மக்கள் தொகை 25 முதல் 40 வயது வரை உள்ளோர் இதற்குள் அடங்குவர்.

**2. Z (Generation) ( Z பரம்பரை )**

இவர்கள் பத்தாயிரத்துக்குப் பின்னர் வரும் மக்கள் தொகையாகும். 1990 தசாப்தத்தின் நடுப்பகுதியில் இருந்து 2010 தசாப்தத்தின் முன் பகுதியில் பிறந்தவர்களைக் குறிக்கும். இவர்கள் ***எண்மானவாசிகள்*** எனவும் இவர்கள் குறிப்பிடப்படுகின்றனர்

**3. அல்பா பரம்பரை**

Z பரம்பரையினருக்குப் பின்னரான மக்கட் தலைமுறையாகும். 2010 ஆம் தசாப்தத்தின் முதல் பகுதியிலும் 2020 இன் நடுப்பகுதியில் பிறந்தவர்கள் அல்பா சனத்தொகை எனப்படுகின்றனர். 21ம் நூற்றாண்டில் பிறந்த முதலாவது தொகுதியினர். இந்தத் தலைமுறையினர் ***புத்தாயிரக் குழந்தைகள்*** எனவும் அழைக்கப்படுகின்றனர்.

**21ஆம் நூற்றாண்டின் அதிபர்கள்**

இங்கு மறுசீரமைப்புச் செய்யப்பட்ட கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் அதிபர்கள் கல்வித் தகைமையில் பரிபூரணத்துவம் பெற்ற அதிகாரமோடு தூரநோக்குடன் கருமமாற்றும் தலைவர்களாக இருக்கவேண்டும் எனக் குறிப்பிடப்படுகின்றது. வழிகாட்டுபவராகவும் நெகிழும் தன்மை உடையவராகவும் நவீன இலத்திரனியல் மூலம் உலகத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற கற்றலில் ஈடுபடுபவராக இருப்பது பிரதானமானது. விமர்சனத்தோடு சிந்தித்துக் கருமமாற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரையும் தூண்டுகின்ற மனித நேயம் மிக்கவராக அதிபர் விளங்கவேண்டும். இத்தகைய அதிபருக்கான நான்கு திறன்கள் கூறப்பட்டுள்ளன.

*1. கல்வி முகாமைத்துவம்*

*2. சிக்கலான பிரச்சனைகளைத் தீர்த்தல்*

*3. தொடர்பாடல்*

*4. தன்னையும் ஏனையவர்களையும் மேம்படுத்தல்*

ஆகிய நான்கும் அவையாகும்

இத்தகைய நான்கு திறன்களும் அதிபரிடம் இருக்கும் இடத்தில் **21** நூற்றாண்டின் கல்வி மறுசீரமைப்பை வெற்றிகரமாக அதிபர்களால் முன்னெடுக்க முடியும் என்பது எதிர்பார்ப்பாக உள்ளது

## முடிவுரை

இலங்கையின் கல்வி முறைமையால் உருவாக்கப்படும் குடிமகனை நாட்டின் அபிவிருத்திக்கான பங்காளி ஆக்குவது நூற்றாண்டின் தேவையாக உணரப்பட்டுள்ளது தேசிய அபிவிருத்தி என்பது ஒரு நாட்டில் அல்லது சமூகத்தில் கல்வி பொருளாதார சமூக கலாச்சார அரசியல் ஆகிய அனைத்து துறைகளிலும் அறிவியல் ரீதியாக ஏற்படும் வளர்ச்சியாக இதனாலேயே மக்களின் வாழ்க்கை தர உயர்வடையும் கல்வியூடாக புதிய எண்ணங்கள் திறக்கப்படுகின்றது என்பது மிகை அல்ல புத்தாக்கச் சிந்தனையை தோற்றுவிக்கும் அதேவேளை புதிய எண்ணங்களின் ஊடாக மானுட பண்புகளைப் போசிக்கும் இளைய சமூகத்தை இதுவரையான கல்வி முறைமையை தோற்றுவிக்கத் தவறிவிட்டதோ என்ற ஐயப்பாடு மேல் எழுந்து நிற்கின்றது

மனிதப் பண்புகளைப் புதைத்து வெறும் பரீட்சை மையமாக மாணவர்கள், பெற்றோர்கள், கல்விசார் சமூகத்திடம் போட்டியை உருவாக்கிய கல்வி முறைமையால் இன்று எல்லோருமே வெறுப்படைந்துள்ள ஒரு சூழ்நிலையில் புதிய கல்வி மறுசீரமைப்பானது பல மாற்றங்களுக்கான தோற்றப்பாட்டை காட்டி நிற்கின்றது இம் மறுசீரமைப்பு நாட்டின் தேவை அறிந்து பாதிப்புகளின் எல்லையை தாண்டிய எதிர் விளைவுகளால் தோற்றம் பெற்றுள்ள உன்னதமான எண்ணக்கருத்துக்களைத் தாங்கிய மறு சீரமைப்பை வெற்றிகொள்ள அனைவரும் ஒன்றிணைவதே சாத்தியமானது

*திருமதி. மீனலோஜினி இதயசிவதாஸ்*
**SLP-1 (B.A,PGDE,Med,PGDEM)**
*அதிபர்,*
*கிளி /இந்துக்கல்லூரி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றுள்ள பாடசாலைகளும் இயக்க மறுக்கும் விசைகளும்

***கிளிநொச்சிக் கல்வி வலயப் பாடசாலைகளை முன்வைத்து சில குறிப்புகள்.***

பாடசாலை, தொழில் உலகத்திற்கான கல்வியை வழங்க வேண்டும் என 1945இல் இலவசக் கல்வியை அறிமுகப்படுத்திய கலாநிதி C.W.W கன்னங்கரா, அது குறித்து அதற்கான கலைத்திட்டத்தையும் நடைமுறைப்படுத்தினார். அதன் தொடர்ச்சியாக 1960 களுக்குப் பின் அரசாங்கம் பாடசாலைகள் முழுவதையும் பொறுப்பேற்ற பின்னர் பல கலைத்திட்ட மறுசீரமைப்புகளைக் கொண்டு இலங்கைக் கல்விப்படிகளை வளர்ச்சிப் பாதையில் கொண்டு வந்துள்ளது.

இலங்கைக்கு வரப்பிரசாதமாக அமைந்தது கன்னங்கரா அவர்களின் கல்வி சிந்தனைகள் அவரால் கொண்டு வரப்பட்ட திட்டங்கள் இன்றும் தழைக்கின்றன. இலங்கையின் கல்வியில் 1931 ஆம் ஆண்டு சின்ன மறுசீரமைப்பையும் 1939 களில் பெரிய மறுசீரமைப்பையும் அவர் கொண்டு வந்தார் என்பர். அவரது பிரதான இலக்கு அனைவருக்கும் கல்வி வாய்ப்பை அளிப்பதுவே. யார் ஆரம்பித்து வைத்த பயணமோ? இன்று இலங்கையில் 98 விதமானவர் எழுத்தறிவோடு இருக்கக் காரணமாகியுள்ளது. கல்வியை ஜனநாயகப் படுத்தலுக்கு உள்ளாக்கினர். அதன்படி,

- *அரசாங்கப் பாடசாலை முறைமை*
- *இலவசக் கல்வி*
- *இலவசச் சீருடை*
- *இலவச மதிய உணவு*
- *இலவசக் காலணி*

***அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை ஆயிரம் இடைநிலைப் பாடசாலையும் 5000 ஆரம்பப் பாடசாலை தரம் உயர்த்தலும்*** 1974 களில் அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்ட அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி முறை போன்றன. அதற்கு முன்னர் **கொழும்பு யாழ்ப்பாணமாகிய** வளமான பாடசாலையில் இருந்தே பல்கலைக்கழகம் நுழையும் வாய்ப்பு காணப்பட்டது. இத்தெரிவு 40 வீதத்தினருக்கே இப்போது வழங்கப்பட்டு, 55 சதவீதமானவர்கள் மாவட்ட அடிப்படையில் 05 வீதமான பின் தங்கிய மாவட்ட அடிப்படையிலும் வழங்கப்படுகிறது.

இலவசப் பாட புத்தகங்கள் போன்றனவும் வலுவாகப் பாடசாலைக் கல்வியை மக்களின் கரங்களுக்குக் கொண்டு வந்தது. ஏனெனில் ஆங்கிலேயர் காலத்தின் முற்பகுதியில் மேல் தட்டு வர்க்க மக்களுக்கே கல்வி பெறும்வாய்ப்புக் காணப்பட்டது. அதனை தகர்த்தவர் கன்னங்கரா எனும் தேசிய தலைவர் அவர்கள். இவை இவ்வாறு இருக்க, இன்று பாடசாலைகள் தொழில் வழங்கும் நிறுவனங்களாக மாறி வருகின்றன என்பது வேதனை அளிக்கின்றது.

இலங்கைக் கல்வி இன்று பின்வரும் 02 பிரதான கோட்பாடுகளில் இயங்குகிறது

***பாடசாலையில் பிள்ளைகள் பங்குபற்றலை அதிகரித்தல்***

***பாடசாலைக் கல்வியைப் பண்புத்தரம் மிக்கதாக்கல்***

இதில் முதலாவது சாத்தியப்படுத்த முடிந்தாலும் இரண்டாவது சாத்தியப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. அதற்குக் காரணம் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமற்று போகின்றமை. பாடசாலை என்பது கலைத்திட்டம், புறக்கலைத்திட்டம்,மறைக்கலைத்திட்டம் போன்ற அம்சங்களைக் கொண்டது.

உயர்தரமான பாடசாலைகள் என்று போற்றப்படுபவை நீண்ட வரன்முறையாக பெருமைமிகு மறைக்கலைத் திட்டத்தைக் கொண்டவை என்பதை கருத்து. அதனை ஏற்படுத்துவதற்கான உழைப்பு அதிபரிடம், ஆசிரியர்களிடம், பெற்றோர்களிடம், பிள்ளைகளிடம் காணப்பட்டது இது சகல தரப்பினரிடமும் காணப்பட வேண்டும். எனினும் இதில் ஆசிரியர்களிடம் இன்று இல்லாத போயிற்று. ஏனெனில், ஆசிரியத்துவத்தின் பண்புத்தரம் குறைந்து செல்வதைக் காணலாம். இப்போது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்களாகப் பாடசாலைகள் மாறி வருகின்றன என்பதுவே இதன் உள்ளொளி. மேலும், எமது சூழலில் அரசியல்வாதிகள், அதிகாரிகளின் அகவயம் காரணமாகவும் பிற்படுத்தப்பட்ட கிராமங்களில் கல்விக்கான வளப்பங்கீடு மிகவும் பாரபட்சமாகப் பகிரப்படுவதும் மிகவும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஜனநாயக அதிகாரங்கள் குறைக்கப்பட்ட சமூகக் குழுக்கள் வாழும் கிராமங்களில் பாடசாலைக்கான வளங்கள் மறைமுகமாகப் புறந்தள்ளப்பட்டு வளமான பாடசாலைகள் மேலும் வளங்களைப் பெருக்கிக் கொள்கின்றன. இன்று நல்ல விழுமியம் மிக்க சிறுவர்களுக்கான முன் உதாரணமாக ஆசிரியர்கள் இல்லாததால் சிறுவர்கள் அல்லது பிள்ளைகள் தடம் மாறி போகின்றார்கள்.

- கல்வித்தகைமை
- கற்பித்தல் ஆற்றல்
- கல்வி உளவியல்
- புத்தறிவுத் தேடல்
- வகுப்பறை முகமைத்துவம் தனது பாடசாலை முகாமைத் துவத்தில் உடன்பாடு தனது பாடசாலை மாணவர்களில் அக்கறை கலைத்திட்ட நெறியாள்கை
- சமூகத்தின் தேவைகள் மனப்பாங்குளுக்கு இசைவுபடல்
- புத்தாக்கச் சிந்தனைகள்
- பிள்ளைகளை வழிநடத்துதலும் கற்பித்தலே எனும் மனங்கொள்ளாமை

இவை, அருகே உள்ள ஆசிரியர்களால் பாடசாலைகள் அதன் இலக்குகளை அடைய முடியாது உள்ளன. பிள்ளைகளுக்கான உழைப்பை வழங்கும் பாடசாலை இல்லை என்றே கூறலாம் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பவர்கள் ஆசிரியர் என்றால் ஓட்டுநர் பயிற்சி வழங்குபவரும் ஆசிரியரே ஆசிரியர்களுக்கான மனப்பாங்கு விழுமியம் மற்றும் கற்பித்தல் முறைகள் மிகவும் தாழ் நிலையில் இருப்பதால் பிள்ளைகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் இதன் பலாபலனை இந்தச் சமூகம் காலக்கிரமத்தில் அனுபவிப்பது திண்ணம்.

**திரு. பெருமாள் கணேசன்**
**MED,PGDM, BED**
**DipTESL, DETE Trainedeng SLPS II**
**அதிபர் - கிளி/சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நன்றி நவிலல்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

என்பதே தமிழ்மொழி கூறும் செய்ந்நன்றியறிதல் பற்றிய முன்மொழிவாகும்.

இந்நூல் இன்று எம் கரங்களில் மலர்ந்திருக்க உதவி புரிந்தவர்கள் திரு ப.சசிகரன் (கனடா), திருமதி ரேவதி ஜெகதீஸ்வரன்(லண்டன்) திருமதி சபீதா சபாரட்ணம் (சுவீஸ்), S.நல்லதம்பி(கொழும்பு), திருமதிபாலரஞ்சினி சுகந்தன் (பிரான்ஸ்), திருமதி பத்மலோஜினி (ஆசிரியை, கிளிநொச்சி) அவர்களுக்கும் சரவை பார்த்துத் தந்துதவிய தமிழாசிரியர்களான திருமதி ச.யோதீஸ்வரன் திருமதி யூடி சண்முகநாதன் மற்றும் திருமதி வி.ஜீவரஞ்சினி அவர்களுக்கும், ஆக்கங்களைப் பெற்றுத்தர உதவிய ஆசிரியர் திரு ஈ. மயூரன் அவர்களுக்கும் மற்றும் சங்கர் படிப்பிடிப்பு உரிமையாளர் திரு சி.ஞானசேகரன் அவர்களுக்கும், அழகுற அச்சிட்டுதவிய வேழன் பதிப்பகத் தினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**- மலர்க்குழு**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாவும் வாழ்த்துப் பாமாலைகளும்
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜேமழன் பதிப்பகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org